T. 1294

MR. K. RAMASWAMY IYENGAR

AUTHOR OF TAMIL DRAMAS

"SAVITRI," "NALA," "KING LEAR," "BHARATHA,"
"PANDAVA VIJIAM"

1294

ஸ்ரீ

பரதன்

அல்லது

சகோதர வெற்றி.

க. ராமஸ்வாமி அய்யங்கார்

அவர்கள் இயற்றியது.

சென்னை.

1932.

All Rights Reserved.]

[விலை ரூ. 1

ஸ்ரீ

“ முன்னோர் மொழிப்பொருளே யன்றியவர் மொழியும்
பொன்னே போல் போற்றுவம். ” —நன்னூல்.

“ பேசிற்றே பேசலல்லால் பெருமையொன்
றுணரலாகாது ” —தொண்டரடிப்பொடியாழ்வார்.

பரதாய பரம் நமோஸ்து தஸ்மை
ப்ரதமோதாஹரணாய பக்திபாஜாம்
யதுபஜ்ஞம் அசேஷத: ப்ருதிவ்யாம்
ப்ரதிதோ ராகவ பாதுகா ப்ரபாவ:

—பாதுகாஸஹஸ்ரம்.

“நாடியபொருள் கைகூடு நன்மையும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலைநோக்கு
நீடியவரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை
சூடியசிலை யிராமன்றோள் வலி கூறுவோர்க்கே” —கம்பர்.

DEDICATED

To

LORD SRI RAMA.

FOREWORD

I feel honoured and delighted to be allowed to link my name with that of the author in regard to this play and to introduce it to the public at large and especially to the youth of our land, who are the future custodians of our national culture and to their teachers, who are the present custodians of our youth. The author has already won his spurs in the arena of literature. His "Nala or the Triumph of Karma" has had the honour of a fitting foreword from the pen of one of the most distinguished sons of India, the Hon'ble Sir C. P. Ramaswami Iyer, who is, as eminent a man of letters as he is a statesman and whose many-sided brilliance has added gaiety and charm and sweetness to life, besides enabling Indian freedom to "broaden slowly down from precedent to precedent" and to go hand in hand with Indian unity and Indian prosperity. Another eminent son of India, Mr. T. C. Srinivasa Iyengar, has added to the charm and value of that drama by his Tamil Foreword, which gives us a glimpse of his noble patriotism and high culture and reveals the excellences of the play.

The heroic life of Sri Rama and the many marvellous heroic episodes in the career of divinity, self-veiled in a form of supernal loveliness and glory, have been the theme of poems and plays, whose name is legion, ever since the composition of the immortal epic which Valmiki wrote ages ago, under the inspiration of the divine sage Narada and with the blessings of Brahma and Sarasvathi and had it sung by the sweet siren voices of Rama's sons in Rama's own presence. No other hero in the world had such a poet and no other poet in the world had such a hero. No other hero had such sons and no other teacher had such disciples. No other sons or disciples ever gave such a performance before their elders. No other poet had the privilege of getting his composition approved by his own hero, and no other hero had the joy of hearing his glory praised before him by such a poet and sung by his own sons, who were the disciples of the poet, who brought them to the father who was waiting for them with eager and expectant love. Such a combination never existed before and may never occur hereafter.

Another rare, nay unique, characteristic of the Ramayana is the marvellous story of its birth. Perfection born of poesy, poesy born of pity, pity born of purity—such is the haunting suggestiveness of the lesson of the story. Valmiki himself says and Kalidasa says after him, that **Soka** became **Sloka**. Dryden says that "pity melts the mind to love". Valmiki takes us to a higher peak and says that pity leads to poesy and through poesy to God who is beauty and love and bliss.

A very great poet and dramatist viz. Jayadeva says, that poets and dramatists are not to blame for writing poems and plays and composing hymns and songs about the divine life of Rama, who was God incarnate as man. He says that, that is the defect of the unique quality of Rama, as the infinite treasure of all auspicious qualities. Why did Rama monopolise all the good qualities of all persons at all times and in all worlds? Hence he must submit to be sung by all lips, whether touched by the heavenly fire or not. In Valmiki's Ramayana, the oldest and noblest and sweetest of poets records a prophecy and a blessing by the Creator himself that the pure and sweet and holy work will endure as long as the hills shall stand and the rivers shall flow. Has not the march of centuries proved the truth of the prophecy?

In the Ramayana, we meet the fusion point where the divine meets the human, so well and so completely, that it is difficult to say, if it is the Humanisation of God or the Divinisation of man. Jayadeva asks, whose mind is not charmed and enraptured by the moon or by Ramachandra or by the shy, sweet, dark, sidelong glance of maiden's eyes—each of which is allied to the "Neelotpala" flower, by affinity or by similarity. When the beauty of the full-moon or the loveliness of a young and charming maiden ceases to enthral us, the Ramayana may lose its power of holding us spell-bound but not till then.

Later poets and playwrights have always claimed and allowed themselves different degrees of freedom in adding to or subtracting from or modifying the incidents and the dialogues in the Ramayana. The poets have been more faithful than the playwrights, as might well be expected, because poetry deals more with the inner world of feeling, while drama deals more with the outer world of action, and because, the essential feelings of the human heart are above time and place and circumstance, whereas the world of action is more varied from age to age and from clime, to clime, though, even in it, there is a large and ideal element of universality.

It has been said well in a sanskrit stanza that, in the world of poetic or dramatic creation, the poet or the dramatist is the creator and can fashion his ideal as he likes. The later European poets and playwrights have been interpreting and reinterpreting classic legends in an ever new and newly attractive manner. Tennyson interpreted the Arthurian cycle anew. But those stories belong to a dead culture and are lovely frames into which a new breath can impart a new life. But the Ramayana and the Mahabharata and the Bhagavatha are the cherished possessions of a living and vital culture and are the bone of our bone and flesh of our flesh. They are "more real than

living man—Nurslings of Immortality". It is therefore clear that we can give them a new dress or a new decoration, the glory of gold brocade or gemlit jewellery, but should not mar its body or its soul. Hence those later poets and playwrights alone have been received into the heart of humanity and honoured there, who have brought a new wealth of imagery and sentiment, while being loyal to the story and the characterisation of Valmiki, or whose departures from plot and incident as revealed by him, have only added a new halo around the divine figures, while preserving the supernal light that plays lambent about the poem which was composed by the poets' poet, Valmiki. Of such poets, Kambar and Tulsidas stand apart. Of such playwrights Bhavabhuthi stands without a peer. Kambar says in a famous stanza,

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கு
நீடிய அரக்கர்சேனை நீறுபட்டழிய வாகை
சூடிய சிலை யிராமன் றோள்வலி கூறுவோர்க்கே.

[To those who praise the prowess of Rama who bears the bow which is bright with the garland of Victory after reducing to ashes the Rakshasa arms, will get the satisfaction of all desires, will attain wisdom and fame and will have the benignant look and grace of Lakshmi who leads all eligible souls to paradise.]

Just as Rama,-Sita,-Lakshmana form together one of the pivots of the divine story, even so do Bharatha-Satrughna form the other pivot As Sri Vedanta Desika says in his famous **Paduka Sahasram**, Bharatha is the peerless example of supreme devotion. Never was there a brother like him; never was there such a friend; never was there such an administrator; never was there such an ascetic. The author, Mr. Ramaswami Iyengar, has brought out all the great and unique qualities of his hero in an admirable manner in the play which is as fit for study in colleges as it is for acting on the stage.

The author has struck out some new paths in his work. We go to a play not to hear an echo, but to hear a voice. The voice may come as the outpouring of a heart, which is enkindled at the shrine of a holier heart but it must be an authentic voice.

The author's wide and deep knowledge of the Ramayana of Valmiki and of Kambar's classic work and of other Tamil classics is a remarkable feature of the play. It is only a mind saturated with the splendid story and the sweet sentiments of such works that could move with such an excellent combination of subtlety and spontaneity of style. A style too subtle and

overweighted with conceits is one of the monstrosities of literature. It is like a **Kabandha**--ugly, insatiable and fatal to life. On the other hand, a too transparent and shallow presentation which denounces depth because of its want of it and which misses the soul—nay the soul of the soul—of the ever youthful maiden charms of the body of the Goddess of poesy, and which, in attempting to paint the lotus, shuts up its perfume altogether, is no doubt more charming than a style overloaded with tawdry conceits but in, Rabindranath Tagore's words, forgets "the Goddess within the golden image''. The author has tried to avoid both these frequent faults of style. In Indian poetry, suggestiveness (Vyangya) is said to be the soul of poesy (Vyangyam Kavyasya Jeevitham). **Rasadhwani** (suggested emotional sweetness) is described as the supreme joy of life and as being cognate to the bliss of spiritual realisation (Brahmananda Sahodaraha). The external aids of alliteration and resonance and rhyme and play on words and figures of speech and fine qualities of style are of value only as heightening the charm of the Rasadhwani of the poem or the play.

The scenes added by the author to the original story and the dialogues and sentiments subserve the abovesaid main purpose of the work. The play opens with a dialogue between Bharatha and his wife Mandavi. It contains an attractive idea based on an attractive play on words—an idea which brings together the two sweetest things in life viz., a maiden blossom and a blossomed maiden.

பரதன்:—நறுமணமும் நிறைகுணமும் நல்லழகும் இன்சுவையும் நன்கமைந்தது அந்தமில் பேரின்பம் அளிக்கவல்லது.

மாண்டவி:—நாற்குணமும் நன்கமைந்ததோ? அங்ஙனமாயின் உமது மனம் கவருவது நன் மணமலரே.

The Rasadhwani is in the word 'நன்மணமலரே'. But though it is the soul of the idea, the author takes us to the oversoul of the idea, the perfect, peerless, fadeless, quintessential beauty of which even a maiden and a flower are only the best and brightest evanescent manifestations.

பரதன்:—அம் மதிவதனன் பதமலரே அந்தமில் பேரின்பம் அடைவிப்பது. மலராது குவியாது மணம் வீசும் தெய்வமலரே என் முடியினில் அணியுமலர்.

In the scene describing the soulful talk between Sri Rama and Sita on the Chitrakuta hill, the author reaches an even higher altitude and amplitude of feeling and style. Sita describes her lord thus "கண்ணும் கருத்தும் கவருங் கருமுகிலே! காவலனாய் கணவனுமாய் கலந்து நின்ற காரணனே".

In the scenes describing Guha and his simple and faithful followers, the author gives us the necessary relief from the tension of high-strung feeling in the play. He takes the story of Bharatha to the scene of the coronation of Rama's sandals and also beyond up to the coronation of Sri Rama Himself. I cannot conclude this Foreword better than with the words of Bharatha to Sri Rama :—

அண்ணலே! மண்ணினை நாடிடேன். உன்னையே நாயேனேன்.
அடிமையின் உடல் பொருள் ஆவியனைத்தும் உனதுடைமையே.

(Sd.) K. S. RAMASAWMY SASTRIAR, B.A., B.L.
District Judge, Cuddappah.

OPINIONS.

I had the privilege of reading an advance copy of the play "Bharatha" in Tamil prose. It was a pleasant and agreeable surprise to me to read it. I own I did not expect to find in a modern tamil play in prose, such a wealth of fine sentiments couched in easy but perfect and elegant language, as the author of this drama gives proof of. The theme comprises of some soul—stirring incidents from the epic of the greatest poet of classical times. But they lack none of their pristine beauties in their new setting in this play; and what is more, they are woven with such a real art as makes the book a fine new fabric, at once artistic and organic in architectonic design, and elegant and pleasing in execution and finish.

The author presents the old story in new plots; the old characters are made to exhibit some of their native souls in poses and situations so new and yet so natural, as to illumine and discover depths and sublimities of their real human nature hitherto unsuspected but always abiding latently in them. The author's skill in creating incidents and situations to fall into line with the humour of the characters to develop the plot is as native and superb, as some of the very new and refined sentiments and concepts he is putting into their mouths, are daring and original.

The art with which he brings out naively the hidden springs of action that swayed Kaikeyi and Koony in shaping the tragic castastrophe that sent Rama straight from his father's throne to wander in the wilderness, at once reveals a realm of human psychology and a region of aesthetic, ethical and dramatic grandeur and beauty not known or suspected even by poets who handled the themes from Ramayana, times without number in several works in the past. The author emphatically reaffirms the unparalleled fraternal adoration and selfless sublimity of Bharatha's soul, while, at the same time, he, artfully and artistically, discovers the purity of Kaikeyi's motives and thereby cleans her fine character hitherto maligned by ignorant and uninquiring philistinism in the world of Indian literature.

The author deserves to be complimented for the fine, easy, chaste and faultless literary prose which he commands and sustains throughout the work. He appears a bit drawing to punning and play on words; but yet he does not anywhere allow this love of his to detract from the dignity of a literary work of art. On the other hand, in many a place his play on words adds grace and affords fine relief to his easy, yet literary diction. It

is very pleasant to find a busy English educated Government official to devote his rare leisure to cultivate a taste for Tamil studies and to find time to endeavour to reform and refine the Tamil stage by producing plays of his own to educate the modern student. It is an endeavour that well deserves all encouragement at the hands of the University authorities who may care to foster native talents, and to inspire and draw out real merit in sons of Tamilaham and to enrich modern Tamil literature in our land by works like this drama.

(Sd.) S. S. BHARATHI,
Advocate, Pasumalai.

I have read with great interest the latest drama 'Bharatha', brought out by my esteemed friend, Mr. Ramaswami Iyengar. In the field of histrionic art, Mr. Ramaswami Iyengar holds an honoured place and not a little of the success that has attended The Madras Officials' Association is due to his personality and impetus. Of the many characters in Sri Ramayana, none is perhaps, more difficult to bring out in the field of drama than 'Bharatha', as this character depends for its success on the stage, on a keen insight into human psychology, and a well-proportioned expression of pure histrionic action, practically unaided by the glamour of marching events or even of scenic demonstration. Written in simple, learned and chaste Tamil, the rich diction of the author has been embroidered by very apt quotations from Sri Kambar, Sri Ramalingaswamy's Tiruvarutpa, Sri Thayumanavar, from the Thevaram and from the Prabhandhams amongst others. The background of place and time could not be more appropriately chosen. The work lies natural without descending to the commonplace; exhibits learning without pedantry, and has successfully woven the psychology of the Ideal Brother into action, without being involved in laboured or wearying pronouncements. I congratulate the author on the success of his work and I am sure that the educative value of this work will be duly appreciated by all concerned. The author deserves every encouragement to place this work before the reading public.

(Sd.) T. M. KRISHNASWAMY IYER.
Advocate, Mylapore.

Of all the characters in the immortal epic of the Ramayana none is grander than BHARATHA, who is the embodiment of duty, austerity and filial affection. Any attempt therefore, at dramatizing the theme of Bharatha, necessarily involves a close and critical study and an intelligent appreciation of the epic

masterpieces both in Samskrit and Tamil, besides a high level of dramatic conception and facile literary reproduction. In this, his latest effort, Mr. Ramaswami Ayyangar has brought to bear, in addition to his scholarship and wide range of reading, his undoubted histrionic talents. Bharatha's stern refusal to accept the sovereignty of the kingdom of Ayodhya, which a fond mother's insistence of personal right secured for him, against the will of the people, his passionate importunity to Rama to return home and assume the sovereignty of the state, his enforced submission to the will of Rama and the consequent acceptance of the duty of administering the kingdom for the benefit of the people, his stewardship of the vast state as a trustee for Rama, and his unceasing and austere vigil during the 14 long years of Rama's absence have all of them been brought out forcefully by the author in this work.

I am glad to learn that the play has also been successfully staged. The high ideals portrayed in this work in the delineation of the characters and the literary style adopted, render the book eminently suitable for being prescribed as a text-book in schools and colleges and for being studied for its literary merit by lovers of literature.

(Sd.) T. C. SRINIVASA IYENGAR, M.L.C.
Advocate, Madura.

I have much pleasure in stating my opinion that Mr. Ramaswami Iyengar's new Tamil Drama, "**Bharata**" is one of high literary value and dramatic excellence. Its style of composition is learned and lucid, and as an aesthetic performance it has the great merit of combining artistic excellence with the inculcation of noble ethical lessons. I am also glad to find that it has one important and striking feature which is original to it, and gives thereby a unique importance,—viz., that it places the character of Queen Kaikeyi in a new and favourable light.—and this, in my view, ought to secure for it a favourable reception from the public. I wish the gifted author every success.

(Sd.) K. SUNDARARAMA IYER,
Retired Professor of the Kumbakonam, Presidency,
and Rajahmundry College,
and sometime Tutor to the late Kumara
Martanda Varma, First Prince of Travancore.

I have great pleasure in testifying to the uniform excellence of the Production. Bharatha, the Ideal Brother, is well depicted. The chief characteristics of the Drama which in my opinion deserves mention, is the admirable way in which the language is graded so as to suit the different characters in the play. The book is well adapted for use by College Students as a Text-book.

(Sd) K. S. PATRACHARI,
Lecturer, Kumbakonam College.

மதிப்புரை.

‘பரதன்’ என்னும் பெயரிய புதியதொரு நாடகநூலைப் படித்து மகிழ்ந்தேன். மூவகைப் பாகுபாடுற்ற நம்தமிழ் மொழியில் சிறப்பாக நாடகத்தமிழிலேயே நூல்கள் எழுத எனது நண்பர் இராமசாமி ஐயங்கார் முன் வந்துள்ளது சாலவும் பொருத்தமுடையதே. இயற்றமிழ் இசைத்தமிழ்களினடியாகப் பிறந்த நாடகத்தமிழ் அவ்விரண்டிற்குமில்லாத பல சிறப்பியல்புகளைக்கொண்டு விளங்குவதொன்று அன்றோ? உலகத்தினியல்பினை உள்ளதை யுள்ளவாறே புனைந்து காட்டுவதோடன்றி, கேள்வியின்பத்தோடு காட்சியின்பத்தையும் உடன் பயந்து, நூலெடுத்துப் படிக்க அவகாசமில்லாதோர்க்கும், கல்லாத ஏனையோர்க்கும் நல்லறிவு புகட்டும் நாடகத்தமிழை விரும்பாதார் யார்?

இத்தகைய நாடகத்தமிழ் நூல்களை இயற்ற வல்ல ஆசிரியர் மேற் கூறிய துறைகளில் நன்கு பயின்றிருத்தல் இன்றியமையாதது. அவ்விலக்கணங்கள் இவ்வாசிரியரிடம் நன்கமைந்திருத்தல் இந்நூலை ஒரு முறை மேலெழுந்தவாரியாய்ப் படிப்போரும் நன்குணர்வர். நாடகம் எழுதுவோன் தான் ஒரு நல்ல நடிகனுயிருப்பின், அவன் நூல் மிகவும் சிறக்கும். சென்னை உத்தியோகஸ்தர் கூட்டங்களின் (The Madras Secretariat Party, The Government Officials Party, Madras, The Madras Officials, Association, Triplicane.) நாடகங்களில் பல பாத்திரங்களாக வந்து நடித்து இசை, அவிநயம், நாடக ஆசிரியனது கருத்துக்களையும், எண்ணங்களையும் உள்ளவாறே வேறுபாடின்றி நடித்துக்காட்டல் முதலிய நாடகக்கலையின் பல நுணுக்கங்களையும் விளக்கிக் காட்டி இவர் காண்போரை மகிழ்விப்பதை எல்லோரும் அறிவர். இவருடைய இயற்றமிழ்நூல் ஆராய்ச்சியை, அவர் ஏற்ற இடங்களில் மிகவும் பொருத்தமான பாடல்களைச் சிறந்த இலக்கியங்களிலிருந்தும், இராமாயணம், திருக்

குறள் முதலிய நூல்களின் கருத்தையும் சொற்களையும் ஆங்காங்கே அமைத்திருப்பதிலிருந்தும் பரக்கக் காணலாம்.

நாடகநூல் சிறப்பதற்கு எடுத்துக் கொண்ட பொருளும் சிறப்புடையதாய் கேட்போர் காண்போரின் உள்ளங்களைப் பிணிக்கும் தன்மை வாய்ந்ததாய் இருக்கவேண்டும். இவர் எடுத்துக்கொண்ட பொருளோ கேட்போர் மனதை ஈர்க்கும் தன்மைத்தாகிய பரதனது குண மேன்மையை விளக்கும் இராமாயணப் பகுதியாகும். உடன் பிறந்தோர் ஒற்றுமை, உண்மை நட்பின் இலக்கணம், ஞான ஆசிரியரின் இலக்கணம், கடவுளின் தன்மை, கற்புடை மனைவியின் ஒழுக்கம், தாயினது அன்பு, அரசனது குடிகளின் மனநிலை முதலிய பல சீரிய பண்புகள் வெளிப்படக் கூடிய இப்பகுதியை, இராமசாமி ஐயங்கார் நாடகப் படுத்தியது அவர் திறமையை விளக்குகின்றது.

நாடகத்தினின்றும் பிரிக்கமுடியாத உறுப்புக்களாகிய நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை முதலிய மெய்ப்பாடுகளை இயற்கைக்கு விரோதமின்றி, ஏற்ற இடங்களில், உள்ளபடியே நடித்துக்காட்டக் கூடிய தன்மையில் பொருத்தமான மொழியில் அமைத்திருப்பது இந்நூலின் பல அழகுகளிலும் சிறந்ததாகும். இருபொருள் படும்படி செம்மொழிச் சிலேடையாய்ச் சொற்றொடர்களை அமைத்தல், எதுகை, மோனைத்தொடைகளை அமைத்தல் முதலியன அளவுக்கும் விஞ்சியவோ என்று கருதும்படி, இவ்வாசிரியரால் அமைக்கப்பட்டிருப்பதும் பாராட்டற் பாலதே. நூலின்நடை கற்றோர்க்குக் களிபேருவகை பயப்பதாய் அமைந்திருக்கின்றது. ஆனால் இன்னும் கொஞ்சம் ஆற்றொழுக்காய்ச் சென்றிருப்பின் மற்றோரும் எளிதில் உணரவல்லதாயிருக்கும். பல இடங்களின் பாத்திரங்களின் வாயிலாக பல தமிழ்ப் பழமொழிகளை அமைத்திருப்பது நோக்கத்தகுந்தது.

இந்நூலைப் படிப்பவர் யாரும், இதுவரையில் எல்லோரும் வெளிப்படையாய் உணராத, அல்லது உணர்ந்தும் உணராதார் போலிருக்கும் உண்மையொன்றை நாடக பாத்திரங்களின் உரையாடல் மூலமாக வெளிப்படுத்தியிருப்பதை உள்ளத்தமைக்காமற் போகார். அதாவது, கைகேயியின் குணமேன்மையும் அவளது மன நிறைவுமே! என்ன எண்ணங்களினால் கைகேயியும் மந்தரையும் தூண்டப்பட்டு இராமனைக் காட்டிற்கனுப்பினர் என்பதை அவர் விளக்கிக் காட்டியிருப்பது மக்களின் மனநிலையை உணர்வதிலும், உளநூற்கலையிலும் வல்லவர் என்பதைக் காட்டுகின்றது. "தசரதனது குறையும் கைகேயியின் நிறையும்"

என்ற ஆராய்ச்சி நூலில் தமிழ்க்கடலின் எல்லை கண்டவரும், செந்தமிழ் ஆராய்ச்சி வல்லுநருமான எனது நண்பர் வழக்கறிஞர் உயர்திரு சோமசுந்தர பாரதியார் M. A. M. L. கைகேயியின் மாசற்ற குணத்தைத் தமிழ் உலகினுக்கு முதல் முதல் எடுத்துக்காட்டி மகிழ்வித்ததைத் தமிழுலகம் நன்கறியும். அக்கருத்தினை நாடக மூலமாக வெளிப்படுத்தும் பெருமை இராமசாமி ஐயங்காருக்குரித்தாயிற்று. பரதனது குணமேன்மையும் வெளிப்படுவது தேற்றம்.

எனவே, இத்தகைய அழகுகள் எல்லாம் ஒருங்கே அமைந்துள்ள இந்நூலைத் தமிழுலகம் மகிழ்வுடன் வரவேற்குமென்று நினைக்கின்றேன். அதை ஆதரிப்பதே இவ்வாசிரியருக்குச் செய்த கைம்மாறாகும்.

(Sd) S. Arumuga Mudaliar B. A., L. T.,
Tamil Lecturer, Presidency College, Madras.

'பரதன்' என்னும் நாடகத்தைப் பார்வையிட்டேன். அது செந்தமிழில் அழகிய நடையோடு விளங்குகிறது. கதாசந்தர்ப்பங்கள் ருசிகரமாயமைக்கப்பட்டுக் கதையை மிகவுமினிமைப்படுத்துகின்றன. சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், முதலிய குணங்கள் பொருந்தியுள. சிலவிடங்களில் வாக்கியங்கள் பிராசங்கள் பொருந்திப் படிப்பவர்க்குக் கிளர்ச்சியை உண்டுபண்ணுகின்றன. நீதிகளும் உயர்ந்த நூற்கருத்துக்களும் பொருந்தி, விளங்கும்படி சாதுர்யமா யெழுதப்பட்டிருப்பதால் படிப்பவர்கள் பயனுறுவது திண்ணம். ஏற்ற பெற்றி நாடோடியான வடமொழிப் பதங்களமைக்கப் பெற்றிருப்பது தமிழ் நடைக்கு அழகையே கொடுக்கிறது. திவ்யப்ரபந்தம், திருவாசகம், ராமாயணம், சூளாமணி, தேசிகப்பிரபந்தம், அஷ்டப்பிரபந்தம் திருவிசைப்பா, தாயுமானவர் முதலான நூல்களிலிருந்து பொருத்தமானவிடங்களில் உதாரணம் கொடுக்கப்பட்டும், திரிசொல் சிலேடை முதலியவை (குறிப்புரைகளுடன்) தகுந்தபடி அமைக்கப்பட்டும் விளங்குவதால், இதை இன்டர்மெடியட் முதலானவற்றிற்குப் பாடமாக வைத்தால், மாணுக்கர்கள் பாஷா ஞானத்திலும் நன்னடக்கையிலும் தேர்ச்சியடைவார்களென்பதில்லையமில்லை.

(Sd) வித்வான் எ. எம். சடகோப ராமானுஜாசார்யர்,

லெக்சரர், கும்பகோணம் காலேஜ்.

"பரதன்" எனப் பெயர்கொண்ட நாடகத்தின் பிரதியொன்று கிடைக்கப்பெற்றுப் படித்து மகிழ்ந்தேன். இனிமையும் உருக்கமும் வாய்ந்த பரதாழ்வான் சரிதங்களை நாடகப் போக்குக்கேற்ப் இல்லது புணர்த்துப் படைக்கப்பட்டது இந்நூல். "தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும் பள்ளமெனுந் தகையா"னுகிய அப்பரத நம்பியின் உத்தம குணங்களெல்லாம் ஒருமுகப்படுத்தி இந்நூலுள் விளக்கப்பட்டுள்ளன. இதன் வசன நடை உயர்ந்த போக்குடையதாகும். இந்நூலுள் ஆன்றோர் செய்யுட்களும், தொடர்களும் ஆங்காங்கு ஏற்றபடி அமையப்பெற்றும் உட்பொருள் பொதியப் பெற்றும் உள்ளன. அருந் தொடர்களையும், தொனிப் பொருள்களையும் கீழ்க் குறிப்புக்களில் இந்நூலாசிரியர் விளக்கி யிருத்தலால், தனித்துப் படிப்போர்க்கும் ஆசிரியரின் உட்கிடைகள் நன்கு விளங்கக் கூடியனவேயாம். இவற்றால், படிகொண்ட கீர்த்தி இராமாயணமெனும் பத்தி வெள்ளத்தில் மூழ்கிப் பலரும் ஆனந்திப்பதற்கு இந்நூல் ஓர் அழகிய துறையென்றே நாம் கூறத் தட்டில்லை. வட மொழி, தென் மொழிகளிலும், சம்பிரதாய கிரந்தங்களிலும், லோக தர்மங்களிலும், தாம் அனுபவித்தவற்றைத் தாமின்புறுவதுலகின்புறும்படி இந்நூலால் வெளிப்படுத்தியுதவிய ஐயங்காரவர்களது அரிய செயலைத் தமிழ் நாட்டார் பெரிதும் பாராட்டுவார்களென்றே நம்புகின்றேன்.

(Sd.) மு. இராகவய்யங்கார்.
திருவல்லிக்கேணி.

PREFACE.

"The theatre in proper hands might certainly be made the school of morality". (Sheridan.)

A renaissance has begun in the conception of drama as an art. The increased output of dramatic literature and the inclusion of the drama in the curricula of our educational institutions indicate the growing interest of the public. Drama can be a power for good or evil; it is well that it shall be a power for good.

The best theme for such an aim would naturally be the treatment of Truth. As the best and Saint-like son of India has declared, God is Truth and Truth is God. The great Epic, Ramayana, that stupendous outpouring of an Immortal Genius, whose heart pulsated with the divine spark of universal love and whose soul, at all times, submerged itself into the spiritual essence of Godhead, is the best evidence of the triumph of Truth. Even in an epic, where love of brother is the central idea, there stands out boldly, the captivating figure of Bharatha, who has rightly been called the Ideal Brother. His unselfish and unfathomable love and reverence for his brother serve as a beacon light for suffering humanity to follow. His ready renunciation of all kingly pleasures and powers and his complete absorption in the ocean of love for his brother substantiate beyond doubt the divine Principle of Service. Such a beautiful figure compels dramatisation so that the idea of a truly fraternal love may be popularised. Filial love and obedience have nowhere been so thoroughly exemplified as in Rama, who richly deserves the title of the Ideal Son, by which he is known to posterity. Sita, as conceived by the giant intellect of Valmiki has become a classic as idealised womanhood.

An Epic, so brimful of dramatic appeal, powerful characterisation, supreme love, stern morals, and complete self-effacement and self renunciation, should be made available to all in an at-

tractive form viz., Drama. Thus influenced, I took up "Bharatha" and have endeavoured to make it of some literary worth and at the same time, easily actable on the stage, and I may add that it has been staged with success.

I may add that I shall be happy to render all possible assistance to amateur dramatic institutions which may take this play for stage depiction, for which my previous written permision is always necessary. I shall feel highly obliged for any improvements or suggestions offered.

I take this opportunity to place on record my thanks, to my learned friends, Messers. T. S. Paramasiwam Pillai, author of Thirukkural Saram and D. N. Ramakrishna Iyyangar for their kind scrutiny of the manuscript.

Madras,
11-5-1932.

K. RAMASWAMI IYENGAR,
2, Arumugam Chetty St., Triplicane.

நாடக பாத்திரங்கள்

இராமன் பரதன் இலக்குமணன் சத்துருக்கன்	தயரதமன்னன் மைந்தர்.
வசிட்டர்	ஞானசிரியர்.
சுமந்திரர்	அமைச்சர்.
ஜாபாலி	ஓர் இருடி.
குகன்	வேடுவர் தலைவன்; நாவாயன்.
அநுமன்	வானர வீரன்.
வீடணன்	இலங்கை மன்னன்.
வாமனன் கேசவன் சீதரன் தாமோதரன்	நகரவாசிகள்.
சேங்கன் கோங்கன் சப்பாணி முத்தன்	வேடுவர்.
கோசலை கைகேயி சுமித்திரை	தயரதன் மனைவியர்.
சானகி	இராமன் மனைவி.
மாண்டவி	பரதன் மனைவி.
மந்தரை	கைகேயியின் தாதி.

தூதர், மற்றும் வானர வீரரும், நகரவாசிகளும்.

ஸ்ரீ

பரதன்

அங்கம் 1

களம் 1

இடம்—கிரிவ்ரஜபுரத்தில் ஒரு பூந்தோட்டம்.

பாத்திரங்கள்:—பரதனும் அவன் மனைவி மாண்டவியும்.

மாண்:—"தண்டலை மயில்களாட தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவினேங்க குவளை கண் விழித்து நோக்க
தெண்டிரை எழினிகாட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ." —கம்பர்

கதிரொளி மணியே! இவ்வெழிலுறு பூம்பொழில் அழகினைக் கண்டு உமதுளம் மகிழ்வினை யடைகின்றதோ?

பரத:—திங்களினொளியே! புரந்தரன் அமரும் சிறந்த சோலையினும் சிரியதேயாயினும் என்னை மகிழ்விக்கும் வகை இதற்கிலது.

மாண்:—உமதுளத்துறை [1]மறைபொருளெதுவோ? இக் [2]கொடியுறு நறுமண மலரோ? அருந்திடுகனியோ?

பரத:—நறுமணமும், [3]நிறை குணமும், நல்லழகும், இன்சுவையும் நன்கமைந்தது அந்தமில் பேரின்பம் அளிக்க வல்லது.

மாண்:—நாற்குணமும் நன்கமைந்ததோ? அங்ஙனமாயின் உமது மனங்கவருவது நன் [4]மணமலரே.

[மலர் கொய்துவரச்செல்கிறாள்.]

---

(1) மறை பொருள்—மறைந்த பொருள்; மறைதந்த பொருள்.
(2) கொடி—பூங்கொடி; பூங்கொடிபோல்வளாகிய பெண்.
(3) நிறை—நிறைந்த; கற்பு.
(4) மணமலர்—வாசனையுள்ள புஷ்பம்; மணம் செய்து கொண்ட மங்கை.

பரத:—(தனக்குள்) ஆசா பாசம் அறுக்கும் வாசயாமலரே யான் பூசைக்குகந்ததும் சிரசுக்கிசைந்ததும். அப்பொன் மலரை இம்மென்மலர் உணருமோ ?

மாண்:—(மலருடன் வந்து) இப்போது போதுமோ? மற்றென்று இப் [1]போது வேண்டுமோ?

[கொணர்ந்த மலரையளிக்கிறாள்.]

பரத:—(முகர்ந்து) மனோரஞ்சிதமே! மணந்த பூவிருக்க மற்றோர் பூவை முகர்வதேன் ?

[தன் சிரத்தினில் தரித்திட முயல]

மாண்:—(பரதன் கையைப் பிடித்துத்தடுத்து) ஆ! யான்செய நினைந்தீர்? மணந்த [2]பூவையும் சென்னியிற் சூடவா ?

பரத:—ஏன் ?

மாண்:—மும்மூர்த்தியரும் தத்தம் பூவைத் தரிக்குமிடம் அறியாது தரித்தடைந்த பயன் பெரிதே.

பரத:—மடமயிலே! ஆக்குமறிவும், அளிக்குமருளும், அழிக்குந் திறனும் வாய்க்கப் பெற்றனர் அம்மூவர். முதல்வருமாயினர். அறிந்திலையோ ?

மாண்:—அறிவேன். நாவினிலமைத்த நான்முகக்கடவுளோ கோயிலை யிழந்து காவலில் உழன்றனன். உரத்தினில் தரித்த கருமுகில் வண்ணனோ, உரகப்பள்ளி யுணர்வுற்றெழுந்திலன். உடலினிற் பிணித்த சடைமுடி யண்ணலோ, சுடலையைக் காக்கும் கடையனே யாயினன். சிரத்தினில் தரித்து நீர் என்பெற நினைத்தீர் ? முடியினிற் சூடுபவர் படும் பாடறிவேன். ஆதலின் நீர் முடிய நான் உடன் படேன்.

பரத:—பெண்டிர் தம்!பொறுமை பெரிதே.

மாண்:—புருடனிலடங்காத பூவைப் போற்றுவதா ?

[பூவை வீழ்த்திட]

---

(1) போது—காலம்; மலர்; மலர்போன்ற மடந்தை.

(2) பூவை—மலரை; பெண்ணை.

பாத:—பெண்ணே! என் பதத்தினில் இதை வீழ்த்தினையே! இனி எப்படி யான் ஏற்பது?

மாண்:—ஏற்பவளுக்களிப்பது. உமது பதமலர் தீண்டிய இம்மண மலரை என் முடியினிற் சூடுவேன்.

[தன் முடியினில் அலங்கரித்துக் கொள்ள]

பரத:—தன்னலம் கருதும் தன்மையரே மங்கையர்.

மாண்:—நன்னலம் கருதியே சென்னியிற் சூடினேன். (சூடிய பூவை எடுத்து) இப்பூவையே கோரியது உண்மையேயா யின் தந்திடத் தடையிலை.

[கொடுக்கிறாள். பரதன் வாங்கி முகர்கிறான்.]

பரத:—பூங்கொடியே! நின் பூங்குழலிற் சூடிக்கொடுத்த பின்னரே இம்மணமலர் முன்னினும் பன்மடங்கு மணமடைந்துயர்ந்தது.

மாண்:—அம்மலரா மலரால் மனமகிழ்ந்தீரே!

பரத:—இதுவா என்னை மகிழ்விக்க வல்லது? இயலாதிதற்கு. நின் முடியினிற் சூடியே மணம்பெறச் செய்குவாய்.

[மனைவியின் முடியினில் தன் கரத்தால் அலங்கரிக்க, மாண்டவியும் களி யுற்று நகையுற]

நீ [1]நகையுறுவதேன்?

மாண்:—பகைவரை வெல்லும் [2]உமதுவகையினைக்காணே.

பரத:—மெல்லியளே! வெல்லரிய வீரனல்லவோ யான்?

மாண்:—வீரரேயாயினும் மாரனுக்கஞ்சுவர்.

பரத:—அஞ்சுகமே! அவ்வுருவிலிக் கிளைத்தவனெனவா நினைத் தனை என்னை?

மாண்:—அளித்த மலர் அகற்றியது அம்மலர்வாளிக் கஞ்சி யன்றோ?

---

(1) நகை—சிரிப்பு; அழகு.

(2) உமது வகை—உமது உவகை; உமது திறம்.

பரத:—என் நெஞ்சம் அறிந்திலே. மணமுறு மலரம்பை இன் புற அளித்தனன். சிலையொத்த வளைநுதலும், கணை யொத்த கருவிழியும், பெற்று [1]குணமற்ற நீ ஈரம்பு பெற்று என்பெற்ருய்? நாணற்ற நங்காய்! அபலை எங்நா ளும் அபலையே.

மாண்:—[2]நாணிலாது நானிலே. அபலையின் வலியை அம்புவி யறியும். பேசி என்னவது? இவ்வாசமலர் உம்மை மகிழ்வித்திலது போலும். அங்ஙனமாயின் அருங்கனி யொன்றை அருந்திட அளிக்கவா?

பரத:—கற்பகக்கனியே! [3]கனிவாயளித்திடிற் களிப்புடன் உண் பேன்.

மாண்:—அப்படியே. [கனி கொணரப் போகிருள்.]

பரத:—(தனக்குள்) யான் அருந்த விரும்புங்கனியை இவ்வரிவை யறிந்திலள். அக்கனி அமுதினும் இனியது. அற்புதம் அமைந்தது. [4]மெய்ப்பிணி மாய்ப்பது. கற்பவல்லி யெனுங் கோசலைக் கொடியினில் தானே வந்து தோன் றியது.

மாண்:—(பழத்துடன் வந்து) இவ் [5] வொட்டு மாங்கனியின் இன் சுவைக்கிணையிலே. [அளிக்கிருள்.]

பரத:—என்னிட்ட மாங்கனி ஈதல்லவே. அக்கனி தெவிட்டாத தேன்.

மாண்.—சரி சரி. வீணே வனத்தினிற் காலங் கழிப்பதேன்? வள மனை யடைவோம் வாரீர். [போக யத்தனிக்கிருள்.]

பரத:—என்னே இம்மாதின் மனவன்மை? ஓவியத் தெழுதரிய இப்பாவையின் உடலை அக்கலைமகள் தலைவன் நறுமண மலரால் நலம் பெறப்படைத்தும் இவள் உளத்தை வல் லியதனல் என் பெறப் படைத்தனன்?

---

(1) குணம்—பயன்; நூல் (நாண் கயிறு)

(2) நாண்—நாணம்; கயிறு.

(3) கனிவாய்—கோவைக்கனி இதழ். கனிவு—அன்பு

(4) மெய்ப்பிணி—காயத்துற்ற நோய்; பிறவி தந்த நோய்.

(5) ஒட்டு மாங்கனி—ஒட்டுமாம் பழம், ஒட்டியுறையும் கன்னி.

மாண்:—(விலகி நின்றவன் அணுகி வந்து) மனோகரா! உண்டு மகிழ்ந்திட யான் தந்த சுவைக்கனியைக் கண்டும் அகற்றினீர். வன் சிலையாயது என்னுளமேயோ? உம்து மனங் கவருவது இவ்வனந்தனில் இல்லையேல் இங்கென் செய்வது?

பரத:—மனத்திற் கினியது என் கண்ணை விட்டகன்றிலது.

மாண்:—மகிழ்விக்க வந்த மனைவியிடம் மறைப்பதேன்?

பரத:—(தாமரைநிறைந்த நீர் நிலையைச்சுட்டி) பாராய்! அதோபார். அந்தமனைமந்த சுந்தரவுருவம் ஆங்கு பொலியா நிற்கின்றது.

மாண்:—நாதா! உமது மனம் நாடுவது [1] வனமேயோ?

பரத:—என்ன? வனமா? தடமன்றோ?

மாண்:—இடையறப் பூத்தவொரு தாமரைக்காடெனக் காணவில்லையோ?

பரத:—உண்மை. நாடுதங்கி நலம்பெற வழியிலையேல் காடு சென்று கடுந்தவம் புரிவதே ஏற்றது.

மாண்:—ஆருயிரே! உமது ஆகங்குளிர இத்தடாகத்தியாதுளது?

பரத:—மதிவதனி! [2]தண்புனல் அமரும் நன்னெறிற் மதியே.

மாண்:—என்ன [3] மதி மயக்கம்! இது இரவோ பகலோ?

பரத:—ஐயமேன்?

மாண்:—கதிரவன் [4]ஒளி முன் மதிதரும் ஒளியா?

பரத:—[5] ஆதவன் ஆழ் கடல் மூழ்கினன். மாசற்ற முழு மதியும் தோன்றியது.

மாண்:—என்ன விந்தை! மாசிலா மதியும் உண்டோ? [6] மதியுண்டேல் மானும் உண்டு.

---

(1) வனம்—காடு; ஜலம்.
(2) நாரத்தை அயனமாக வுடைய இராமசந்திரக்கடவுள்.
(3) மதி—புத்தி; சந்திரன்; மதிமுகத்தவள்.
(4) ஒளி—பிரகாசம்; மறைதல்.
(5) ஆதவன்—சூரியன்; கதிரவன் குலத்துதித்த பரதன்.
(6) மதியுண்டேல் மானும் உண்டு—சந்திரனிடத்தில் மானுண்டு; புத்தியுண்டேல் பெண்ணுமுண்டு; இராமனுண்டேல் சீதையும் உண்டு.

பாரத.—ஆம்; மதியுடன் மானுளது. பரந்து பரிபூரணமாய் இனித்த சீதத்தடம் புகுந்து என் தாபம் தணிவேன்.

மாண்:—(தண்ணீரில் பிரதிபலிக்கும் தனது உருவினையணையத் தலை வன் துணிந்து எழுந்ததாய் நினைத்துத் தடுத்து) ஆ! என்ன துணிபு? [1] மெய்ப்பொருளிருக்கத் தோற்றங்கண்டு களிக்கக் கருதுவதா?

பாரத:—தோற்றேன் அத்தோற்றத்திற்கே. மெச்சினேன் நின் மாசற்ற மதிக்கு. இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை. [2]மெய்யில் வாழ்க்கையில் மெய்யெனத் தோன்றும் இன்பமனைத்தும் பொய்யே. சிற்றின்பத் தின் இன்பம் தேன்பட்ட விடம் போல் தித்திக்கும். அம்மதிவதனன் பதமலரே அந்தமில் பேரின்பம் அடை விப்பது. மலராது குவியாது மணம் வீசும் தெய்வம லரே என் முடியினில் அணியுமலர். முனிவர் விழுங்கும் அக்கோதில் இன் கனியே அநுதினமும் அருந்த யான் விரும்புவது.

> "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவன் அடி சேராதார்" —திருக்குறள்

பிரிந்துறைய நேர்ந்தமையால் அப்பேரின்பம் இழந்து ளேன். இறைவனை அவ்வாறுயது.

[அரசமரங்கண்டு அரசன் நினைவுற்று அசைவற்று நிற்கின்றனன்]

மாண்:—ஆருயிர் இறைவ! அசைவற்று நிற்பதேன்?

பாரத.—இல்லாளே! [3] வானடைந்துள அரசினைக்காண். [4] நடுவு நிலை நின்ற நமதரசர் நிலையைக் குறிக்கின்றதன்றோ? அத்தரு [5]வேம்பைத் தழுவியது வியப்பே.

---

(1) மெய்ப்பொருள்—தனது உடல்; கடவுள்.
(2) மெய்யில்—உடலில்; பொய்யான.
(3) வான் அடைந்துள அரசு—ஓங்கி வளர்ந்த அரச மரம்; சிறப்புற்ற தயரதன்; சுவர்க்கமடைந்த வேந்தன்.
(4) நடுவுநிலை—தோட்டத்தின் மத்தியில்; பக்ஷபாதமின்மை
(5) வேம்பு—குறிப்பாக கைகேசியை யுணர்த்தும்.

மாண்:—வியப்பா? உவப்பே, கைகேயியாயினும் [1]வேம்பன்றோ நன்மை பயப்பது?

[பெரும்புயலும் பேரிடியுமெழ]

பரத:—பெரும்புயலெழுந்தது. பேரிடியும் முழங்கியது. சண்டமாருதச் சுழல் வந்து வந்தலைக்கத் தழுவியுவந்த தருக்களிரண்டும் ஆங்கு [2]மோதுற்றலைகின்றன.

மாண்:—இனியவை நிலை குலைந்தொழியுமோ?

[இரண்டு கிளைகள் முறிந்தகன்றிட]

பரத:—[3]கிளைகளிரண்டும் அகன்று போயின.

[அரச மரம் சாய்ந்து விழ]

சலியாத அரசும் அடியோடு பெயர்ந்து படியினிற் சாய்ந்தது.

மாண்:—(அரசமரம் தங்கிய பறவைகள் அந்தரத்து அரற்றுவதை நோக்கி) என்ன பரிதாபம்! அன்றிலைப் பிரிந்த [4]பேடைகள் ஆங்கு அரற்றுகின்றனவே.

பரத:—இக்காட்சிதான் என்னே?

[சத்துருக்கன் பிரவேசம்]

சத்:—அண்ணா! [5]திருமுகங்கொண்டு தூதர் நால்வர் நம் நகரினின்று இவண் அடைந்துளர். உமது [6]திருமுகங்காண விரைகின்றனர்.

பரத:—அவர்களை விரைவினில் அழைத்துவா.

[சத்துருக்கன் போகிறான்;]

மாண்டவி! கண்டகொடுங் காட்சிக்கேற்ப நமது அன்பர்க்கு ஏதேனும் துன்பம் விளைந்ததோ? [7]மந்தர கிரியாற் கலங்கிய கடல் போல் எந்தையர் உளமும் நொந்திடலாயதோ?

---

(1) வேம்பு நோய் தீர்க்கும்; உலகுறு நோய் தீரும் கைகேயியால்.
(2) தயரதனை அலைத்து வற்புறுத்தினள் கைகேயி
(3) கிளைகள்—இராம லக்ஷ்மணரைச் சுட்டும்.
(4) பேடைகள்—பெண் பறவைகள்; தயரதன் மனைவியரைக் குறிக்கும்.
(5) (6) திருமுகம்—ஓலை; முகம்.
(7) மந்தரகிரி—மந்தர பருவதம்; மந்தரையின் சொல்லையும் செயலையும் காட்டும்.

மாண்:—காதல! அன்று கடைந்ததால் உலகம் அடைந்தது நலமே. மாநிதியும், மாமதியும், மாமகளும், ஆரமுதும் அலைகடலெழுந்தன.

பரத:—அனைத்தையுமழிக்கும், ஆலமும் ஆங்கு முளைத்தது வன்றோ?

மாண்:—அக்கடு விடமும் ஓர் அணிகலமாய் அச்சடை முடியோன் கண்டத்தமைந்தது. விளைவது எதுவெனினும் அதை நலமெனத் தெளிவோம்.

[சத்துருக்கன் தூதர்களுடன் வருகிறான்.]

தூதன்—இளவரசே! [1] வந்தனம். இக்கடிதம் கொண்டு [2] வந்தனம் [கடிதத்தைக் கொடுக்கிறான்.]

பரத:—யார் இவண் விடுத்ததுங்களை?

தூதன்:—தமது குலகுரு.

பரத—(கடிதத்தைப்படிக்கிறான்) "கேகயன் செல்வனுக்கு வேதியன் வரைந்தது. கடிதம் கண்டதும் கடிதினில் வந்திடு" என்னே இந்நிருபம்? ஆதியிற் சேமமும் அந்தத்தில் வாழ்த்துமில்லை.

சத்:—[3] ஆதியந்த மிலாததை ஓதியும் உணரப்போமோ? அவ் வேதியர் இவ்வாறு வரைந்திடக் காரணம் எதுவோ? நம் தாதையர் எங்ஙனரோ? அண்ணலும் ஆங்கில்லையோ?

பரத:—யாது விளைந்ததோ? தூதர்காள்! நமது வேந்தர் [4]வலியரோ?

தூதன்:—ஆம். வலியரே.

பரத:—செம்மல் இராமன் [5]செல்வத்தனோ?

தூதன்:—ஆம். செல்வத்தனே.

பரத:—நம் நகருறைவார் குறைவிலரா?

---

(1) (2) வந்தனம்—நமஸ்காரம்; வந்தோம்.
(3) கற்றவரும் காணகில்லாக் கடவுளைக் குறிக்கும் குறிப்பு.
(4) வலி—வல்லமை; வியாதி.
(5) செல்வத்தன் — செல்வத்தை — சிதையை — உடையவன்; சென்றவன்.

தூதன்:— [1]நீரிலாக்குறையொன்றே.

பரத:—சோதரா! உற்றதொன்றும் உணர்கிலோம். விரைவினில் நகரினையடைவோம்.

[எல்லோரும் போகிருர்கள்.]

களம் 1 முற்றிற்று.

களம் 2

இடம்:—அயோத்தியில் ஒரு தெரு.

பாத்திரங்கள்:—பரதனும் சத்துருக்கனும் பிரவேசம்.

பரத:—தம்பி! பொன்னகருக்கொப்பான இந்நகர் நகையிழந்து, பொலிவழிந்து, பாழடைந்துளதே!

> "ஓதுகின்றில கிள்ளையும் ஓதியர்
> தூதுசென்றில வந்தில தோழர் பால்
> மோதுகின்றில பேரி முழா விழா
> போதுகின்றில பொன்னணி வீதியே." —கம்பர்.

மன்னுயிர்காக்கும் மன்னனும், நல்லறம்போற்றும் அண்ணனும், மன்னி இவணிருப்பின், நன்னலம் இந்நானிலம் அகன்றிராது. மங்கலவீதிகள் தோரணங்களின்றி அமங்கலம் அடைந்துள. ஆலயந்தன்னில் அமர்ந்துள அமலனைக் காலையம்பொழுதினிற் பள்ளியுணர்த்திப் பூசையும்புரிந்திலர் இப்புரியினில் உறைவோர். பேரிகையொலியும், வாத்தியநாதமும், திருமணியோசையும் கேட்டிலம். தூயவர் தூமலர் தூவித்தொழுதிலர்; அந்தணர் அருமறை ஓதிலர்; மங்கையர் மங்களம் பாடிலர்.

---

(1) நீர்—தாம்; தண்ணீர்; (நீரின்றி உலகியல் அமையாது. நீர் இன்று உலகு அமையாது. நீர்-இராமன்)

சத்:—அண்ணு! ஆவி நீத்த உடலென ஆயது இந்நாடு.

" நகையிழந்தனவாண்முகநாறகிற்
புகையிழந்தனமாளிகைபொங்கழற்
சிகையிழந்தன தீவிகைதேமலர்த்
தொகையிழந்தனதோகையரோதியே." —கம்பர்.

அத்தேனடைந்த சோலை திருவற்றநிலையைக் காணுதி. பறிப்பாரின்றி வெகுமலர் உதிர்ந்து, சருகென உலர்ந்து, நறுமணம் இழந்துள. காய்கனிகளும்கரிந்து வீழ்ந்துள.

பரத:—முத்திதரும் நகரேழில் முக்கியமாம் இந்நகர்க்கும் உற்றதுதான் என்னே?

சத்:—பங்கயச்செல்வி பார்துறந்தனள்போலும்.

பரத:—வளமனையடைந்து விளைந்தவையறிவோம்.

[இருவரும் போகிறுர்கள். மந்தரை விரைந்து வருகிறுள்.]

மந்த:—எங்கே என் கண்மணி பரதன்? அதோ போகிறுன் அதிவேகமாய். அரசென்றால் ஆர்க்கும் ஆசைதானே. இனியவன் மன்னுதிமன்னனுகத் தடையென்ன? பெற்றமகன் இவனிருக்க, மாற்றுள்மகன் முடிசூடுவனெனக் கேட்டதும், கைகேசியின் இன்பவெள்ளம் கரைகடந்து ஓடியது. இராமன் அரசனுயின், கோசலையின் தாசியாய் அவள் ஆவளென்றேன். பரதனும் அவந்தனுப் அலைவனென்று அடுத்துரைத்தேன். என் இனியமொழிகள் அவள் செவியினில் ஏறுது போயின. பரதனை அரசனுக்க மறுத்ததுமன்றி, என்னையும் வெறுத்தனள். எண்ணிய எண்ணம் முடிக்காதுவிட்டேனு நான்? பெண்ணுய்ப் பிறந்தாலென்ன? கூனியாய் இருந்தாலென்ன? மணப் பரிசமொழி அவட்குணர்த்தினேன். வேந்தன் வாய்மை காத்திடல் அவள் கடனெனக் காட்டினேன். திரும்பா மனமும் திரும்பியது. நான் மூட்டிய தீ நன்ருய் மூண்டது. இராமன் திருநாளும் வெறுநாளாயது. என் புத்

தியே புத்தி! யுத்தியே யுத்தி! கைகேசியின் மனதைக் கலைத்தேன்; கோசலையின் மகனைக் குலைத்தேன்; என் பகையை ஒருவகையாய் முடித்தேன். இக்கிழவி இனி அழிந்தாலும் பெரிதல்ல. இவள் பெயர் ஒருநாளும் அழியாது. என்ன அநியாயம்! வந்தபரதனை வேந்தனென்று சிறிதாவது மதித்தனரா இந்நகரமாந்தர்? அவனைக்கண்டதும் கதவடைத்தல்லவா உள்ளேசென்றனர்! சிறியனென்று என் இளஞ்சிங்கத்தை இவர்கள் இகழ்வதா? கண்ணளவாயதோ காணும் கதிரொளி? இவர்கட்கு அவன் இழைத்த தீங்குதான் என்னவோ? இராமனே ஆளவேண்டுமோம். காடுசென்றவன் இனி நாடுவந்து ஆளுவன். ஆளுவதை எல்லோரும் கண் குளிரக் காண்பார்கள்!

(நேபத்தியத்தில்) மந்தரையைமாய்த்திட இன்றுதான் வாய்த்தது. விடுவதில்லை அக்கொடியவளை.

மந்த:—இதென்ன கலகலவெனுமொலி? பரதன் வந்தது கண்டு ஊரார் எல்லோரும் கலகம் விளைக்கக் கிளம்பினர் போலும்! ஐயோ! இவர்கள் கையினிற்சிக்கினால் என்னை நமனுலகம் அனுப்புவர். அரசி கைகேசிக்கு அறிவிப்பேன். [விரைந்தோடுகிறாள்.

நகரவாசிகள்பிரவேசம்.]

வாமனன்:—பரதன் வரவும் நல்வரவே. இதுவரை வெளிவர அஞ்சிய அவ்வஞ்சகி இன்று நெஞ்சம் துணிந்து வெளிவந்தனள். அப்பாவியின் ஆவிபோக்கிடில், இப்பாரகத்தின் பாரம் தீரும்.

கேசவன்:—அப்பேதையை நோவதேன்?

வாம:—அறியாய்போலும்! உடலுறுகோணலினும் அவள் உளத்துறுகோணல் போக்குதற்கரிது. அருஞ்சுணங்கன்வாலை நிமிர்த்தவும் வசமோ? பண்டொருநாள் இராமன் வில்லுமிழ் உண்டையுண்டதனை உள்ளத்தமைத்து அவ்வூத்தமன்மீது உறுபகைதீர்க்கக் காத்திருந்தனள் இதுவரை.

மன்னவன் தன்மாமகனை மன்னனுக்க எண்ணிய தறிந்து, தான் கொண்ட பகையைக் கேகயன் பாவை யைக்கொண்டு முடித்தனள்.

கேச:—சொல்பவர் சொன்னாலும் கேட்பவர்க்கு அறிவில்லையா? இளவரசி எவ்வாறு இசைந்திருப்பள்?

சீதரன்:—காசா லேசா?

கேச:—காசாலே சாவா?

தாமோதரன்:—ஆம். ஆசைக்கு அளவேது? அகில லோகங்களையும் கட்டியாளினும் போதாது. மண்ணாசையால் தன்மைந் தன் அரசாள ஆசைகொண்டனள்.

கேச:—மன்னனோ?

வாம:—பெண்ணாசைகொண்டவன் என்னதான்செய்யான்? காமம் கொண்டவன் கடுநஞ்சுண்டவன். நஞ்சுண்டவனுக்கு நன்னெஞ்சுண்டா? நன்னெறியுண்டா? நலந்தானுண்டா? தன்காதலியின் காதல்முதிரக் கண்ணிழந்தான் அக்கா முகன்.

தாமோ:—ஆம். விழியிலார்க்கு ஏது விளக்கு? கண்ணிழந்து, கண்ணுட்கருமணியை இழந்து, தன்கண்ணியமும் இழந்த னன். முற்பகல்செய்தது பிற்பகல்விளைந்தது.

கேச:—என்ன! வயதுமுதிர்ந்த வேந்தனையோ, வாய்வந்தவாறு இகழ்வது? மனுமுறையகலா மன்னவன் இளமானை மகிழ் விக்கவோ இனியமகனை விலக்குவன்? .

வாம:—அந்தம் நிறைந்த [1] மைந்தன் பிறந்ததும் அவன் முதிர்ந்த வயதும் திரும்பியது. அழியாயௌவனம் அடையப் பெற்றனன். அழகிய [2] மானின் விழியினிற்பட்டு இனியமகனையும் விட்டனன். மோகம் ஆட்கொள்ளவே, அவன் மதியும் சதியடைந்தது. இல்லையேல், இல்லறம் நடத்த அக்கோசலையிருக்க, மற்றும் ஆசைக்காதலியும்

(1) மைந்தன்—அழகுள்ளவன்; வலிமையுள்ளவன்; இராமன்.
(2) மான்—கைகேயி.

வேண்டுமோ வேந்தற்கு? பெண்டிர்பலரைக் கொண்ட வன்கதி இதுவேதான்.

தாமோ:—ஆம்! ஆம்! தந்தையிழைத்த வினைப்பயனை நன்குணர்ந்த திருக்குமரன், திருமகளை மணந்தபின்னர் நிலமகளை மணக்கமனமின்றி விலக்கினன்போலும்.

சீதர:—பெண்டிர் [1]இருவரைக்கொண்டவன்பாடே பெரும் பாடாகும். மங்கையர்பலரை மணந்தவன்முடிவைச் சொல்லவும் வேண்டுமோ?

வாம:—உண்மையென்னவோ ஊரார் அறியார். வந்த வதந்தியோ விந்தையின் விந்தையே. வேந்தன் அவட்குத்தந்த வரம் இரண்டுண்டாம். அவ்வரங்கொண்டவள் வற்புறுத்தினளாம்.

கேச:—யாது விரும்பியோ?

வாம:—அப்பாதகியின் சூதுவிரும்பியே. சூதும்வாதும் வேதனை செய்தன. வரமொன்றினால் மைதிலி மணாளன் வனமாள்வதாம்; மற்றொன்றினால் தன்மைந்தன் அரசாள்வதாம். வேந்தனோ சொல்லறம் பிறழாது, செம்மலையிழந்து, அல்லலும் அடைந்து, ஆவியும் துறந்தனனாம். அம்புவியில் இக்கதையை நம்புவார் யாவர்?

கேச:—நம்பாமற் சென்றனனோ செம்மல் இராமன்?

வாம:—நம்பியதால் வந்த வம்புதானிது. துற்குணம் அறிவினையும் பெற்றவள் போக்கினள்; நற்குணம் அறிவினையும் பெற்றவன் போயினன். அன்று பொன்னகரம் புலம்பியதை என்னென்று சொல்வது! ஆவும் அதன் கன்றும், அன்றலர்ந்தபூவும், யாவும் அழுதன. கண்செய்த பாவமோ! மண்செய்த பாவமோ!

சீதர:—பெண்செய்த பாவமே. பெண்ணாட்டம் ஆடவிட்டால் போராட்டம் அல்லவோ? போராட்டம் நேரிட்டால் திண்டாட்டமேதான். பெண்மதி என்றும் பேய்மதியன்றோ?

(1) இருவரைக் கொண்டவன்—உத்தான பாதன். (துருவன் தந்தை)

வாம:—ஆம்.

" தாமகேது புவிக்கெனத் தோன்றிய
வீர்ம மேகலை மங்கையரால் வரும்
காமமில்லை யெனில் கடுங்கே டெனும்
நாம மில்லை நரகமுமில்லையே" —கம்பர்.

பேய்கொண்டாலும் கொள்ளலாம்; பெண்கொள்ளலாகாது.

தாமோ:—உண்மை. மந்தரைப்பேயை முந்திமுடிப்போம்.

கேச:—அது சரியன்று. பெண்கொலை பெரும் பாவமேயாகும்.

வாம:—அடாதுசெய்பவர் படாதுபடுவர். விடாது பாவம்; விட்டிடோம் யாமும்.

[அனைவரும் விரைந்து செல்கின்றனர்.]

களம் 2 முற்றிற்று.

களம் 3

இடம்:—கைகேயியின் அரண்மனே.

பாத்திரங்கள்:—கைகேயி பரதன் வரவை எதிர்பார்த்திருக்கின்றனள். மந்தரை பக்கலில் நிற்கின்றனள். பரதனும் சத்துருக்கனும் பிரவேசம்.

கைகே:—[1] செல்வா! [2]நீள் செல்வம் பெற்று நீடூழி வாழ்வாய்.

பரத:—அன்னையே! எங்குளர் எமதிறைவர்? அவரது மாளிகையிற் காண்கிலனே. அன்னை கோசலையின் அந்தப்புரம் அமர்ந்துளரோ?

கைகே:—தேவர் கைதொழ வானகமெய்தினர்.

பரத:—(தரையில் விழுந்து புரண்டு) ஆ! இறைவ! இறந்தேகினீரோ? இனி எமக்குத் துணையாவார் யாவர்?

(1) செல்வா—அருமை மைந்தா; சென்று வா.

(2) நீள் செல்வம்—நாடாளும் செல்வம்; அழியாப் பேரின்பம்.

"அறந்தனை வேரறுத்தருளைக் கொன்றனை
சிறந்த நின்றண்ணளித்திருவைத்தேசழித்
திறந்தனை யாமெனி லிறைவ நீதியை
மறந்தனை யுனக்கிதின் மாசு மேலுண்டோ." —கம்பர்.

அப்பனே! கற்பகத்தருநிழலைக் காதலித்து ஆருயிரை நீத்தீரோ? இனியமைந்தன் இராமனைப் பிரியவும்துணிவதா! என் அண்ணனுக்கு இம்மண்ணளிக்கவோ, விண்ணுலகேகினீர்! மன்னுதி மன்னனே! மாமகள் மணக்கோலங்கண்டு மகிழ்ந்தநீர், இப்பூமகள் மணமுங்கண்டு நெடுநாள் மகிழ எண்ணியும், உமதெண்ணம் ஈடேறாதது எத்தகைய [1] தீவினையின்பயனோ? ஐயனே! மெய்யனே! நாதனிலாது மேதினியை நலியவிடலாகுமோ.

[மூர்ச்சிக்கிறான்.]

சத்:—அண்ணா! ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார்வருவரோ? மூண்டவினை முடிந்தது; எழுந்திரும்.

பரத.—அம்மணி! மன்னவர் உமது இன்னுயிரன்றோ? உடலைவிட்டுயிரகல விடலாகுமோ? அன்று, சம்பரன் போரினில் அம்பரம்சென்று அவர் ஆருயிர் காத்தீர். இன்று நீர் வையம் நின்றது வியப்பே! தாயே! ஆவிநீங்குமுன் ஐயன் எனக்கிட்ட பணி ஏதேனுமுளதோ?

கைகே:—தனயா! உன் நினைவு அவர் நெஞ்சத்திராது போயிற்று.

சத்:— [2] அக்குறைவறநின்ற நீலமேனியன் நினைவொன்றே அவர் நெஞ்சம் நிறைந்ததுபோலும்.

பரத:—தாயே! எய்திய நோய்தான் என்னே?

கைகே:— [3] மெய்யைப்பற்றிய நோயொன்று நையவருத்திப் பறித்தது அவர் ஆவியை.

---

(1) தீவினை—ஊழ்வினை; தவமுனியின் மைந்தனை சப்தபேதி யெனும் கணையினால் கொன்றவினை.

(2) மூவுலகுமளந்த நெடியவன்; எங்கும் நிறைந்தவன்.

(3) மெய்—உடல்; உண்மை; கடவுள்.

பரத:—இனி அண்ணனைக்காணுது கணமும்தரியேன். அன்னவன் பொற்கழல்தன்னில் வந்தனை வைத்தாலன்றி என் சிந்தை வெந்துயர் சிறிதும் தீர்கிலாது.

[போகயத்தனிக்கிருன்.]

கைகே:—புத்திரா! சற்று பொறு.

பரத:—ஏனம்மணி ?

கைகே:—இத்தருணம் அவன் இந்நகர் நீங்கியுளன்.

பரத:—எங்கேகினன் ? புகழ்சனகன் வளமனைக்கோ ?

கைகே:—இல்லை. வெங்கானுறைய.

பரத:—இறைவர் இருக்கவா ?

கைகே:—ஆம்.

பரத:—அரக்கரையழிக்கவா ? சுரர்க்குபகரிக்கவா ?

கைகே:—[1] ஆழியான் ஆணையாற்றவே.

பரத:—அவன் இழைத்தபிழைதான் என்னே ?

கைகே:—பிழையொன்றும் இழைத்திலன்.

பரத:—ஆயின், அக்குற்றமற்றகுரிசிலை என்பற்றியகற்றினர் ?

கைகே:—வாய்மையைக் காத்திட.

பரத:—எங்ஙனம் ?

கைகே:—என் நன்மணநாளில் மணப்பரிசமாக இம்மண்ணரசை எனக்கு வழங்கினர். மன்னவர் வாய்மையை மாசறக் காத்திடல் கடனெனக்கன்றோ ?

பரத:—ஆம், திமையொன்றிலதேல்.

கைகே:—அக்கடன்கழிக்கத் தருணம் வாய்த்தது.

பரத:—எப்படி ?

கைகே:—மாமகனை மன்னனுக்க எண்ணி, மன்னவர் நன்னாளையுங் குறித்தனர். அஃதறிந்து, அன்று சம்பரன் போரினில் அவர் எனக்கருளிய வரம் இரண்டினையும் தரவேண்டி

(1) ஆழியான்—தயரதன்; ஆழிப்பிரான்; அரக்கரை யழிப்பதாய் அமரர்கட்கருளிய ஆதிதேவன் ஆணையைக் குறிக்கும்.

னேன். இருவரமும்கைவர யான் இராமனை அரணியம் போக்கி இப்பாரினை உனக்காக்கினேன். அது பொறுக் கலாமையால் அவர் ஆருயிர் நீக்கினர்.

பரத:—அந்தோ! கோமுடியே கொடுங்கோளாயிற்றே! மின்னனையபொய்யுடலை நிலையென்று பொய்யென்றபொருளொன்றைப் போற்றினையோ? [1] நன்னலங்கருதியா அண்ணலையகற்றினை?

கைகே:—மன்னவர் சொன்னலங் கருதியே.

பரத:—[2] என்னலம் இம்மண்ணினில்? மணப்பரிசமொழி உண்மையேயாயின் வரங்கொண்டு நீர் வற்புறுத்தியதேன்?

கைகே:—முதல்வனைத் தலைவனுக்க முயன்றகாலத்து, இம்முதுமொழி வெளிவந்திருப்பின், மாளாப்பழி மன்னரைச் சாருமன்றே? அப்பழி போக்கவே இப்பழி ஏற்றேன்.

பரத:—அப்படியாயின் என்னை மன்னனுக்க வேண்டியதே போதுமே. அண்ணலையகற்றியதேன்?

கைகே:—முன்னவன் இவணிருப்பின் நீ மன்னவனுவது எங்ஙனம்? அங்ஙனம் ஆகாவிடின் மன்னவர்மாற்றம் என்னுவது?

சத்:—அதுபற்றியேபோலும் அம்மணமொழிமறைத்ததும் [3] இருவரம் விரும்பியதும்.

பரத:—என்ன விபரீத விருப்பம்! அகற்றிடவேண்டிடில் அப்பெருந்தகையை அருங்கானுய்த்ததேன்?

கைகே:—அறத்துறையில் நிலைபெற்று ஆங்கவன் ஓங்கவே.

பரத:—ஆயின், அவ்வள்ளல் இனிமீள்கிலனே?

கைகே:—வருந்தற்க; ஈரேழாண்டுகளே கானுறைந்து வரவிடுத்தேன். அச்செம்மலும் என்னுளம் அறிந்து தன்னுளம் உவந்தேசென்றனன்.

---

(1) நன்னலம்—நல்ல நலம்; நம்முடைய நலம்.

(2) என்னலம்—என்ன நலம்; என்னுடைய நலம்.

(3) இருவரம்—இரு+அரம்; இரு+வரம்.

பரத:—அந்தோ! பயந்ததாயினும் பன்மடங்கு அதிநேயமாய் வளர்த்துவந்தனையே! என்னினும் அவன் இனியனெனப் பன்முறை பகர்ந்தவையே! அண்ணலும் உன்னையே அன்னையென எண்ணினனே! நின்நினைவுதான் என்னே? என்னை வாழ்விக்க எண்ணினையோ? தலைமகன் நலத்தையழித்து இந்நிலத்தை எனக்களிக்கவா நினைத்தனை? இனோ! [1] உண்மையில் இவள் எனது அன்னையேயோ! இவள் அகத்துளது வாய்மையோ; அன்றி வஞ்சமோ? நன்மதி இவள்வயத்திருப்பின், இப்புன்மதி இயலாதிவட்கு. அப்பெருமகன்பாற்பூண்ட பேரன்பிற்கும் பொருந்தாது. இவள் தூயசிந்தையும் தீயதாய்த் திரிந்திடக்காரணமெதுவோ அறிகிலேன். பேய்கொண்டனளோ! பித்தேறினளோ!

சத்:—ஐயமேன்? ஆய்ந்தறிந்து உணர்ந்தபின்னரே இயற்றிய வினையிது.

பரத:—அந்தோ! வினையும் பழியினை நினையாதொழிந்தனையே! அவனியனைத்தும் அழிந்தொழியினும் அது பெரிதன்று. [2] அழியா இன்பமளிக்கும் அவ்வன்பனை யகற்றுவதா? அகற்றியழிவதா? அகலகிலாத் [3] திருமகளும் [4] பணியகலா இளையவனும் துணைவனைப்பிரிந்து உயிர்தரித்திருப்பரோ? இருவரையும் தேற்றி அவர் துயரம் மாற்றுவேன்.

[போகயத்தனிக்கிறான்.]

மந்த:—பரதா! பொறு. பிரியா இருவரும் அவனைப் பின்பற்றிப் போயினர்.

பரத:—என்ன! போயினரா? பொறுமை பொறுது இங்கிராது போயினரோ! பேரருள் அருளும் பெருந்தேவிக்குமா இக்கதி? வைதேகிக்குமா வனமுறையுங்காலம்? அந்தோ!

---

(1) உண்மையில்—வாஸ்தவத்தில்; உண்மையில்லாத.
(2) பேரின்பம் அளிக்கும் பெருமான்.
(3) திருமகள்—இலக்குமி; சீதை.
(4) பணி—பணிதல்; ஆதிசேடன்.

[1] அந்தமிலான் [2] உவந்தமாதுடன் [3] மன்னடிமைபாயவன் பின்படர மூவரும் ஒருங்கேசென்றனரே! [4] அறம் [5] பொருள் [6] இன்பம் மூன்றும் போயினவே. இனி ஏதுறுமோ? பேதையே! வருங்கேடுணராதுபெரும் பாவமிழைத்தனையே! இனி உய்யும்வகையும் உளதோ?

மந்த:—என்ன செய்வது? நாமொன்றெண்ண தெய்வமொன்றெண்ணியது. எல்லாம் அவன் செயல். நம்மால் என்னவாகும்? விதியை மதிவெல்லுமோ? மன்னவன் சொன்னசொல் என்னாகுமோ என்று உன் அன்னையஞ்சினள். விளைந்ததை நினைந்து வருந்துவதால் ஆவதில்லை. ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு. மனம்தேர்ந்து மானிலமாளுவை.

பரத.—சீ! மதிகெட்டமாடே! மூடே! என்ன பிதற்றுகின்றாய்? நானா மானிலமாளுவது?

கைகே:—மைந்தா! மன்னர்சொல் மரபினால் மன்னரசு உனக்குற்றது. பேரும், புகழும், பெருவாழ்வும், ஊரும், திருவும், தருநிழலும் பெறுவாய். இன்பம்பயக்கும் என்மொழி ஏற்பாய். மனோரதம் ஈடேற மாமுடிசூடுவாய்.

பரத:—என்ன! மனோரதமா? உன் மனோரதமா? என்னை மன்னனாக்கப் பன்னாளாய் எண்ணினையோ?

கைகே:—ஐயன் ஆணையைத் தன்தலைதாங்கிய மெய்யன்பின் பிறந்திலையோ? முன்னவன் இயற்றியவழியே [7] பின்பற்றி நடப்பது பின்னவன் தருமம் அன்றோ?

பரத:—அத்தருமத்தை யகற்றிய உனக்கும், உன்வயிற்றுதித்த எனக்கும், இனி எத்தருமத்தால் என்னபயன்?

---

(1) அ—கடவுள்; இராமன்.
(2) உ—இலக்குமி; சீதை.
(3) ம—தாஸன்; இலக்குமணன். அ+உ+ம—பிரணவம்.
(4) அறம்—தருமம்; இராமன்.
(5) பொருள்—செல்வம்; இலக்குமி.
(6) இன்பம்—சுகம்; கைங்கரியானந்தம்.
(7) பின்பற்றி நடப்பது:—இராமன் போல் தந்தை சொற்கிணங்குவது; பின்தொடர்ந்து போவது.

மந்த.—கண்ணே! வீணே உனது அன்னையை நோவதேன்? மன்னவன் இவளை மணக்குங்கால் மனமுவந்தறைந்த மாற்றம்துறந்து, உன்னையும் உன் மாமன்வீடுறையவிட்டு, மண்ணரசை அக்கோசலைமகனுக்கு ஆக்கமுயன்றனன். அதனையான் அறிந்ததும், மணப்பரிசமொழி இவட்குணர்த்தினேன். கணவன் கட்டுரைகாத்திடல் கடன் இவட்கெனவும் காட்டினேன். ஆங்கதுகேட்டே, குவலயம் உனக்காக்கினள் இக்குணமகள். ஐயமின்றி வையம் கைக்கொள்வாய்.

பரத.—என்னசொல்லினை?

சத்.—அண்ணா! இக்கொடுமனக்கூனியே இழைத்த கடுவினையிது. சலியாத நமது [1] கற்பகத்தருவை அலைத்தழித்த [2] புயற்காற்றே இக்கூற்றுவள். ஆ! பாதகி!

[கட்கத்திற்கிரையாக்க விரைகின்றனன்.]

மந்த:—(பயந்தவளாய்) கைகேயி!

கைகே:—(தடுத்து) என்ன?

பரத:—இப்பாவிக்குப் பரிந்திடின் உன்னுயிரில்லாது. விலகிநில். ஆஹா! தாயெனத்தோன்றிய தீயே! இப்பாவியும் நீயும் சதிசெய்திழைத்த சூழ்ச்சியா இது? பாராளும் பேராசையால் பொய்யாமன்னரை மாளவிட்டு, இன்னும் நையாதிருக்கின்றனை. எம்மாசிலா மரபினைமாற்றினை; புகழினையழித்தனை; பழியினைப்படைத்தனை; குடியினைக்கெடுத்தனை. கோமுடிக்குந் தீ மூட்டிப் பூமுடிக்க நினைந்தனையா? இன்முறைநோக்காது, நல்லறம்போற்றாது, பேரருட்கொள்ளாது, பேரிடர் இழைத்தனையா? பழியஞ்சாப் பாவி! வஞ்சனையே வடிவுகொண்ட நய வஞ்சகி! நஞ்சுமிழ் நாகமென்றறியாது, உன்னை நன்மலரென நம்பி, நாசமாயினர் எமதிறைவர். [1] உயிர் நிலையாயுறைந்த உத்தமனைப்பிரித்து எனது அத்தனின் ஆருயிர் உண்ட

(1) கற்பகத்தரு—வள்ளலாகிய தயரதன்.
(2) களம் ஒன்றில் காட்டிய புயற்காற்றை இங்குணர்க.

ஐயே! நீ பெண்ணோ? பெரும் புண்ணோ? தீயோ? மாயாப் பேயோ?

கைகே:—பாவமொருபக்கமிருக்கப் பழியினைச்சார்ற்றுவதா? தாயென்றுங்கருதாது, வாய்வந்தவாறேசுவதா? கலையெலாங்கற்றும், [2] காரணமறியாது, கருத்தழிந்தென்னையிகழ்வதா? தேவரும், அம்மூவரும் அறிவர் என்னுளத் தூய்மை.

பரத:—யாவரும்அறிவர் உன் தீமையை. பாவமே உருவெடுத்த பாதகி! பார்த்திபன்பகையாளி! மூவுலகையும் காக்க வந்த [3] முதல்வனை, ஜனனுகூலனை, ஜானகிகாந்தனை, வேதாந்த வேத்தியனைக் கானகம் உய்த்திட, நீயும் துணிந்தனையா? நின்பாழ்மனம் பாறையோ? இரும்போ? வன்மை மிக்க வயிரமோ? மன்னுயிர்க்கெல்லாம் இன்னருள்புரியும் அண்ணலை, என் அண்ணனை, மாமணிவண்ணனை, இவ்வின்னலுக்குள்ளாக்கினையே! வெங்கதிரோன் தொல் குலத்தின் விளக்கையவித்தனையே? சூழிருள் எங்கும் சூழ்ந்து பரந்ததே! நின்சூழ்வினையின் ஆழ்துயரை அன்னையர் பொறுப்பரோ? மங்கல நாணறுந்து, அருங் கலமிழந்து, கூந்தலுமவிழ்ந்து, அவர் குழைகின்றனரே! இடுக்கண் இத்துணைமூட்டியும், இடருறாதிருக்கின்றனையா?

கைகே.—சத்தியம் அகற்று உத்தமனை உயர்விக்கவெண்ணி, இத்துணைப்பழிக்கும் ஆளாயினேன். நின்மதியை நோவதா? என்விதியை நோவதா?

சத்:—விதி வலிது. மதி சிறிது.

பரத:—நின் சதியை நோவது.

கைகே:—எத்துணையுரைத்தும் பித்தனாய் உளந்தேறாய்.

---

(1) உயிர்நிலை—உள்ளத்தில் உள்ளொளியோடுறைந்த கடவுள்.

(2) காரணம்—இமையோர் மாயையும், இறைவன் அவர்கட் களித்த வாக்கும், அந்தணர் அருந்தவமும்.

(3) முதல்வன்—முதற்கடவுள்; முதல் மகன்.

பரத:—ஆம். அவ்வுத்தமன் பித்தனே யான். அவனும் பத்தரிற் பித்தனே. பெருமானை ஏத்தாதார் பேயரே. பெரும் பேயர் பேசிடும் பேச்சை ஏற்பவன், பேயனேயாவன்.

கைகே:—மைந்தா! வேந்தர் வாய்மொழி என்னாவது? நின் வயின் வைத்த வையந்தான் என்னாவது?

பரத:—இன்னுமா அந்நினைவு? நீ கொண்ட எண்ணங் கைகூடுமென்று கனவிலும் கருதற்க. கெடுமதி கொண்ட கொடியாளே! மாயாப்பழியினை ஆக்கினையே! மாபாவியோ! இன்னும் எனக்கென்தாய் இருக்கின்றனை? என்னை இறையாக்க எண்ணிய நின் தீவினை, இன்னார், உன்னை இறையாக்கவில்லையே! (கட்கத்தை யோங்கி) என் கரங்கொண்டு உன்னுயிரை யானே மாய்ப்பன். (சத்துருக்கன் தடுக்க) ஆயகன் முனியுமென்றஞ்சினேனலால் தாயெனும் பெயரெனைத் தடுக்கற்பாலதோ? (கட்கத்தை யெறிந்து) நின் பாழ் உதரம் தங்கிய பாதகமொழிய யான் காடேகிக் கடுந்தவம் புரிவன். தீயாரைக் காண்பதுவும் தீது; அவரோடு இணங்கியிருப்பதுவும் தீதே. சீ! நீ என் அன்னையன்று. அப்பெருந்தகையைப் பயந்த பெரியாளே சிறந்ததொருதாய் எனக்கு. அவரது மனையணுகி என் நினைவினை விளக்குவன்.

[பரதனும் சத்துருக்கனும் விரைந்துசெல்ல கைகேயி மனமிடிந்துசாய்கிறாள். மந்தரை அவளைத்தாங்குகிறாள்.]

களம் 3 முற்றிற்று.

களம் 4

இடம்:—மந்தரையின் மனை.

பாத்திரங்கள்:—மந்தரை பிரவேசம்.

மந்த:—அந்தரத்தவரும் என்திறம் அறியார். மந்தரையாலாயது [1]தொந்தரையொன்றேயா? விளைத்த நன்மையை இனி அனைத்துலகும் அறியும். நான் நினைத்ததென்ன! இழைத்ததென்ன! விளைந்ததென்ன! கிணறுவெட்ட பூதம் புறப்பட்டதே! பரதனோ பாரினை ஏற்கான். இனி யதாய் முகம் நோக்கான். என் ஆவியை நீக்கவா? இராமனைப் [2]பகைத்ததாய் வெறுத்தவளாயினேன். இப்பாழும் ஊரினில் இனி வாழும்வழியிலை. இதுவரை இங்கு [3]பிழைத்ததே போதும். பிறந்த ஊர் அடையவும் தடையா? இறுமாந்திருந்த நான் இப்புரமாந்தர் கண்படில், உயிர்பிழைப்பதரிது. மனையிருப்பின் மைந்தர் என் செய்வரோ? சாந்துணையும் எனக்குச் சஞ்சலமோ? கெடுவார் கேடு நினைப்பார் என்பர். எனக்கு என்ன கேடு நேரிடுமோ?

[கரத்தினில் கட்கத்துடன் சத்துருக்கன் சினங்கொண்டு விரைந்து வந்து]

சத்:—ஆ! பழிபடைத்தபாதகி! (கூனியை பூமியில் தள்ளி) கலக்கினையா எமது அன்னையின் கலங்காமனத்தையும்? விலக்கினையா குலக்குமரனை? இப்பேரிடர் இழைக்கவோ பண்டைநாண்முதல் எட்மையண்டி உறைந்தனை? உயிருடன் உன்னை இனி விட்டிடேன்.

[கட்கத்தை ஓங்க, பரதன் வந்து]

பரத:—இளைஞ! பெண் கொலையா?

சத்:—அண்ணா! பெண்ணாயின் என்ன?

---

1. ஒன்றல்ல பல; நன்மையும்.

(2) இராமனைப் பகைத்ததுபற்றி; பகைத்த தாயாகிய கைகேயி.

(3) பிழைத்தது—உயிருடனிருந்தது; குற்றம் புரிந்தது.

மந்த:—பெண்ணென்றால் பேயும் இரங்குமே.

சத்:—பேயும் செய்யாது நீ செய்யும்வினை.

மந்த:—இரக்கமில்லையோ?

சத்:—உயிர் துறக்கவில்லையே! பெருந்தகையே! அன்று, தடக்கை வெஞ்சிலையொன்றைவளைத்துத் தாடகையின் உரத்தைக்கீறி, அவ்வரக்கியின் ஆவி கவரவில்லையோ நம்குல முதல்? அக்கரியவளினும் கொடியவள் இக்கூனி. இவள் கூனைக்குடைந்து, குடலைக்களைந்து, உடலைப்பிளந்து, உழலவிடாது விடுவதா?

பரத:—சிறுவ! பெண்கொலை புரிந்திடின் நின்முகம் நோக்குமோ அவ்வண்ணல்?

சத்:—இப்பெரும்புண்ணை இனியும்போக்காவிடில், இவள் ஆக்கிய நோய் அதிகரிக்குமே!

மந்த:—மைந்தா! மறந்தனையோ?

பரத:—நீ புரிந்ததொருவினையை இப்பரதன் இறக்குமாகிலும் மறக்குமா? நின்னைக்காண என் நெஞ்சமும் அஞ்சுமே!

மந்த:—எனக்கென்கதி?

சத்:—கதியா? உனக்கா? துற்கதியே.

பரத:—மந்தரே! இங்கர் நின்றிடில் நின்னுயிர் நீங்கிடும். விரைந்து செல். சோதரா! அன்னை கோசலையின் அடியினையடைவோம். [போகிறான்]

சத்:—மூதேவி! இன்னும் [1]தாமதமா? என்ன விழிக்கின்றனை? விழிகளைப்பறித்து உழலவிடுவேன். போ ஒழிந்து. [உதைத்துப்போகிறான்.]

மந்த:—இனிநான் ஒழிந்தென்ன! இருந்தென்ன! இறந்தென்ன! ஆக்கியளித்தழிக்கும் அம்மூவரும் எனக்கு இணையாகார். கமலையும் எனக்குப் பின்னவளே தான்.

[போகிறாள்.]

களம் 4 முற்றிற்று.

---

(1) தாமதமா—தாமஸ குணமா; காலக்கழிவா?

களம் 5

இடம்:— கோசலையின் அரண்மனை.

பாத்திரங்கள்:—கோசலை தன் மைந்தன் இராமன் பிரிவினை நினைந்து வருந்துகின்றனள்.

கோசலை:—"வெவ்வாயோன் வெவ்வுரை கேட்டிருநிலத்தை
வேண்டாதே விரைந்து வென்றி
மைவாய களிறொழிந்து தேரொழிந்து
மாவொழிந்து வனமே மேவி
நெய்வாய வேல்நெடுங்கண் நேரிழையு
மிளங்கோவும் பின்புபோக
எவ்வாறு நடந்தனை யெம்மிராமாவோ
எம்பெருமானென் செய்கேனே"

—குலசேகராழ்வார்.

கண்ணே! கருமணியே! குலமணியே! சிற்றன்னை சொற்கொண்டு, சீற்றமிலாது சென்றனையே! பாவியேன் பெற்றமையாலன்றோ, பெற்றபேறிழந்தனை! என்னமுதே! இன்னுயிரே! நின்மெல்லடிகள் குருதிசோர, எவ்வாறு நடந்தனையோ! பஞ்செனச்சிவக்கும் என் அஞ்சுகத்தின் கஞ்சமலரடிகள் கன்றிச்சிவந்தனவோ? இளையவன் இலக்குவனும் இடர்கணால் துடிக்கவா! வெங்கதிரோன் வெயிலுறைப்ப, வெம்பசிநோய்கூற, வெங்கானில் வருந்தினிரோ! மூவரையும் இழந்தயான், என்றுதான் முடிவேனோ? அந்தோ! மைந்தன் வந்திலன். செய்வதொன்றறியேன். என்செய்வேன்? காகுத்தன் வாரானால் மாயும் வகையறியேன்.

'அம்மாவென்றுகந்தழைக்கு மார்வச்சொல்
கேளாதே அணிசேர் மார்வம்
என் மார்வத்திடையழுந்தத்தழுவாதே
முழுசாதே மோவாதுச்சி
கைம்மாவின் நடையன்ன மென்னடையும்
கமலம்போல் முகமும் காணாது
எம்மானை யென்மகனை யிழந்திட்ட
இழிதகையேன் இருக்கின்றேனே.'

—குலசேகராழ்வார்.

கடல்வண்ணன் பின்போன நெஞ்சம் மீண்டும் வாராது, என்னையும் மறந்து, தன்னையும் மறந்ததே. ஆ! சீராமா! சுகுமாரா! சிங்காரா !

[மூர்ச்சிக்கிருள். சுமித்திரை வருகிருள்.]

சுமி:—(கோசலையின் நிலைகண்டு வருந்தி) பெற்றதவம் பலித்திருக்க இவ்வுத்தமிக்குற்ற துயர் தீருமாறில்லையே! கங்குலும் பகலும் கண்துயிலறியாள். வருந்தியழைத்தாலும் வாராத வாரா. வாராத பிள்ளையைப் பாராது தேராள். தேருது, சிந்தைநோய் சிறிதும் தீராள். என்செய்கேன்? (அருகிற் சென்று) அம்மணி!

கோச:—(மனதில் நினைத்தமைந்தன் உருவம் கண்ணினில் தோன்ற) கண்ணே! வா. மன்னு! வா. இராமா! வா.

[பரதனும் சத்துருக்கனும் வந்து வணங்கி]

பரத:—தாயே! தாயே!

கோச:—(பரதனை இராமனெனவே நினைத்து) செல்வா! [1] வந்தனையா? இலக்குவனும் வந்தனனு? எனது அன்பார்ந்த சானகியெங்கே?

பரத:—அம்மணி! என்னையறியீரோ?

கோச:—(இராமனெனவே எண்ணி) அறிவேன். நீ தான் என் கண்மணி; குணமணி; நவமணி. முடிசூட வந்தனையா? இலக்குவா! விளக்கவா.

சத்:—(அன்னை சுமித்திரையை விளித்து) அன்னையே! அன்னையர் மூவர். நினைவற்றனர் இவர்; வினையுற்றனர் அவர்; செயலற்றுளீர் நீவிர்; கதியற்றனம் யாமும். [2] முத்தாயவித்தை விதியா?

சுமி:—சோதரி! கேகயஞ்சென்ற குமரர் இவர்.

கோச:—அப்பா! என்னப்பன் அல்லவோ நீ?

---

(1) வந்தனையா—நமஸ்காரமா; வந்தாயா.

(2) முந்தாய—முத்தாகிய: வித்து—கிழங்கு; ஜகதாதாரப்பொருள். முத்தாய்-மூன்று தாய்மார்; அவித்தை-அஞ்ஞானம்;-விதியா கட்டளையா; வினைப்பயனு.

பரத:—அவ்வொப்பரியனுவனே இவ்வற்பன்? எவள் அறத்தை யகற்றினளோ, மறத்தை நிறைத்தனளோ, மானிலமழித் தனளோ, அப்பாவியின் மகன் பரதனே வந்துளன்.

கோச:—(சயநினைவடைந்து) மைந்த! சிந்தனையேன்? நிகழ்ந்ததை (1) நினையாய். மண்ணினைப்பெறும் புண்ணியன் நீ. ஆதலின், அப்பெண்ணரசி பெற்றெடுத்தாள் உன்னை. என்வயிறு வாய்த்திருப்பின், வாழ்விழந்து, வனமடைந்து, நீயும் வருந்துவாய். குவலயம்பெற்ற குமர! தாயுரைகொண்டு தரணியைத்தாங்கிடு. நீ மாமுடிசூடும் நன்னாள் என்னாள்.

பரத:—அழிந்தேன். ஒழிந்தேன். பாவியேன் என்னை என் செய்தால் தீருமோ? என்முடியினில் இடியும் விழுந் திடாதோ? அந்தோ! நொந்து வெந்து வந்தேனை இன் னும் நலியவிடலாகுமோ? (சற்று நிதானித்து) ஆம். கருணை யங்கடல் நிலைகுலைந்தகன்றது. ஆனதுபற்றியே, இவ் வாறு கருணையற்றீர். அம்மணீ! ஆணையாய்ச் சாற்று வேன். கணவனுயிர்கவர்ந்த அக்கயத்தி, தானேயிழைத்த கைதவமிது. வஞ்சனையால் வையம்பெற யான் நெஞ்சினில் நினைந்திடில், எண்ணரிய பாவமெனைச்சாரும். கற்றகலை யெலாம் பயனற்றதாகும். பெற்ற தாய்தந்தையரைப் பரிதவிக்கவிட்டவனும், கற்புடையமனைவியைக் கைவிட்ட காதகனும், பிறன்மனைநயந்த பாவியும், செய்ந்நன்றி கொன்றதீயனும், குரவர்தம் உரைகடக்கும் கொடியனும், நிருமலன் பூசையின்றி வந்துணவருந்துவானும், அடைக் கலமெனவந்தானை அளித்திடாதகற்றுவானும், அந்தணர் இல்லத்தைச் செந்தணலுக்கிட்ட அந்தகனும், நட்டாற்றிற் கைநழுவவிட்டவனும், அன்னமிட்ட வீட்டில் கன்னமிட் டவனும், தருமப்பொருளையுரிமையாக்கும் கருமதுரோகி யும், உறவுசெய்தறிந்த சொல்லை உவர்த்துழிகூறுவானும், நல்லுயிரைக்கொன்று தின்னும் புலையனும்: இவர் அனை வரும் சேரும் அருநரகினில் என்றும் உழன்று யான் அழிவேன்.

(1) நினையாய்—நினையாதே; நினைக்கமாட்டாய்.

கோச:—குறையொன்றிலாக் குலவிளக்கே! இக்கடுஞ்சபதமேன்? யார் அறியார் உன்பெருமையும், திறமையும்? என் புதல்வன், நின்னினும் நல்லனென, யான் நினைந்திலேன். மாமுடி நீ சூடி, மற்றையமூவரும் உடனிருந்து, மாநிலம் ஆளப்பெறின், பின்னுமோர்பேறும் உண்டோ எனக்கு? மன்னவர் மாற்றமும் பொய்க்காது மெய்க்குமே. இதனைக் கருதியே, என தருமைப்புதல்வன், இந்நாடிறவாமை நய வென்றேன். முன்செய்த தீவினையிருக்க, உன் அன்னை என்செய்வள்!

பரத:—அன்னையா அவள்? நன்னலம் பொருப்பாவி; நன்னல மிலாநமன். ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்தவுபகாரம், நீர்மேல் எழுத்துக்கு நேராம்.

கோச:—தனையா! தாயின் [1]பழிமொழி. அயனெழுதியவாறன்றி, ஏனையோர் கருதியவாறாகாது. என்னுரையேற்று மன்னுயிர் காத்திடு; மாநிலம் ஏற்றிடு.

பரத:—என்ன! மன்னுயிர்காக்கவா! மாநிலம் ஏற்கவா! அந்தோ! என் கன்மத்தை என்சொல்கேன்? அப்பாவியின் புதல்வனாய்ப்பிறந்த பாவமே போதுமே. கோமகன் அரசு கவரும் கொடும்பாவமும் வேண்டுமோ? அம்மணி!

"ஊனிலா யாக்கை பேணி உயர்புகழ்க் குன்றாநின்றேன்
நானிலாதிருந்தேனல்லேன் நவைபல குணங்களென்னும்
பூணெலாம் பொறுத்த மேனிப்புண்ணிய மூர்த்திதன்னைக்
காணலாம் இன்னு மென்னுங் காதலாலிருந்தேன் கண்டாய்"

—கம்பர்.

குவலயமாள யான் கனவிலும் நினையேன். அண்ணனைக் கொணர்வேன்; மன்னவனாக்குவேன்; மணிமுடி சூட்டுவேன்; அதுவரை ஊணும் உண்ணேன்; உறக்கமுங் கொள்ளேன்.

(1) பழிமொழி—பழியாமொழி; பழிமைத்தீர்.

கோச:—(மார்போடு கட்டியணைத்து) கண்ணே! உன்னைக்காண என் கண்ணிணைகள் களிப்பக்களித்தேன்; என் கண்மணியையும் காணப்பெற்றவளானேன்.

[மந்திரி சுமந்திரர் பிரவேசம்.]

பரத:—மந்திரத்தலைவ! மதியின் திறமிருந்தும், வாளாவிருந்தது தகவோ? அரசர் சிறுவரேனும், அமைச்சர் உறுதியை உரைசெயாதொழிவரோ? குலகுரு வசிட்டரும் நீவிரும் இருக்கவா, இப்பேரிடர் உற்றது?

சும:—[1] பெருவெள்ளம் பெருகிவரப் பேரணை என்செயும்? பரிவுடனுரைத்த [2] குருமொழி பலவும் விழலுக்கிறைத்த நீராயினவே.

சத்:—விதியிருக்க மதி என்செயும்?

பரத:—விதியும் வினைவழியே. நல்வினை நலம் தரும்; தீவினை துன்பம் தரும். தந்தை மகற்காற்றிய உதவி நன்று நன்று. இறைவர் திருமனமும் இரும்பாயுறைந்ததே! அரசிளங் குமரனை, அரியசுகுமாரனை, அனைவர்க்கும் அன்பனை, அருங்கானுறையென அறையவும், அவர்க்கு நாவுமெழுந்ததே!

சும:—மெய்க்கயிற்றாற் பிணியுண்டு, மன்னவன் மௌனமுற்றிருந்தனன். ஆழியான் ஆணையாய் உன் அன்னையே அகற்றினள்.

பரத:—என்ன! அகற்றினளா!

சும:—ஆம்.

“ஆழிசூழுலக மெல்லாம் பரதனேயாள நீ போய்த்
தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கருந்தவமேற் கொண்டு
பூழி வெங்கான நண்ணிப் புண்ணியத்துறைகளாடி
ஏழிரண்டாண்டின் வாவென்றியம்பினன் அரசென்றாள்.”

—கம்பர்.

பரத:—நீவிர் அனைவரும் என்செய்தீர்கள்?

(1) கருணை வெள்ளம்.

(2) குருமொழி—குருவின் மொழி; பெரிய மொழி.

சும:—நின் தந்தையே தன் தாரமல்லளெனத் துறந்தனன் உன் தாயை.

பரத:—துறந்தும், அத்தீயவள் இன்னும் இறந்திலள்; அழிந்திலள்; ஒழிந்திலள்.

சும:—நடந்தேறியதை நினைந்து வருந்துவதாலாவதில்லை. இறைவன் இறந்து, இன்று ஈரேழு நாட்களாயின. அவ்வுத்தமனுடலைத் தயிலமாட்டி வைத்துளோம். செயக்கடவ ஈமக்கடன் செய்துமுடித்தல் உன்கடன்.

பரத:—தந்தையே துறந்த தாரத்து இழிமகனெனக்கு, ஈமக்கடன் கழிக்கும் உரிமையுமுளதோ?

சும:—கோமகன் கான்செலக்களித்திடில், அக்கடன் உனக்கிலையென இயம்பினன் இறைவன். நின்னுளப்பான்மையாம், நன்குணர்ந்தோம். குலகுரு உனக்கு உறுவிதியுரைப்பர். அம்மறையவர் இணையடியிறைஞ்சி இதம் பெற வாராய்.

[எல்லோரும் போகிறார்கள்.]

களம். 5 முற்றிற்று.

களம் 6

இடம்:—அயோத்தியில் ஒரு வீதி.

பாத்திரங்கள்:—நகரவாசிகள் பிரவேசம்.

வாமனன்:—முன்னவன் அரசைப் பின்னவனுக்காக்குவது என்ன நீதி?

தாமோதரன்:—நீதியேது? நெறியேது? தருமமே உருவென வந்த குமரனகலவே, அறமும் அவனுடனகன்றது அருளும் அத்திருமகளைத்தொடர்ந்தது. அவனியும் அழிந்தது.

கேசவன்:—விளைந்தபேரிடர் களைந்திடவே பேரறிவுடைய பெரியோர் இன்று பெருஞ்சபை கூடியுளர்.

வாம:—பெரியோராவது ! சிறியோராவது ! ஒருவரையொருவர் இனி நம்புவதேது ?

கேச:—ஏன் ?

வாம:—உறவினர் உறுநிலை உலகம் அறிந்ததே.

கேச:—எப்படி ?

வாம:—அன்று [1] தனயரானவர் தந்தைதாயரை முடித்தனர். இன்று தாய்தந்தையர் மைந்தரைத் துரத்தினர். மனைவியாயவள் கணவனுயிர் கவர்ந்தனள். நட்பினர் உறவாடியவர் உட்பகைகொண்டு உதவிற்றிலர். இனி, புதல்வரும் பெற்றோரைப் போற்றுவரா ? பெற்றோரும் புதல்வரைத் தேற்றுவரா? தலைவர் தம்மனைவியரை மகிழ்விப்பரா? மனைவியரும் தலைவரை மதிப்பரா? மதிப்பாரின்றி, மநுமுறை தலைகீழாயது. அன்றேல், அறுதொழிலாளரும் அச்சிறுவனை அரசனாக்க நினைப்பரா ?

கேச:—பரதனையன்றி அரசினுக்குரியவன் இங்கெவனுளன் ? பல கலையும், குலமுறையும், குறைவறக் கற்றவன்; எல்லையில் குணங்கள் வாய்க்கப் பெற்றவன்.

வாம:—என்ன ? உரியவன் அவ்விளையவனா ? உளறுதீர். ஊர்க் குருவி உயர்கருடனாகுமோ ? எங்கள் இராமனையன்றி, மற்றெவனையும் மன்னவனாய் மதியோம். அவன் பூததயாபரன்; பேதமிலாதவன்; சற்குணசம்பன்னன்; சரணாகதரக்ஷகன்.

கேச:—வேந்தர் வாழ, மாந்தர் வாழ்வர். ஆண்டுகள் பதினான்கும் கழிந்தாலன்றி, அந்நெடியவன் இந்நாடு நாடான். அதுவரை நாதனிலாது மேதினி அலமருவதா ?

வாம:—என் கருத்து அதுவன்று. அரசுரிமை என்பதின்றி, காவலனெனினும் சரியே. நகரமாந்தர் தேர்ந்தெடுத்தவன் அரசுரிமைக் கடமையை நடத்தக் கடவன்.

கேச:—இது மநுநெறியோ ? நின் மனநெறியோ ?

---

(1) பிரஹ்லாதனும், பரசுராமனும்.

வாம:—மறுநெறி அன்றே மாநிலமகன்றது. மறுநெறியொன்றே மதிப்பது நன்று.

கேச:—நவீன வழியால் நலம்பெற நினைவா? வையம் காக்கும் வல்லமை வாய்ந்தவர் வேந்தரே. அவர்குலம் அழிந்திடின், அவனியும் அழிந்திடும்.

சீதரன்:—பரிவுடன் அனைவரும் பரதனை வேண்டிடில்?

கேச:—தடையே இல்லை.

தாமோ:—என்ன? மங்கலநாணைத் தன்மகன் கங்கணமாக்கக், காத்துளள் அக்கைகேயி. சிந்தைமகிழ்ந்து அவள் இன்பமடைந்திடின், நிந்தை விளைந்திடும்.

கேச:—சேற்றில் முளைத்தது செந்தாமரையே. பிறப்பிடம் பற்றிச் சிறப்பினைத் துறப்பதா? பேராவின் பருமணியைப் போற்றுதார் யாவர்?

தாமோ:—தாயின் குணமே தனையனை நாடும். நான் உடன்படேன். அது என் மதமன்று.

கேச:—அனைவர் மதமும் அதுவேயாயின் உன்மதமென்னும்? சம்மதமில்லையேற் சபையினிற்பேசுக. அடங்காமதம் ஆங்கு அடங்கிடும். நேரமாயது. விரைவினிற் சபையினையடைவோம்.

[எல்லோரும் போகிறார்கள்.]

களம் 6 முற்றிற்று.

களம். 7

இடம்:—அயோத்திமன்னன் கொலுமண்டபம்.

பாத்திரங்கள்:—வசிட்டரும் சுமந்திரரும் மற்றும் நகரவாசிகளும் அமர்ந்துளர்.

வசிட்டர்:—*அமைச்சரே! அவையோரே!*

" நாமவேனரபதியுலகங்காத்தநாட்
காமவேள்கவர்கணைகலந்ததல்லது
தாமவேல்வயவர்தந்தழலங்கொல் படை
நாமநீர்வரைப்பகநலிவதில்லையே. " [சூளாமணி.]

மகப்பேறின்றி, நெடுநாள் நொந்தனன் நம்வேந்தன். இயற்றிய வேள்வியால், ஈரிரண்டு மைந்தரைப் பெற்றனன்; பெற்ற பின்னரும், நொந்தனன் இனியமைந்தனால். மெய்ப்பொருளைப் போற்றி, [1] நற்பொருளை நீக்கினன். திருமகன் அரணியமடையவும், புரவலன் அமரருலகடைந்தனன். [2] இனியவன் இளையவன் அரசினுக் குரியவனன்றோ?

சும:—*முற்றிலும் உரியவனே. அன்றியும், கலையெலாம் உணர்ந்தவன்; கசடறத் தெளிந்தவன்; குறையெலாம் தீர்ப்பவன்; குலமுறை காப்பவன்.*

கேச:—*நல்லார் ஒருவருளரேல், அவர்பொருட் டெல்லார்க்கும் பெய்யுமழை.*

[*பரதனும் சத்துருக்கனும் பிரவேசம்.*]

எல்லோரும்:—*வாழிவாழி. வேந்தே! வாழி. நீடூழி வாழி.*

பரத:—*அந்தோ! 'வேந்தே' என்றெனை விளிக்கவும் வாய்த்ததே. என்னகாலம்! என்னஞாலம்! மறுமுறை என்செவியினில் இவ்வெவ்வுரை விழாவண்ணம், விரைவினில் அகன்று செல்வேன்.*

[*வசிட்டரையணுகி அவரடிபணிய*]

---

(1) நற்பொருள்:—*நலந்தரும் பொருள்.* (இராமன்)

(2) இனியவன்:—*அமுதினுமினியன்; இனி + அவன்.*

வசி:—குறைதீர்ந்து நிறைந்தோங்குவீர். இவ்வாதனத்தமர்வீர். (இருவரும் அமர) இளங்கோவே! நீதியும் தருமமும் நிலை பெறவேண்டியே, ஈண்டியாம் அமர்ந்துளோம். சாகரம் தோண்டிய சகரகுமரரும், கங்கையைக் கொணர்ந்த நும் பகீரதனும், வாய்மையைக்காத்த வள்ளல் அரிச்சந்திரனும், மற்றும் வானவர்க்குதவிய வேந்தர்பலரும் தோன்றிய தொல்குலத் துதித்தவன் நீ. தந்தை தசரதனோ, சத்தியங் காத்து, உத்தமலோகம் அடைந்தனன். மைந்தன் இராமனோ, மன்னனுரையேற்று, மாநகர் அகன்றனன். இருவரையிழந்தே இருநிலம் இடருறுகின்றது.

பரத:—அன்று யான் இவணிருந்திடின், அண்ணலை இந்நகரகல விட்டிரேன். அருமைத் தந்தையும் ஆருயிர் துறந்திரார்.

சும:—வேந்தனே வேண்டினன் அவனை ஓர்தினம் ஈண்டுறைந்து பின்னரே கான்செல. ஆற்றல்சால் கோசலையும் பலவாறு பன்னியிரந்தனள். வீரன் இலக்குவனும் பேரவச்சீற்ற மொடு சீறியெழுந்தனன். அவன் சீற்றக்கனலையும் ஆற்றி யொழித்தது அக்காளமேகம்.

சத்:—[1] முன்னவன் எண்ணம் தவிர்க்க ஒண்ணுதெவர்க்கும்.

வசி:—அரசிளங்கோவே!

“ கோனிலை திரிந்திடிற் கோணிலைதிரியும்
கோணிலைதிரிந்திடின் மாரிவறங்கூரும்
மாரிவறங்கூரின் மன்னுயிரில்லை
மன்னுயிரெல்லா மண்ணாள்வேந்தன்
தன்னுயிரென்னுந் தகுதியின்றாகும். ” —மணிமேகலை.

அரசன் இல்லையேல், அரியதொரு தருமமில்லை. அவனியில் அது நிலைபெற, நீ சுடர்முடி சூடுவை.

பரத:—நான்மறையாள! உமது முக்கிய நோக்கம் என்னை மன்னவனாக்கவோ?.

வசி:—இப்பேரவை யமர்ந்திடு மூதறிவுடையோர் சீரியகருத்தும் அதுவே. மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்.

---

(1) முன்னவன்—மூத்தோன்; ஆதியங்கடவுள்.

பரத:—மறையவர்திலக! முறை தவறிடின் மரபு முடிவுறும். முழுதும் இவ்வையகம் முறைகெட அழியவா? தலைமகற்குத் தனி முதற் பதவியும், தம்பியர்க்கு அவர் பதப்பணிவும், தகவுடைத்தென்று அறிவித்துளீர். மறைமொழிப்படி, வழிமுறை வரிசையில் குலமுதல் தனக்கும், அவ்வழிப் பிறக்கும் இறைமகனவற்கும், உற்றதிவ்வரசு. மற்றெவர்க்கும் இவ்வாக்கமிலை. பரமகுருவே! ஆங்கது மரபலவோ? முன்னவன் அரசைப் பின்னவற் காக்குதல், நன்னெறி முறையோ?

வசி:—முறையிலதொன்றை முடித்திட நினையோம். கொடையறம் கோறல் கொடிதெனக்கருதி, வளநகர் உனக்கே வழங்கினன் அரசன்.

பரத:—வேதிய! இது நீதியோ? முன்னம், அப்பேரவையில் மன்னவர் அவற்காக்கிய அரசு, மீட்கவும் படுமோ? தன்னலம் கருதியோ, என்னலம் கருதியோ, இந்நிலம் கோரியதென் அன்னையின் குற்றம்; அன்னவள் மனம்போல் மண்ணைனக்காக்கியது, மன்னவர் குற்றம்; மாமகனவனைக் கானகம் உய்த்ததோ, இவற்றினும் பெருங்குற்றமாம்; இத்தகைய குற்றங்கட்கு, உற்றதுணையாய் உதவுவது, எவற்றினும் கொடுங்குற்றமே. [1] புரோகிதர் சூழ்வினை புவனமூன்றறியும். அன்று, திருமகளை அண்ணலொடு சேர்த்தனர், அக்கோசிகமித்திரர்; இன்று நிலமகளைப் பிரித்தனர் அவர் பகைவர்.

சும:—சிறுவ! அருமறைப்பொருளை அன்றருளிய குருமொழியே, ஒருமொழியென்றறிவை. மறுமொழியுனக்கிலை. குரவரை யிகழவா, கற்றதுங் கேட்டதும்?

பரத:—குலமுறை அவலமாய்ப் போகவா? ஆயும் புலவர் அறிவா இது? நீதிவழுவா நெறிமுறை என்னுவது? (தனக்குள்) போதிப்பவருளர்; சாதிப்பவரிலர்.

சும:—பரதா! வரன்முறை காத்தல் வழக்கே; வாய்மொழி தாத்தலோ, வானத்துயர்ந்தது.

(1) அசுரகுரு சுக்கிரன்,

பரத:—[1] பேய்மொழியேற்றிடில், பெரும்பழியுற்றிடும். (தனக்குள்) இப்பாழுலகின் உலக நடையை என் சொல்கேன் ? கைதவமலாது செய்தவமிலையே ! (வெளிப்படையாய்) எவ்வகையினும், அவ்விரவிகுல திலகனுக்கன்றி, மற்றெவர்க்கும் ஏற்காதிவ்வயோத்தி அரசு.

வாம:—ஆம். தானே தனக்குவமன். பிறப்பினும் சிறப்பினும், பொறுமையினும் பெருமையினும், வாய்மையினும் தூய்மையினும், நுண்ணறிவினும் தண்ணளியினும், கொடையினும் படையினும், ஒப்புயர்வற்றவன் அச்செப்பரியன் ஒருவனே.

எல்லோரும்:—உண்மை. முற்றினும் உண்மையே.

சும:—பரதா ! அப்பெருந்தகை இவணிருந்திடில், நீ புகன்றதும் ஒருவாறு பொருந்தும்.

பரத:—இந்நகர்தங்கி யான் இருத்தல்பற்றியோ, நீவிர் இருவரும் என்னையிவ்வாறு வற்புறுத்துவது ? அங்ஙனமாயின், அரைக்கணமும் இங்கிரேன்.

[போகயத்தனிக்கிறான்.]

சும:—பொறு. அது சரியன்று. பாரினைக் காப்பது, உன் புகழ் குலப் பொறுப்பே. இருவரும் அகன்றபின், இங்குள இருவரில், முன்னவன் நீயே. ஆதலின், கடமைகடவாது அவனியாளுதி.

பரத:—ஆளவா ? மாளவா ? என்ன அநீதி! அந்நெடியவன் முடி புனைய, அக்கொடியவள் இடையூறிழைப்பது ! இறைவனும் அதற்கிணங்கி, இராமகனை இரக்கமின்றித் துறக்கவும் துணிவது! தன்னலங்கருதா முன்னவனெனிலோ, அன்னையின் ஆணையைச் சென்னியிற்றாங்கியே, இந்நகர கல்வது ! மந்தரையுரைத்த மந்திரம் செழிக்க, இம்மந்திர முனிவரும் அத்தந்திரத்தலைவரும், இன்றிவண் நின்று சந்தியுரைப்பது ! இங்ஙனம் நிகழ்த்தவோ நீவிர் இவ்வ

(1) பேய—கைகேயியைக்குறிக்கும்.

வைக்கண் அமர்ந்திருப்பது? இதுவோ எனக்கு உரைக்கு மிதமொழி? நினைவழிக்கும் வினைவழிக்கு என்னையா ளாக்குவதா? என்னையே நோவனோ? என்வினையினை நோவனோ? வந்த [1]விதியினை நோவனோ? தாய்செய் சதி யினை நோவனோ? இம்முநியோர் மதியினை நோவனோ? ஏதுமறியேன். என் செய்வேன்? நல்வினையில்லா வல் வினையேன்! பழியொடு பாவமெய்தி அழிவன்.

வசி:—பங்கமில் குணத்தோய்! வருந்தற்க. திருமகள் துணையும், தனது [2] மெய்வலியும், இளையவன் புணையும் துணையென இருக்க, அக்கோமகனுக் கோர்குறையும் நேர்கிலதெங் கும். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பே. தலை மகன் [3] நிலையெண்ணி நலியவேண்டா.

பரத:—இறைநிலை அறியவும் தரமோ? பிரியவும் தரமோ?

வசி:— சான்றோர் நெறியிற் சாலநிலைத்த உத்தம! நலமுறுமென் மொழிகேட்டும், இன்னுமிவ்வாறு அலமருவையோ?

பரத:—குலமுதல் அவ்வனமதில் வருந்த, நலமிலேன் இன்னுமி ருந்தேன்.

வசி:— புண்ணிய! முன்னர், அக்கோசிகன் தன்னருள் தாங்கிய விஞ்சையும், பின்னரெய்திய பேறும், பிழைத்தவோ? மாமுனியின் வேள்வி காத்து மறையவர் பேரருள் பெற் றனன்; களித்தனன் அக்கௌமாரகேளியால்; சங்கரன் வன்சிலை வளைத்துச், சானகியைச் சீருறவே சேர்ந்தனன். பரசுடைய போர்வீரன் பெரும்பகையைப் பற்றற அறுத் தனன். அவ்வாறே, கானுறையும் மாமுனிவர் அடிபணிந் து, வானவர்கள் இடர் களைந்து, மாண்புடனே மீண்டிடு வன். வருவதெலாம் நலமெனவே நினைவாய். என் இத மொழி ஏற்பாய். தாதையின் ஆணையில் நிலைத்து நிற்பது, தனையர்தம் கடனே. ஆதலின், ஈரேழாண்டுகள் அவன்

---

(1) விதியினை—வேந்தன் ஆணையை; வினைப்பயனை.
(2) மெய்வலி—உடலின் வன்மை; சத்திய பராக்கிரமம்; சத்தியமே பராக்கிரமம்.
(3) நிலை—நிலைமை; நிற்குமிடம். (பாதுகை)

அரணியம் உறைந்து மீளும்வரை நீ தரணியைத் தாங்குவை.

பரத:—மறந்தும் தவிரேன் மன்னர்தம் மரபினை. பிறர் பொருள் நயக்கும் புல்லியனல்லேன். நிந்தைக்கிடமாய் என்றும் நின்றிடேன். நிதியும் வேண்டேன். பதியும் வேண்டேன். பரமநிலை யொன்றையே என்றுமே வேண்டுவன்.

சும:— நீ குவலயமேற்பதே கோமகன் கருத்து. நின் பொறுப்பினைத் துறப்பையோ ?

பரத:—சராசரம் அனைத்தையும் செவ்வனே காக்க இத்தராதலத் துதித்தவன் அப்பராபரன். அவன் பாபரகிதன்; சாப சகிதன்; சத்திய பராக்கிரமன்; உத்தமோதாரன். உடைமையைக் காப்பது, உடையவன் பொறுப்பு. அடிமைக் கேற்குமோ அச்சிறப்பு? ஒப்பாரு மிக்காரும் இலையாய சேய் இருக்க, எக்காலும் ஒப்பேன் இப்பேரரசு.

வசி:— நெறிமுறை திறம்பா நின்மலா ! நீ தூயசிந்தையன்; சுயநலம் கருதாச் சுசீலன். நின் உண்மை நிலையொன்றையே உறுதியென எண்ணினை. இடருறுவார்க் கிரங்குவதினும், சிறந்ததொரு தருமமில்லது. திங்கள் கறையிருளை நீக்கக் கருதாது, உலகின் நிறையிருளை நீக்குவது நோக்குவை. அரசினை நீ ஏற்றாலன்றி, உலகுறு துயர் தீருமாறிலை.

பரத:—மும்மையு முணர்ந்த முனிபுங்கவ! எல்லாம் அறிந்தவர் நீவிர். ஏதும் அறியாதவன் யானே. அப்பதித பாவனன் பொற்பாதமன்றோ, பாவம் தீர்ப்பதும், சேமம் சேர்ப்பதும்.

> " வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கு
> யாண்டும் இடும்பையில." —திருக்குறள்.

துன்பமகன்று இன்பமமர, யான் இன்றே செல்லுவேன். சென்று, அச்செம்மலைக் கொணர்வேன். அதுவரை யான் மெய்வருத்தம் பாரேன்; பசி நோக்கேன்; கண்துஞ்சேன்; எவ்வெவர் தீமையும் மேற்கொளேன்; செவ்வியருமையும் பாரேன்; அவமதிப்புங் கொள்ளேன். கருமமே கண்ணாயினேன்.

சும:—கதிரவன் குலவிளக்கே! அடுத்து முயன்றாலும், ஆறு நாளன்றி, எடுத்த கருமங்களாகா. அவ்வறம் துறவாப் பெருந்திறலான் தான் கொண்ட விரதம் தவிரான். புகன்ற ஆண்டுகள் பதினான்கும் கடந்தாலன்றி, இந்நகர் நாடினையான்.

பரத:—கன்னெஞ்சனோ என் காகுத்தன்? கருணையங்கடல் அல்லனோ?

சத்:—அடியவர்க் கெளியன் அவன். திருமகளை முன்னிட்டு, ஒரு முறையுள்ளமுருகிச், சரணமென்றவன் திருவடியடைந்தக்கால், பகைவனேயாயினும், பாவியேயாயினும், அஞ்சேலென்று அருள்கொடுத்து, அவர் இடர் களைவன். அவனது அரியபெரு தருமம் அதுவே.

பரத:—ஆம். துணைவ! நன்குணர்த்தினை.

> "தனக்குவமையில்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது." —திருக்குறள்.

நாம் வணங்கத்தான் இணங்குவன். அவன் இணையடியை அடையின், அடிமையைக் கைவிடான். [1] அக்கோதிலாதவன் அடிபணிந்து, தீதிலாதவனாவேன். திருவருள் பெற்றாலன்றித் திரும்பேன். அனைவரும் உடன்வர விரைவினில் பறையறைவிப்பாய். அந்தணரே! அமைச்சரே! அன்பரே! வருவீர். ஆரா அன்புடன் எம்பெருமான் இடம் அடைவோம்.

வசி:—தன்னலம் கருதார் நன்னலம் பெறுவார்.

[எல்லோரும் போகிறார்கள்.]

களம் 7 முற்றிற்று.

(1) கோதிலாதவன்—குற்றமில்லாதவன்; குற்றமில்லாத தவத்தான்; கோதில்+ஆதவன்.

அங்கம் 2

களம் 1

இடம்:—சித்திரகூட பருவதம்.

பாத்திரங்கள்:—இராமபிரானும் அவர் மனைவி சானகியும்.

இரா:—திருமகளே! இத்திருமலையை ஓர் மதகரியென மதிக்கின்றேன்.

சான:—மதிப்பது இதன் பருமையைப் பற்றியோ? உருவமே நோக்கியோ?

இரா:—பெருமையும் கருதியே. தன்னடி அடைந்தோரை உன்னத பதவியமர்த்தி, உயர்விப்பதிது.[1]

சான:—ஆம். பணிபவர்க் கெளியனாய, பரமன் உயர்குணங்களை, முற்றிலும் இது பெற்றுளது.

இரா:—சானகி! இதன் அமைப்பைச்சற்று உற்றுநோக்குவாய். வானளாவியுருண்ட அச்சிகரங்கள் இரண்டும், உத்தம கரியின் மத்தகங்களை யொத்துள. வெண்ணிறம் அமைந்து முன்னுற வளைந்த பளிங்குகள் இரண்டும், அவ்வாரணத்தின் இருதந்தங்களை யொக்கின்றன. இவ்வரும் பெருந் தருவினின்று இழிந்துள விழுதுகளெனிலோ, இத்தாழ் வரைகளில் நிறைந்துள நீரைப் பருகாநின்ற, தூங்கக் கரியின் துதிக்கையை நிகர்த்துள. அக்குகைகள் இரண்டும், கடகரியின் இரு செவிகளெனச், செப்பலாம். அன்றியும், நறுமணம் நிறைந்த இவ்வழி வரும் அருவிகள், அக்கைம்மாவின் மதநீரைப் போன்றுளவன்றோ?

சான:—உண்மை. எத்தகவினும் உத்தம மத்தகஜத்தை ஒத்தேயுளது இச்சித்திரகூடம். ஒப்புயர்வற்றவர்க்கு ஏற்றதொரு பொருப்பே இது. ஆதிமூலமென்று அகங்கரைந் தலறிய ஆனைக்கு, அன்று அபயம் அருளிய அருளாளன்

---

(1) யானை தன் காலைப்பிடித்த பாகனை தலைமேல்வைத்துக்கொள்ளும்.

தனக்கும் அருள, இக்கானகம் அடைந்தனன் எனக்க ருதி, இக்கிரிராஜனும் அக்கரிராஜன் உருவெடுத்துச் சுமந் துளன் உம்மை. இதுகிரியோ, மதகரியோ என்று, இமைய வரும் இமைப்பிலர் போலும்; உமது திருவிழாவிற் கேற்ப தொரு [1] பெருவிழாவும், இங்கு அமைந்துளது. அலர்ந்த மலர்கள் ஆங்கு அடர்ந்திருப்பது, களியுறும் களிற்றின் கழுத்திலணியும் கதிர்மணி யணிகளைப் பழித்துளது. விண்ணின்கண் அவ்வெண்ணிறக் கொண்டலும், கொற்ற வெண்குடையெனக் கவிந்துளது. வானவரும் உவந்தளி த்த நாண்மலர் அலங்கலென வளைந்துளது அவ்வானவில். செண்பகமலர்கள், அச்சுனையில் அசைந்தசைந்து ஆடு வது, தீபம் தருவதைப் போன்றுளது. அன்றியும், இங்கு நடைபெறும் விழவினைக்கண்டு, கொண்ட இன்பம் உள் ளடங்காது, குயிலினம் இனிமையாய்க் கூவவும், வண்டி னம் மலர்களின் தேனையுண்டு பாடவும், மயிலினம் அழகிய தோகைகளை விரித்தாடவும், இவ்வந்தம் அமைந்த சோலை யே நடனசாலையாயது. [2] நடுநாயகமாய் நாயகர் அமர்ந்து ளர். முனிவரும், அவர் பணிவியரும், இவ்வரியதொரு நாடகங்கண்டு, மகிழ்வினையடைகின்றனர். இவ்வுயர்வரை யின் இயற்கையழகுக்கு, அவ்வளநகரின் செயற்கையழகு அணுவளவும் இணையிலை. [3] ஆய்ந்தறிந்து அருந்துவார்க்கு அருமருந்தும் இங்குளது.

இரா:—உண்மை. ஓர்ந்துணர்ந்து ஒப்பின்றி வேந்தர் உலகாளி னும், ஆங்கு, மாந்தருளம் மகிழாது சாந்துணையும் ரங்க டமே. மண்ணவர் சுற்றமும் மன்னனைச் சாரும். அன்னை கைகேயி அன்பாய்க் காத்தனள்.

சான:—அங்ஙனம் காத்தமையால் வாய்த்ததென் பாக்கியமே.

இரா:—மாமலைளே! இம்மாமலையின் மாண்பு அளவிடற்கரிது.

---

(1) காடாளுவதற்கேற்ற முடிக்கோலமும் விழாவும்.
(2) லீலாவிபூதியில் திருமாலும் திருவும் நடிக்கின்றனர்.
(3) தேடியெடுப்பவற்கு மூலிகையும், மறையும் மருந்தும்.

புண்ணியம் புரிந்தோர் எண்ணிய கருமம், இங்கெளிதினில் முடிவுறும்.

சான:—திருமாலை வழிபடும் அத்தவமுனிவர், இத்திருமலையின் தூயநதியில் நீராடி, நீடியகாலம் தீயிடை நின்று, தவம் புரிவதென்னே? பரிபாககாலம் இன்னும் பிறக்கவில்லை போலும்.

இரா:—தூயவன்கண் [1]அன்புடையார்க்கு வைகுந்தம் தூரமன்று. தம்பரமென்று தவம்புரிவார் இன்புறவென்றும் விளம்பனமாகும். இன்பத்தின் இறுதிகாண இனிது பின் வந்தனே. [2]மாலுறும் இச்சோலைமலை உன்னை மகிழ்விக்கின்றதோ?

சான:—கண்ணுங் கருத்தும் கவருங் கருமுகிலே! காவலனும் கணவனுமாய்க் கலந்துநின்ற காரணனே!

"பதியேயெம் பரனேயெம் பரம்பரனேயெமது
பராபரனே யானந்தப் பதந்தரு மெய்ஞ்ஞான
நிதியே மெய்ச்சிறைவே மெய்ந்நிலையே மெய்யின்ப
நிருத்தமிடும் தனித்தலைமை நிபுணமணி விளக்கே
கதியேயென் கண்ணேயென் கண்மணியே யெனது
கருத்தேயென் கருத்திலுற்ற கனியே செங்கனியே
துதியேயென் துரையேயென் தோழாவென்னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே."

[திருவருட்பா]

அமுதனைக்கண்ட கண்கள்மற்றொன்றினைக் காணா. ஆராவமுதமே! எனதுளத்திடை நிலைத்துளது உமது முடிவிலா வடிவழகொன்றே.

இரா:—என் அழகுக்கும் அழகு செய்யும், உன் வடிவழகினுக்கு உவமையுண்டோ?

சான:—[3]முழுமணிப் பூணுக்குப் பூவொன்று வேண்டுமோ?

---

(1) அன்பு—மஹாவிசுவாசம்.
(2) மாலுறும்—திருமாலுறையும்; மயக்கமுறும்.
(3) யாரே அழகுக்கழகு செய்வார்.

இரா:—என்ன இருப்பினும், [1] உன்னையன்றி, என்ன உண்டெனக்கு? நான் உன்னையன்றி யிலேன். நீ என்னையன்றி யிலை.

சான:—அதுவே போதும் என்னைத் துறந்துவந்து இங்கு இன்புற நினைத்தீ [2] ரன்று.

இரா:—மாமகளே! [3] நிலையிலா நின் மனநிலை யுணர்ந்ததும், இசைந்தேனன்றோ ?

சான:—[4] சமயத்திற் கேற்பதொரு நிலை நிற்பவர் நீரே. அன்று, வரிசிலையொன்றை வளைத்து, மங்கையொருத்தியை மணந்தீர். மற்றுமோர் [5]வெற்றிக் கொடிபடையவே, [6] வானவில் நோக்கி ஆவலுடன் வந்துளீர்.

இரா:—விடுகணையும், தொடுமனையும், புகலுரையும், ஒன்றென்று சகமறியும்.

சான:—ஒன்றேயாகில் இக்குன்றம் உறையீர்.

இரா:—உய்யும்வகை நினைந்துயர்ந்தேன். உயர்நலம் அடையவே, இவ்வரையினில் [7] நின்றேன்.

சான:—நின்றநிலையுணர்ந்து [8] அருந்துணையுமாவேன்.

[புன்னகையுடன் இலக்குமணன் அணுகிவர]

இரா:—இலக்குமணா! நின் நகைமுகம் இன்று காணப்பெற்றது வியப்பே.

இல—அண்ணா! சேய்மையிற் காணவே [9] செஞ்சடைப் பிரானெனப் பொலிவுற்றனை.

---

(1) உன்னை—ஞானசக்தி சுருபத்தைக் குறிக்கும்.
(2) அன்று—அக்காலம்; அல்ல.
(3) நிலையிலா—மங்கையர்மனம் நிலையிலாமை; செல்வம் நிலையாமை யுணர்க.
(4) சமயம்—காலம்; மதம்.
(5) வெற்றிக்கோடி—ஜயஸ்ரீ.
(6) வானவில்-இந்திரதனுசு; வான் + நவில்; பாற்கடலடைந்துமுறையிட வானவர்க்களித்த வாக்கு.
(7) நிலைத்திருக்க வேண்டிடில் படுத்துச் சுகித்திருப்பர். வேறு இடம் (தண்டகாரணியம்) நாடியதை நின்ற நிலை குறிக்கும்.
(8) அடியவரைக் காக்கவும், கொடியவரை மாய்க்கவும், தேவியின் துணையின்றி, இயலாது இறைவனுக்கு.
(9) அரக்கரை யழிக்க வந்ததை அறிவித்ததாகும்.

இரா:—அவ்வாறு ஐயுறக்காரணமெதுவோ?

இல:—அடர்ந்த வெண்ணிறக் கொண்டல் எங்கும் படரவே, இக் கரிகிரியும் அவ்வெள்ளியங் கிரியென, விளங்கலுற்றது. வெண்ணீறணிந்த கண்ணுதற் கடவுளெனக் கண்டேன்.

சான:—கருமுகிலே! நும் கரியதிருமேனி காணநாணியோ, கொடையினிற் கோதிலாவள்ளலெலன வெட்கியோ, நீருண்ட மேகமும் தன்னிறம் மாறி வெண்ணிறமாயது.

இரா:—இளைஞ! நீ நகையுற்றதும் இதுபற்றியோ?

இல:—அருளே வடிவுகொண்ட அருட்பெருந்தேவியர் அருகினில் இருக்க, முப்புரம் எரித்த சிவபெருமானுக்கு, எப்புரமெரிக்க ஒண்ணுமென, எண்ணினேன்.

இரா:—அப்பொன்னிறப் பெருமானென்று என்னை நீ எண்ணினும், இப்பொன்னார் மேனியளை, மரகதமணி மலைமகள் உமையென நினைந்ததும், எங்ஙனம்?

இல:—அரவிந்தநயன! அன்னையின் பொன்னடிக் கமலமலர் ஒன்றையே கண்டு யான் பணிவது. அண்மையில் வந்ததும், என்னையாள் அண்ணலும், உன்னைநேர் அன்னையும், கண்டு யான் உவகை கொண்டனன்.

இரா:—துணைவ! [1] கருணையுள்ளவரை, பகைத்தவர் எவரையும் அடர்த்திடவொண்ணாது. செய்மையிற் கண்டதும் கொண்ட நின்ஐயம் கேட்டு அகமகிழ்ந்தேன். தன்னை உருவிலியாக்கிய கண்ணுதலென்று என்னையஞ்சி அம்மாரன் இப்பாலே சாரான். தபோதனர் அருந்தவமும் இடையூறின்றி நிறைவேறும்.

சான:—ஒருருவரொருவரை ஈருருவரென்பர் இருநிலத்தோர்.

இல:—மதிவதன மதன! நின் [2] திருவுருவைக் காணின் [3] அத்தீ

(1) கருணையுள்ளவரை—கருணைக்குணமிருக்கும் வரை; கருணைரூபிணி சீதை) உடனுறையும் வரை.

(2) திரு—பேரழகு; சீதை.

(3) த்வீபாள்பவன்—காமத்தீயைக் கிளப்பும் மன்மதன்; த்வீபத்தை (இலங்கையை) ஆள்பவன் இராவணன்.

வினையாள்பவன் 1 உருமாறிவந்து திகைக்கச் செய்வனோ?

இரா:—வானவரைவென்ற 2 வீரனேயாயினும் என்னையும்வெல்ல வல்லனோ அவ்வில்வலவன்?

இல:—வெல்லரிய வீரராதலின், 3 அப்புல்லியன் எதிர்பட நில்லான். ஆயினும், 4 வலியிலா முனிவர், என்செய வல்லர்? அவரது தவமும், அவமாகுமோ?

இரா:—சொல்லொன்றால் அவர் எவரையும் சுடவல்லர். அன்றியும், 5 போதகமனையவன் பொன்னுழித் துணையிருக்கத், தீதுகளிழைக்கத் துணிந்தவன் அணுகினும், என்னாம்? பஞ்சபாணன் அம்புக்கு அவர் என்ஞான்றும் அஞ்சார்

இல:—இருளகல விளங்கும் அறிவரிய பொருளே! குன்றத்திட்ட 6 விளக்கின் ஒளியிருக்க, இருளுக்கிடமில்லை.

இரா:—என்னே மானிடர் மடமை! நலம் அளிப்பது நாடெனவும், கேடிழைப்பது காடெனவும், கருதுகின்றனரே!

இல:—குலமுதலே! இல்வாழ்க்கை நல்வாழ்க்கையலவோ? நாடு தங்கி நலப்பெற வழியிலையோ?

சான:—காவல! காடுறைவோர் கூடடையாரோ?

இரா:—இருவர் குறிப்பையும் இன்றுணர்ந்தேன். பின்படர உங்கட்கு இடம் தந்து இணங்கியது, என்பிழையே. என் பொருட்டு, எவரும் இடருற, இடம் கொடேன். காயும் வனத்திடை இப்பூங்கொடி வாடிவதங்கிடும். பாயும் புலி காணின் இம்மடமான் அஞ்சும். இளைஞ! இம்மெல்லியளை உடன்கொண்டு நாடேகுவை. அன்னையரும் அழிவேந்தனும் ஆறுதலடைவர் உங்கள் ஆதரவால.

---

(1) உருமாறி—மதனன் பெண்ணுடையுடுத்து; இராவணன் சந்நியாசி வேஷம் தரித்து.
(2) வீரன்—மன்மதனையும் இராவணனையும் சுட்டும்.
(3) மன்மதனையும் இராவணனையும் குறிக்கும்; மதனன் உருவிலான்; இராவணன் அறிவிலான்.
(4) மெய்வலியும் மனவலியும்
(5) போதகமனையவன்—யானையை யொத்தவன்; இதயகமலத்தை மனையாயுடையவன்; பாற்கடலிற் பள்ளிகொண்டவன்.
(6) விளக்கு—ஆதியஞ்சோதி; வேதாந்த தீபம்.

சான:—[1] அந்தரங்கப்பெருமானே! மண்ணிற்புலியை [2] மதிமான் அஞ்சுமோ? மனையை நீக்கிப், [3] பெருமானை நோக்கிய, என்னையும் நீக்கவா? தாங்கொணாத் துயருக்காக்கவா? சோகமகல யான் [4] அசோகத்தரு நிழலே நிற்பன். நும் பிரிவெனும் நிரயத்திற்காளாக்க என் பிழைத்தேன்? இறையும் அகலகிலா, என்னையகற்றி என்பெற நினைத்தீர்? எத்துயர் வரினும் பொறுப்பேன். நும்பிரிவெனும் துயருறின் மரிப்பேன். பெண்கொடியை வதைசெய்தார் பெருமையும் என்னாம்? நீரிலாது நானில்லை.

இல:—சரணியனே! சரணம் புகுந்தாரை உன் போலாக்கும் [5] அரணியனே!

"உமதடிக ளடைகின்றே னென்றொருகா லுரைத்தவரை
அமையுமினி யென்பவர்போ லஞ்சலெனக் கரம்வைத்துத்
தமதனைத்து மவர்தமக்கும் வழங்கியுந்தான் மிகவிளங்கும்
அமைவுடைய வருளாள ரடியிணையை யடைந்தேனே."

—வேதாந்ததேசிகன்

[6] அங்கயலைக்கும் வினையால் அலமரவோ, உனக்கும் [7] அங்கமலைக்கும் அடிமைப்பட்டேன் உங்கட்குற்ற பணியியற்றி யான் பிறந்த பேறடைந்திடவே, பின்படர்ந்தேன். இச்சுவைதவிர யான்போய், இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன். நிரந்தரம் ஆட்பட்டு யான் நின்றிடின், அப்புரந்தரனும் எனக்கிணையாகான். விண்ணுளாரினும் சீரியனாவேன். நற்றாயினும் இனியாய்! சற்றாயினும், இனியாய் நாடு நாடாவகை, நாடுவாய். நின்

---

(1) அந்தரங்கம்—ஏகாந்தம்; அம்+தரங்கம்—அழகிய பாற்கடல்; அந்தம்+ரங்கம்—ஸ்ரீரங்கம்.

(2) மதிமான்—புத்திமான்; சந்திரனில் உள்ளமான்; இராமசந்திரனுடைய மான் (சீதை)

(3) பெருமானை—கடவுளை; மாயமானை.

(4) அசோகத்தரு—சோகம் தீர்க்கும் தரு (கடவுள்); இலங்கையிலுள்ள அசோகவனத்தின் தரு.

(5) அரணியன்—ரக்ஷகன்; காட்டிலுள்ளவன்.

(6) & (7) அங்கம்+அலைக்கும்; அம்+கமலைக்கும்.

அருள் உண்டெனில், உய்வோம். இன்றெனில்; இருவரு மில்லை. திருமாலே! மாலுறும் இத்திருமகள் நினைவினை நினைவாய்.

சான:—அருளாளா! ஆளாகி, யஞ்சாதிருக்க, அருள் புரிவாய். களைகண் [1] மற்றிலார் இடுக்கண் களைவாய்.

இரா:—இருவர் துணையுமிருக்க, என் [2] அருந்தவப் பலிக்கும்.

களம் 1 முற்றிற்று.

—oo—

களம் 2

இடம்:—சிருங்கிபேரபுரத்தைச் சார்ந்த ஒருகாடு.

பாத்திரங்கள்:—வேடர்கள் பிரவேசம்.

கோங்கன்:—அண்ணே! என்ன அநியாயம்? நம்பொ ராமசாமியெ தொரத்திட்டாங்களே படுபாவிங்கொ! நல்லா இருப் பாங்களா?

சப்பாணி:—பண்ணபாவம் சும்மா உடுமா? பின்னேயேவந்து கொல்லாதா? துள்ளும் துள்ளல் எத்தினி நாளைக்கு? பாவம்! சாமீன்னு சாமியா! நாப்பொதான் பாத்தோமே! கமலக்கண்ணும், பவளவாயும், மாணிக்கமேனியும், அய கன் அயகே அயகு.

(1) இருவரையும் முனிவரையும் குறிக்கும். . இலக்குமியின் புருஷகாரத்துவம் விளக்கப்பட்டது.

(2) துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்.

கோங்:—ஆமாம். பாக்கப்பதிஞயிரம் கண் ஒணும். என்ன காந்தி என்ன சாந்தி! என்ன மனம்! என்ன குணம்! என்ன நயம்! என்ன விநயம்! என்ன அன்பு! என்ன அம்பு நகரத்திலே மெச்சாதவங்கொ இல்லையாம்.

சேங்கன்:—வந்தவெனெ அதுதான். அல்லாரும் ஒத்தனெமெச்சிக்கிட்டா, பாவிங்கொ பொறுக்கமாட்டாங்கொ. அயல் வாய்ந்தா, அஞ்சுபட்டினி. பொறுமெயேப் பிடிச்சா, சுஞவிலெ உடாது.

கோங்:—ஆமாம். ராசாவுக்கு பெரியமவன் ராமசாமி, பெரிய ராணி வவுத்திலே வந்தாரு. பட்டம் கட்டணுன்னு ராசா சொன்ஞராம். மந்திரிகூட மெத்த சரீன்னு சொல்லிட்டாராம். அல்லாரும் ஒத்துக்கிட்டாங்களாம். ஆஞ, பாவிங்கொ என்னமோ சூது பண்ணி, எப்படியோ ஒட்டிட்டாங்களாம்.

சப்:—சாமி ஏன் ஒத்துக்கிச்சு ?

கோங்.—ஆசையில்லே; பொறுமெசாலி. ராசா போன்ஞன். பேசாமே வந்திட்டாரு. அப்பன் பேச்சுக்கு ரெண்டில்லே.

சப்:—நன்ஞ, சாமிபோல இக்கணும். இருந்தா, சாமிபோலெ ஆவலாம்.

சேங்:—அல்லாம் போய் அல்லாடலாமா ?

சப்:—சொத்து என்ன நித்தியம்? செத்தா கூடவருதா ? தனத்தாலே பயம், பகெ; கொலெ; எத்தினியோ எளவு. சொல்லி மாளாது. மொத்தத்திலெ மெத்த தொல்லெ. என்ன ஒணும்? உண்ண ஒணவு, உடுக்கக் கந்தே, அவ்வளவுதானே ? பண்ண பாவம் புண்ணியம் தான் பின்னேயேவரும்.

கோங்:—பாவிங்கொ பண்ண சூதுதான் என்ன ?

சப்:—அதுதான் ஒன்னும் வெவரமா தெரியலே.

கோங்:—காதிலே விஞந்தமட்டும் சொல்லேன்.

சப்:— அல்லாம் ஒரு பொம்பளெயாலெ தான்.

குகன்:—தொணெ இல்லாத [1] தனியன்னு, கொலெ பண்ண வாரான்.

கோங்:—சாமிக்கு இங்கே தொணெயா இல்லெ? நல்லவருக்கு அல்லாரும் தொணெ பொல்லாதவருக்கு அல்லாரும் பகெ. கோடிகோடியா வேடர்கூடி கும்பிட்டிருக்கோமே!

குகன்:—ஒருவர் தொணெதான் ஏன் அவருக்கு? வில்லெ வளெச்சா வெல்ல எவனாலாவும்?

கோங்:—வில்லெடிக்கணுமா? நெனச்சாப் போதாதா? சாமியுங் கல்லே? பாவிங்கொ சாம்பலாப் பூடுவாங்கொ. சிங்கம் போலெ தம்பி பக்கத்திலெ இருக்காரே! அண்டவுடு வாரா? சீறி எயுந்தா, சத்துரு செத்தான்.

குகன்:—அந்தப் பாடுதான் ஏன் அவுங்களுக்கு? பயமவன் யமன் போலெ இங்கிருக்கேனெ! ராமநாதருக்கு என்னகொறெ. நாடில்லேன்னு காடிக்குது.

கோங்:—பாவிக்கு நாடுமில்லெ; ஊடுமில்லெ; காடுமில்லெ.

குகன்:—கங்கையெ கடந்தான்னு; சாமியெ நாடுவான். [2] ஆறு கடந்து ஐயனெ நாடவா? எல்லேயிலெ கால்வைக்க ஆவுமா பாப்போம்.

> "ஆழநெடுந்திரையாறுகடந்திவர்போவாரோ
> வேழநெடும்படைகண்டுவிலங்கிடும்வில்லாளோ
> தோழமையென்றவர்சொல்லியசொல்லொருசொல்லன்றோ
> ஏழமைவேடனிறந்திலனென்றெனையேசாரோ"
>
> —கம்பர்.

அடே! படவுங்களெ இன்னிக்கி உடவாணும். தொறையிலெ ஒரு தோணிகூட இல்லாமெ, வெலக்கிவையுங்கொ; அல்லாவேடரையும் ஒரு நொடியிலெ கூட்டிக்கிங்கொ; வழியிலெ வலெயெவிரிச்சு வையுங்கொ; படையெக்கண்டா நடுங்காமெ, எடுங்கொ வில்லும் வாளும்.

---

(1) தனியன்—தனித்திருப்பவன்; பற்றிலாக்கடவுள்.

(2) ஆறு—நதி; நல்வழி.

சப்:—ஆறிலும் சாவு; நூறிலும்சாவு. படைக்கும் பயமில்லெ; பாவிக்கும் பயமில்லெ. சாமிக்காக, சாவுக்கும் துணிஞ்சோம். வேடருங்கொ போடறபோடுலெ, பாவிங்கொ காடுவுட்டு ஓடணும்.

[வேடர்கள் வேகமாகப் போகிறார்கள்.]

குகன்:—(அடங்காச் சினங்கொண்டு) என்தொணையவன் தவமாள, இவ்வெளியவன் புவியாளவா ?

“ அஞ்சனவண்ணனென்னாருயிர்நாயகனாளாமே
வஞ்சனையாலரசெய்தியமன்னருபவந்தாரே
செஞ்சரமென்பனதீயுமிழ்கின்றனசெல்லாவோ
உஞ்சிவர்போய்விடினாய்குகனென்றெனையேசாரோ ”

—கம்பர்.

ஆண்டவன்பகை அடிமையின்பகையே. கையம்பு தணலெ கக்குது. பாயாதோ பாவிமேலெ, தப்பியும் போவானா ! நன்னிகெட்ட நாயா நான்? வரட்டும். என்ன ஆணவம் ! மண்ணா வேணும் ? பொணமா பெரட்டி, கரையிலெ உருட்டி, வெள்ளத்திலெ தள்ளறேன். பழிக்குப் பழி வாங்க இதுதான் வழி. நான் முழிச்சமுகம் நரிமுகந்தான். காட்டுவேடன் சாமிக்கும் பட்டம் தந்தான்னு நாடெல்லாம் கொண்டாடும். (அண்மையில் வரும் இருவரையும் நன்கு நோக்கி) என்ன ! போர்க்கோலமில்லெ ; மொகத்திலெ களையில்லெ; தெம்பில்லெ; கோவக்குறியில்லெ. தலையிலெ சடைமுடி ; எடையிலெ மரவுரி; ஓடலிலெ புயுதி; கையெக்கூப்பி கும்பிட்டுக் கதறி அயுவறான். சீ ! சீ ! என்னமதி எனக்கு ! சாமிபின்னெ பொறந்தவங்கொ பாவம் செய்வாங்களா ?

கோங்:—எசமான்! வேசம்போட்டு நேசம் காட்டி, மோசம் செய்வாங்கொ. வான்கோயி மயில்போலத் தோணும். நெசம் அறியாமெ நம்பினா, நாசம் தான்.

குகன்:—மோசமோ நேசமோ, பேசினா தெரியுது. சேனையைச் சேத்து வருவோம்.

[இருவரும் போகிறார்கள்.]

களம் 2 முற்றிற்று.

களம் 3

இடம்:—கங்கை நதிக்கரை.

பாத்திரங்கள்:—சுமந்திரர் பரதன் சத்துருக்கன்.

சும:—பரத! பரம பாவனமான கங்கைமா நதியிது.

"கங்கை யென்றுல கேத்திய கடவுண்மா நதிவெண்
சங்கு சூலுளைந் தலறிய தடம்பணை தவழ்ந்து
கொங்கு யிர்த்தபூந் தடத்துலாய்க் குளம்பல நிரப்பி
யங்கண் மாநிலத் தமுதெனப் பரந்ததை யன்றே."

—நைடதம்.

இதன் இருகரையுடைய வேடுவர் தலைவன், ஒருவன் இங் குஹன். அவன்கணக்கிலா [1] நாவாயன்; விற்பிடித்த வீரன்; மேருவொத்த தோளன்; இராமன்பால் எல்லையிலா அன்புள்ளவன்; தூய சிந்தையன்; தாயினும் நல்லன்; அன்னவன் துணையின்றி இந்நதிகடக்க வொண்ணாது.

பரத:—காணரிய கருமுகிலைக் கானுறையும்வேடன் கண்டுகொண்டனனோ? அப்படியாயின், அவ்வன்பன் அடியினை யான் அடைவேன்.

சத்:—தொண்டர் அடிப்பொடியாட நாய்பெறில், கங்கைநீர் குடைந்தாடும் வேட்கை என்னைம்?

[பரதன் போகயத்தனிக்கிறான். குகன் வருகிறான்.]

குகன்:—சாமி! பண்ணபாவம் போவுன்னு, சேனெசனம் இந்த நதியிலெ முயுக்குப்போட்டுப் போவும். இன்பவெள்ளம் ஒண்ணான்னா, உள்ளம் நல்லா இருக்கணும். [2] வெள்ளம் வேகமாவருது. [3] கடல்தான்கதி. பாத்துப் பிழையுங்கோ.

பரத:—புரிந்தபெரும் பாவம் தீரவே, விரைந்துயான் வந்துளேன்,

குகன்—பாவம்செய்தா பரிபவம்தான். நீங்கோ யாரோ? எந்த ஊரோ? என்ன பேரோ?

---

(1) நாவாயன்:—கப்பலுடையவன்; நாவை பெற்றவன்.

(2) & (3) கங்கை வெள்ளம் கடலைச்சேரும்; உள்ளம் தவறாயின் சேனை வெள்ளம் கடலைச்சேரும்; காதல் வெள்ளம் கருணையங்கடலைச் சேரும்.

பரத:—அயோத்திமன்னர் மைந்தர் நால்வரில், இருவர் நாங்கள். இவன் பெயர் சத்துருக்கன்.

குகன்:—மெத்த புகழ்பெத்தவன், பரதன்னு சொல்லிக்கிட்டாங்கோ.

பரத:—அப்பாதகன் யானே. பழிகாரனும் யானே.

குகன்:—அப்போ அவர் நாட்டெ பறிச்சுக்கிட்டே. காட்டிலே தொரத்திட்டே. போதாதூண்ணு இங்கேயும் தேடி வந்திட்டே. வெட்ட வெளிச்சமா தெரியுது.

பரத:—பழிக்கென்றே பிறந்த பாவியாதலின், எந்துணைப் பழிக்கினும், அத்தனையும் ஏற்குமெனக்கு.

சும:—வேடுவர் தலைவ! இவனது வேடங்கண்டும், ஐயம் கொண்டனையா?

குகன்:—[1] நல்லவேடம்! கள்ளவேடமேன்? வேடமெல்லாம் வேடனிடம் பலியாது. ஆண்டவன் பகை, அடிமையின் பகையே. தாண்ட விடுவேனா நதியெ?

பரத:—நண்பா! அன்பன் பகைவன் அல்லன்யான். உண்மையில் என் தாய்தந்தையர் இழைத்த பிழையைத் திருத்தி, அரசையவர்க் களிக்கவே வந்துளேன்.

குகன்:—கள்ளப்பேச்சு. சேனை ஏன்?

சத்:—மன்னருக்குரிய மரியாதையிது.

குகன்:—பேச்சிலெ வல்லவங்கொ பலபேர்.

சும:—மெய்யன்பு கரைந்து, கண்ணீர் ஆறாய்ப் பெருகுவது கண்டும், இவன்மீது கொண்ட ஐயம் இன்னும் தீர்ந்திலையோ?

குகன்:—கண்ணிலெ தண்ணி உட்டு தலையிலெ மண்ணெ போடுவாங்கொ, மந்திரி ஐயா! முந்தி கயவன்போன வழியே உட்டு, கொமரனெ காடுவிட்டுப் போனே. பிந்தி இவனோடெ கூடிக்கிட்டே. மன்னர் மனம்போலவே மந்திரிங்கொ நடப்பாங்கொ. குறுக்கே பேசினா இருக்கிற வேலையும்போகும் பூடும்.

[வசிட்டர் பிரவேசம்.]

---

(1) நல்லவேஷம் நலம் தரும்:

சேங்:—சரிதான். பொம்பளெயா ? அடேயப்பா! அது பிடிச்சா, செந்நாய் பிடிச்சாப்போலெதான். லேசிலே உடாது. பூமியிலெ பயி, பாவம், பகெ, வலி, அல்லாம் அந்த பாவிங்களாலேதான். கொடியவங்கொ கெடுத்தகுடி எத்தினியோகோடி. அவுங்கொ இல்லேன்னு பாவமும் இல்லே; நரகமும் இல்லே.

முத்தன்:—சும்மா மொத்தத்திலெ திட்டாதெ. பொறப்பிச்ச சாமிக்கு புத்தி இல்லையா ? பெண்ணே கண்ணேன்பாங்கொ. நல்ல கொணம் உள்ளவங்கொ இல்லையா ? அவுங்கொ இல்லாமே ஊடில்லே; வாசலில்லே ; ஓலகமே இல்லே. நம்பொ சானகி அம்மாபோலெ, நல்லவங்கொ இல்லாமலா மழெ பேயுது ? அக்கிரமக்கார ஆம்பிளெங்கொ ஆயிரம்பேரு. அதெல்லாம் கணக்கில்லையா ? ஆணே பெண்ணே அநியாயம் பண்ணு அநுபவிப்பாங்கொ. பாவி ஒருத்தியானு, பலபெண்களெ பழிக்கிறதா ? பழிச்சா, பாவம் அழிச்சூடும்.

சேங்:—சாமியெ தொரத்தின பாவி மனம் கல்லுதான். பெத்த வவுத்திலே கொள்ளிதான் வைக்கணும். கொலத்தவுக்கு தூணம். என்னகொலமோ ? என்ன பொறப்போ ?

கோங்:—குடியெ கெடுத்த கொடியவொ எவளோ ?

சப்:—எவளானு என்ன? எங்கிருந்தோ வந்தாளாம். பெத்த அயவாம். அவொவலேயிலெ உய்ந்தானும் கயவன். இட்டாந்தானும் பட்டணத்துக்கு. பயம், பாவுஷம் அல்லாம் தந்தானும். ஓயுங்கா ஒருமவன் பொறந்தானும். பெரியமவனுக்கு பட்டங்கட்ட பொருமெபேய் பொறுக்கலெ.

கோங்:—பொருமெ பேயா ? பெண் பேய்தான்.

சப்:—ரெண்டுபேயும் ஒன்னுதான். பொருமெபேய் சாமரெ தொரத்திச்சு. பெண்பேய் மவனுக்குப் பட்டம் வேண்டிச்சு. பாவிங்கொ பேயாட்டத்தெ .கேக்கணுமா ? பாக்கணுமா ?

சேங்:—பேயாட்டியெ இட்டாந்தா, பஞ்சா பறக்குது.

சப்:—வேசம்போட்டு மோசம்செய்யும் பேய் போவாது. சாமி தான் வரணும்.

கோங்:—சாமியெயே தொரத்திச்சே !

சப்:—சாமி மனம்வச்சா ஆவாதெ போவாது.

கோங்:—(குகன் வருவது கண்டு) அடே ! எசமான் வராரு. சும்மா இருந்தா சீறுவாரு. வேலெ இல்லா வேளெயிலே ராம நாமம் பாடச்சொன்னரே. வம்புபேச்சிலே காலம்கழிச்சா, கழுவிலே ஏத்துவாரு. பாடுவோம்.

[எல்லோரும் பாடுகிறார்கள். குகன் வருகிறான்.]

குகன்:—மெத்த சந்தோசம். பத்தியோடு பாடுங்கோ. ராமநாமம் தேனுக்குமேலெ தித்திக்கும். பண்ணபாவம் போவும். வந்தநோவு தீரும். கொலம், நலம், பொணம், தனம் அல்லாம்சேரும். நம்பொ எல்லெ உள்ளே யமன் வாரான்; வந்தாலும், பாசம்வீசக் கூசுவான்.

கோங்:—துணிஞ்சுவந்தா, அவன் தலெமேலெ நம்பொ காலு.

குகன்:—வல்லமெ ஒண்ணு, வல்லவன் அருள் ஒணும். நல்லா கவனியுங்கொ. சாமியெ நாடாதகாலும் காணாதகண்ணும், கேளாதகாதும் பாடாதவாயும், தொயாதகையும் வணங்காததலையும், நெனெயாதநெஞ்சும், இருந்தும் இல்லேதான்.

கோங்:—கண்ணாலெ காணலான்ன, காணமெ போனரே.

குகன்:—மனசிலெ நெனச்சுக்கோ.

கோங்:—கொரங்கு மனம் கட்டுக்கு அடங்குதா? கொப்பு கொம் பாத் தாவுதே.

குகன்:—கோயில்லெ இல்லையா? கும்பிட்டுப் பயக்கம் பண்ணு.

சேங்:—கல்லாயிக்குது. பேசுதா? வருதா? போவுதா?

குகன்:—கள்குடியா ! குடிவெறியா? கல்லிலே கடவுள் இல்லையா? முந்தி இல்லேன்ணன் இரணியன். தூணிலே சிங்கமா தோனி, கொடலெகீறி, கொண்ணாட்டாரு. சாமி இல்லாத இடமில்லே. கல்லுன்ன கண்ணவியும். கள்ளுன்ன கொலம் அழியும்.

சேங்:—அறியாமெ ஒளறினேன்; புத்தி புத்தி.

குகன்:—கள்ளெ தள்ளினு, உள்ளம் ஒயுங்காவும். நல்லாவாழலாம். பெண்சாதி பிள்ளெங்கொ சொகப்படும்.

சேங்:—எசமான்! எனக்கு பெண்சாதி இல்லே. ஒருமவன் இக்கிறுன்.

குகன்:—பெண்சாதி போயிட்டாளோ? சண்டெ போட்டாளோ?

சேங்:—செத்துப்பூட்டா. [அழுகிறுன்.]

குகன்:—அயுவாதே. இன்னெரு பெண்ணெ கண்ணுலம் பண்ணிக்கொ.

சேங்:—ஐயையோ! எனக்கேன் அந்தவெனெ?

குகன்:—ஏன்?

சேங்:—நானும் அந்த அயோத்திமன்னன் ஆவவா? என்பவன் நல்லா இக்கணும். கண்ணுலமா? கல்லெடுப்பா? அந்த தொல்லெ வாணும் வாணும்.

குகன்:—நல்ல பெண்ணெக்கொண்டா, தொல்லெ இல்லே.

சேங்:—கைகேசியம்மாவே கண்ணுத்தான் நெனச்சாரு. உசிருக்கே ஓலெவச்சுதே! சக்களத்தி மவனெ தொரத்திச்சே!

குகன்:—வல்லவன் மனம்போலெ அல்லாம் ஆவும். ஆரும்அறியார் அவர் பெருமெ. மெய்யினு மெய்யா இருப்பாரு. பொய்யினு பொய்யாப் போவாரு. நம்பினு, மலெ போலெவரும் துயரம், பனிபோலெ போவும். நம்பியெ நம்புங்கொ; அன்போடு ஆடிப்பாடுங்கொ; கூடி நாடுங்கொ. நெஞ்சு உருகணும்; கண்ணீர் பெருகணும். (எல்லோரும் பாடுகிறுர்கள். பரதன் சேனைவரும் சத்தம் காதில்விழ) அடே! நிறுத்துங்கொ பாட்டெ; என்னடா பெருத்த சத்தம்?

கோங்:—(சேய்மையில் சேனைவருவது கண்டு) எசமான்! கோடி கோடியா சனம் கூடிவருது; கடல்போலெ சேனெ தெறண்டு அண்டுது; தேர்மேலெ கொடிகூட பறக்குது.

குகன்:—என்ன கொடி பாரு.

கோங்:—கொடி பேரா? காட்டுவாயெக் கொடி.

குகன்:—அது அயோத்திமன்னன் கொடி. மகனெ ஓட்டினனே: அந்தகியவனு ?

கோங்.—கயவனில்லே. கொமருங்கொ ரெண்டுபேரு முந்தி வாராங்கொ.

குகன்:—நல்லா கவனி.

கோங்.—ஆமாம். நம்பொ ராமசாமியும் தம்பியுந்தான்.

குகன்:—நதிதாண்டி அந்ததிக்கெ நோக்கிப்போனரு; இந்த திக்கிலே எப்படிடா வருவாரு?

கோங்:—சாமிங்கொ எங்கே ஒணூன்னாலும் தோனுவாங்கொ.

குகன்:—நம்பொசானகி அம்மா இருக்காங்களா ?

கோங்:—அம்மாதான் இல்லே; காடெல்லாம் தேடி வாராங்கொ.

குகன்:—அம்மாளெ பிரிஞ்சா அலேச்சல்தான். கோடிசனம் ஏது அவருக்கு? (தானேகண்டு) என்ன விந்தெ! அதேஉருவம். சந்தேகமில்லே. கூடப்பொறந்த தம்பிங்கொதான்.

கோங்:—மரவுரிதந்து தொரத்தினளே ! அந்தப்பாவி மவன் பரதனு ?

குகன்:—ஆமாம். அவனே. சேனேயோடு காடுவரக் காரணம்? சாமியெ கொலெசெய்யவா ?

கோங்:—அதுவேதான். வஞ்சனெபண்ணி வாங்கினன் அரசு; ராசா ஆனன்; போதாதா? பேராசெ பேய் பிடிச்சா, பயி, பாவம், ஒன்னும் பாராது.

குகன்:—பங்காளிங்கொ பகெ தீயாப்பத்தி தணலா எரியும்.

கோங்:—நெசம். பதினலுவருசம் போய் சாமி திரும்பிவந்தா, பட்டம்தர இஸ்டமில்லெ இவனுக்கு. எந்நாளும் தானே ஆள எண்ணிட்டான்.

குகன்:—மண்டலம் ஆண்டமன்னருங்கொ மாண்டுபோனங்களே! இந்தமண்ணுட்டு போனங்கொ ?

கோங்:—அதேது: மண்ணுத்தான் போனங்கொ.

சாமி ! கும்பிட்டேன்.

வசி:—புண்ணிய ! புகழோங்கி வாழ்வாய்.

குக:—பாததூளி பட்டுது; காட்டுக்கட்டெ கடந்தேறிச்சு !

வசி:—நீ குகனல்லவா ?

குக:—ஆமாஞ் சாமி.

வசி:—உயர்குணங்களுக்கு ஏற்ற பெயரே படைத்தனை. உண்மையில் குகனே நீ. ஆனதுபற்றியே, குகையனைய நின் காயத்தின் நடுவுள் நிலைத்துளன் அந்நரகேசரி.

குக:—நெலச்சுநின்னு என்னகொறெ? [1] பாவி கண்ணிலே படாமெ போனுரு. இந்த புண்ணியன் பேர் பரதனும்.

வசி:—ஆம். பரிப்பவனுதலின், [2] பரதனே இவன்.

குக:—பறிப்பவனு? அதுதான் சாமிசொத்தெ பறிச்சுக்கிட்டான்.

வசி:—அப்படியன்று, பரிப்பவன் என்முல், சுமப்பவன் என்று பொருள்.

குக:—ஆமாம். ஆமாம். பழி,பாவம்,அல்லாம் நல்லா சொமப்பான். விளையும் பயிர் மொளையிலெ தெரியாமலா வச்சாங்கோ பிள்ளைக்குப் பேரு ? இவன் சத்துருக்கனும்.

வசி:—சத்துருக்களை வென்றவனுதலின், [3] சத்துருக்கனே இவன்.

குக:—வீராதி வீரனு இவன் ? இவன் வலியெ பாப்போம். ஏ ! வீரா ! எடு வில்லோ, வாளோ.

வசி:—இவ்விணையிலா வீரன், தன்னையே வென்றவன்.

குக:—(நகைத்து) சத்துருவெ வெல்லாதவன் சொத்தெ வீரன்.

வசி:—புறத்துள சத்துருக்கள் எவரையும் வெல்லுவது எளிது. அகத்துள பகைவர் ஐவரையும் வெல்லுவது அரிது. வெல்லரிய பகைபை வென்ற இவ்வீரன் போராட விழையான்.

குக:—பரதா ? உன் வலி என்ன ?

---

(1) பாவி—குகனையும் பரதனையும் சுட்டும்.

(2) & (3) குணங்களுக்கேற்ற பெயர் காண்க.

வசி:—வேடுவர் இறைவ! இவ்வுத்தமன் உயர்குணங்களை யுணர்ந் தாயில்லை. பாராளுமாறு பன்முறை வேண்டியும், ஸ்ராமன் ஆளாத் அரசை அற்பமென்றகற்றினன். பற்றற்ற இப்பு னிதன், உனது நட்புக்குரிய கண்ணியன்.

குக:—முனிசாமி! நெசமாஎன்சாமி நேசமா? வேசம் போட்டு மோசமா?

சும:—பெரியோர் மனம் நொந்திடில், பொல்லாங்கு நேரிடும்.

குக:—ஐயையோ! சாமி! நான் காடாளும் கொடியன்? வித்தை யில்லே; புத்தியில்லே; யுத்தியில்லே; நல்ல சாதியில்லே; நீதியில்லே; ஏதுமில்லே எனக்கு. அறியாமெ ஒன்றி னேன். வேடர்குடிவாழணும். சபிக்காமெ பொறுக்கணும்.

வசி:—வனசரர் அரசே! பத்தியிலும் சித்தியிலும் உத்தமனே நீ. [1] ஜகன்னாதன் பதம் அடைந்தார்க்கு, ஜாதிமத பேதமிலை. வாழ்விலொரு தாழ்வுமிலை.

"குலந்தாங்கு சாதிகள்நாலிலும் கீழிழிந்து எத்தனை
நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கா ளென்றுள்
கலந்தார் அடியார்தம் மடியா ரெம்மடிகளே."

—நம்மாழ்வார்.

எல்லையில் அடிமைத் திறத்தினில் உனக்கிணையிவனே. இவனுக்குமிணை நீயே.

குக:—(பரதன் பாதம் பணிந்து) புண்ணிய புருசா! ஒன் எண்ணம் அறியாமெ, என்னென்னமோ நெனச்சேன். எத்தி னியோ பழிச்சேன். பாவம்தீர ஒன்காலெ பிடிச்சேன். மன்னிக்கணும்.

பர:—(தன் காத்தால் குகனையெழுப்பக் குனிந்து) நண்பா!

[சற்றுமுன் "ஏ! வீரா! வடு வில்லோ வாளோ" என்ற சொற்கேட்டு வேடர்கள் விரைந்து வருகின்றனர்.]

---

(1) மதபேதமின்றித் தொட்டுத்தொழும் கடவுள் வாழுமிடமான வடநாட்டுத் திருப்பதி.

கோ:—அண்ணே ! அண்ணே ! குப்புறத்தள்ளி எசமானெ பிடிச்சுக்கிட்டான். எடுவில்லெ. உடு அம்பெ.

[வில்லையேந்தி நிற்க.]

குக:—அடேடேபாவிங்களே ! போடுங்கொ பாணம்.

கோ:—(நாண் கயிற்றைக் காதளவிழுத்து) இதோ போட்டோம். கொண்ணூட்டோம்,

குக:—சீ! சீ! கீழே போடுங்கொ; கும்பிடுங்கோ; சாமிக்குமேலெ பெரியசாமி இவன்.

[வேடர்கள் கும்பிடுகிறார்கள்.]

பர:—அன்பர்காள் ! எழுந்திருங்கள். நண்ப ! நின் புகழ்ச்சிக்கு யான் அருகனல்லன். அன்பனையன்றி ஆதரியாய். பகையென்று என்னை நீ நினைத்ததும் அது பற்றியே. நின்னுயர் குணங்களை இது வெளியாக்கியது.

குக:—மன்னிச்சாத்தான் காலெ விடுவேன்.[1] கைவிட்டா உன் காலிலெ என் கொலெ.

[தற்கொலை புரிந்துகொள்ளத் தனது கட்கத்தை எடுக்க, பரதன் தடுக்கிறான்.]

பர:—ஆ ! ஆ ! நீ கொலையுண்டால், என் குலமழியும். மனந்தேற மன்னித்தேன். எழுந்திரு.

[குகனைக் கைகொடுத்து எழுப்புகிறான்.]

குக:—அப்பா ! ஓங்கப்பன் ஓயுங்கு தப்பினான். நீ அதெ நிறுத்தினெ. ஓன் கொலத்தவங்கொ பொகழெல்லாம் ஓன் பொகழாக்கிக்கிட்டே. ஓன்னெப்போலெ தம்பி உண்டா? நாடு இல்லேன்னான் ஓங்கப்பன். காடுவந்தார்[2] எங்கப்பன். அதிலென்ன அதிசயம் ? வலுவிலெ வந்த செல்வத்தெ வெலக்கி வந்தையே ! ஆயிரம் ராமர் ஓனக்கிணையா ?

பர:—அன்பனே! மனப்புண் அதிகரிக்க, இன்னும் என்னைப் புகழ்வையோ? அந்நெடியவன் இணையடியடைய, உன் துணையினை நாடினேன்.

(1) பாகவதாபசாரத்தைப் பரிகரிக்க பகவானுக்கு மொண்ணாது.

(2) ஜகத்பிதா.

குக:—ஆத்தெக்கடந்து அக்கரெ போறாரு.

பர:—நெடுங்கான் நடந்தனனோ? எங்கென்று தேடுவேன்? எங்ஙனம் நாடுவேன்? பழுதே பலபகலும் போயின. சேவடியைச் சேவிக்கப், யாவிக்கும் வாய்க்குமோ? துணைவ! பெருகிவரும் இப்பெருவெள்ளங் கடக்கப், பேரருள் புரிவையேல், துயராழிக்கரையினின்றும் கரையேற்றிக் காத்தவனாவாய். கண்ணுக்கினிய கருமுகில்வண்ணனையும் காணப்பெற்றவனாவேன். குலமுதல் புகலிடம் காணேன். கண்டு நீ தருவையோ?

குக:—கவலையேன்? காணலாம் வா. (வேடுவரை விளித்து) அடே! ஓடங்களெ உடனே கரையோரம் ஒதுக்கிவையுங்கொ.

கோங்:—அப்படியே.

[வேடர்கள் போகிறார்கள். பரதன் முதலானோர் சிறிது தூரம் செல்ல.]

பர:—நற்றுணையே! கற்றரையில் புற்களைப்பரப்பிய இப்படுக்கையிற் படுப்பவன் யாவன்?

குக:—நாடுவிட்ட நாயகனெ என் வீடுவர வேண்டினேன். நாய் வீடு நாட மனமில்லெ. [1] மடைத்தலெமேலெ படுக்கும் குடியானவர்போல கங்கெ தண்ணியெ அள்ளிக் குடிச்சு, அந்த அயகனும் அம்மாளும் ஒறங்கின எடமிது.

பர:—(அடங்காத்துயரம் அடைந்து) ஆ! பாவி! பரதா! பாதகா! நின்பொருட்டன்றோ இப்பேரிடருற்றது. சீ! [2] இடாமிவ் வுடலைப் பொடிபட நறுக்கினும, கடகளிறிடற்றினும் குரைகடலமுக்கினும், எரிதணல் மடுக்கினும் பாழ்நரகுய்க்கினும், பாவமொன்றிலது. அந்தோ! [3] மெல்லணைமேல் முன்துயின்றவர், இக்கல்லணைமேல் கண்துயிலக் கண்டுமிருந்தனையோ? வல்வினையேன்! இல்லையேல், இந்நேரம் என் கன்னெஞ்சம் இருபிளவாய் வெடித்திருக்கும்! அண்ணா! மன்னா! மாமணிவண்ணா!

[மூர்ச்சிக்கிறான்.]

(1) சரணாகதர்களாகிற நற்பயிர்களைக் காக்கவந்த குடியானவர்க்கு மடைத்தலையில் படுக்கை பொருந்தும்.
(2) இராமனுக்கும் தனக்கும் பிரதிபந்தகமாகிய.
(3) பஞ்சணை; பன்னகபரியங்கம்.

சத்:—அந்தோ! என் காவலன் நெஞ்சழியக் கண் சுழல மிடுகின்றதே! (கைகொடுத்து எழுப்பி) அண்ணா!

பர:—துணைவ! என் வாழ் நாள் வீணே. இனி ஏதேதுறுமோ?

குக:—அன்பனை காணும்வரைதான் துன்பம். வருந்தாது வா.

பரத:—ஆருயிர்த்தோழா! நேயம்பூண்டு பின்படர்ந்து [1] வந்தவன், தன் காயம் கிடத்திய தெங்கு?

குகன்:—[2] ஒறங்குவானா? ஒருவனெ நம்புவானா? இந்த வேடனெ அவன் நம்பலெ. அவன்மேலெ எனக்கும் நம்பிக்கெ கொறைவுதான். நாலுபக்கமும் பாத்து வில்லெ கையிலெடுத்துக்கிட்டான். நானும் என் வில்லெயும் வாளெயும் ஏந்திக்கிட்டேன். சுத்திச்சுத்தி வந்தான். அவன் பின்னேயே சுத்தினேன். எமெகூட கொட்டாமெ ராவெல்லாம் காத்திட்டான். நானும் பாத்திட்டேன். [3] அவன் தொணெ ஒன்னே போதும். எவனெயும் அண்ட உடான்.

பரத:—ஊணுறக்கங்களினும் இணைபிரியாது உடனிருந்தவன், நெய்தலும் ஆம்பலும் போல் ஒட்டியுறைந்தவன், கெடுமிடத்துக் கைவிடுவனோ? பாவியான் பிறந்து அவர் துன்பத்திற்கு ஏதுவானேன். அவன் அதைத் துடைக்க நின்றான். நீவிர் இருவரும் அருந்துணையிருக்க, அவர்கட்கு இங்கென்குறை? இவ்விடம்விட்டு அகலவிட்டனையே!

குகன்:—நாய்க்கு நலம் வாய்க்குமா? "காய், கனி, ஊனு, தேனு அல்லாம் தாரேன். நல்லா உண்ணலாம். நெலச்சு இங்கெ தங்கலான்னு கெஞ்சினேன்." வச்சமனம் கொஞ்சமும் மாறலெ. இச்சை என்னமோ தெரியலெ. அப்பாலெ போவ நெனச்சாரு. அப்படியே போனாரு.

பரத:—எங்குளரோ? கருமணியைக் கண்டுகொண்டு என் கண்ணிணைகள் களிக்கும் நாள் என்நாளோ?

---

(1) படர்ந்து வந்தவன்;—படர்ந்து உவந்தவன்.—(இலக்குமணன்).

(2) பரமபதத்திலும் உறக்கமின்றி உழைத்த பன்னகாதிபன் பாவம் நிறைந்த பாரினில் உறங்கான்.

(3) பகைபோக்கிக் காப்பன்; உனக்கும் இடம் கொடான்.

" அரும்புண்டரீகத்தடியிணைக் கென்னெஞ்ச
மிரும்புண்ட நீராவ தென்றே—விரும்பி
யறந்திருந்துங் கோயிலரங்காவுனை நான்
மறந்திருந்து மேற் பிறவாமல்."

—திருவரங்கக்கலம்பகம்.

[அன்னையர் மூவரும் வருகின்றனர்.]

குகன்:—(கோசலையைச் சுட்டி) நம்பீ ! இந்த அம்மா யாரு ?

பரத:—ஐயனது முதல் தேவி. பாவியான் பிறந்தமையால், தான் பயந்த பேறிழந்த பெரியாள்.

குகன்:—அப்பனெ பெத்த அம்மணி ! என்னையும் ஒன்மவன், தம்பியா எண்ணினான். ஒன்னையும் தாயென்னு நானும் நம்பினேன்.

[அடிபணிகிறான்.]

கோச:—மைந்தா ! இக்குணமணி யாவன் ? என் கண்மணி இருக்குமிடம் அறிவனோ ?

பரத:—வனசரர் அரசன் இவன். அண்ணனுக்கினிய நண்பன். நல்வழி உய்க்கும் நாவாயன். இவ்விளைஞனுக்கும் இலக்குவற்கும் எனக்கும் மூத்தோன்.

கோச:—மக்களே ! நாடிழந்து என்மைந்தன் காடடைந்தது, மிகவும் நலமே. நீவிர் ஐவரும் ஒருவராய் அப்புவி முழுதும் ஆளுவீர். அரும்புகழுடைவீர். அகமகிழ்வீர்.

குகன்—தாயே! நீ தயெசெய்தா, புவியாளனுமா ? தம்பி! (சுமித்திரையைச் சுட்டி) இந்ததேவி யாரு?

பரத:—அண்ணனையும் என்னையும் இணைபிரியா இருவரைப் பயந்தவொரு நல்லாள்.

குகன்:—அம்மணி! என்னதவம் பண்ணினேயோ! ரெண்டுமவனும் ரெண்டுமாணிக்கம்தான். மூணுபேரையும் ஓடத்திலெ ஏத்தி அக்கரெசேத்தேன். வேலைக்குமெச்சி கூலிதாரேன்னாரு. [1] வாங்குவேனா ? கேலிவாணன்னேன். வம்பு பண்ணி, அந்ததம்பி அன்பெ தந்து போனாரு. இனி, மூணுமவன் ஒனக்கு.

---

(1) கைங்கரியமே புருஷார்த்தம்.

சுமி:—அன்பனே! பேரன்பினால் நீயே என்முதல் மகன்.

குகன்:—எனக்கு எவெண இனியாரு! (கைகேயியைச் சுட்டி)தோழா! தலெகுனிஞ்சு தனியே நிக்கிறுகளே ! இவுங்கசேதி என்ன ?

பரத:—மேதினியில் இவள்போல் [1] கோதையர் இல்லை. எவள் அன்பையகற்றினளோ, ஐயனுயிர் உண்டனளோ, தனைய னையும் துயரக்கடல் தள்ளினளோ, அப்புண்ணியவதி இவளே.

"படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ்
செவிலியைத்தன் பாழ்த்தபாவிக்
குடரிலேநெடுங்காலங்கிடந்தேற்கு
முயிர்ப்பாரங்குறைந்து தேய
உடரெலா முயிரிலாவெனத் தோன்று
முலகத்தே யொருத்தியன்றே
இடரிலா முகத்தாளை யறிந்திலையே
லிங்கின்றுளென்னை யீன்றாள்"
—கம்பர்.

குகன்:—தம்பி! தாயெ திட்டாதே. தாய்தான் தெய்வம். நல்ல தெய்வமோ, பொல்லாததெய்வமோ: தெய்வன்னு கும் பிடணும்.

பரத:—"இடராகவந்தென்னைப்புன்சிறு தெய்வங்களென் செயுமான்
இடராகவன்பிணி மாநாகமென் செயும் யான்வெருவி
இடராகவன்னிபுனலிடி கோண்மற்று மென்செயும்வில்
இடராகவன்னரங்கன்றிருத்தாளென்னி தயத்ததே"
திருவரங்கத்தந்தாதி.

குகன்:—தாயே! இவன் என்தம்பி. தன்னெநொந்து, ஒன்னெ நொந்தான். மனம் நோவாதெ. மெத்த நல்லவன். இவனெ பெத்த ஒன்னெ ஒலகம் வாய்த்தும். தொரத்தின ராம னெ கண்ணுலெ பாத்தோம். பெருத்த பாவம் பறந்து போச்சு. கும்பிட்டேன்.

[பணிகிறான். வேடுவர் வருகின்றனர்]

கோ:—எசமான்! படவுங்களெ கரையோரம் சேத்தோம். பாய் மரம், துடுப்பு, அல்லாம் எடுத்துக்கிட்டோம்.

(1) கோதையர்—மங்கையர்; குற்றமுடையவர்.

குகன்:—சந்தோசம். தம்பி! வா போவோம். அல்லாரும் வரட்டும். கண்ணாரக்கண்டு கையாரத்தொழுவோம்.

[அனைவரும் கங்கையைக் கடக்கின்றனர்.]

களம் 3 முற்றிற்று

களம் 4

இடம்:—ஒரு காடு.

பாத்திரங்கள்:—பரதன், சத்துருக்கன், வசிட்டர், சுமந்திரர், மற்றும் நகரவாசிகள் பிரவேசம்

பரத;—"பிறவியெனுங்கடலழுந்திப் பிணிபசியோடிந்திரியச்
சுறவநுங்கக்கொடுவினையின் சுழலகப்பட்டுழல்வேனை
யறமுடையாயென்னப்பா வரங்கா வென்னருயிருக்
குறவுடையாயடியேனை யுயக்கொள்வதொருநாளே,"

—திருவரங்கக்கலம்பகம்.

(வசிட்டரைவணங்கி) ஞானசஞ்சீவியே! யான்புரிந்த பெரும் பாவம், அவ்வருந்தவப் புதல்வனை நகரினின்று துரத்திய 1 தன்று. இன்றும், இம்மலையினின்றும் அச்செம்மலை அகற்றிட, எனக்குமுன் அப்பாவமே, சென்றிருக்கும். என்செய்வேன்? 2 மெய்த்திறத்தால் காண்பரிய மேக வண்ணனை, எத்திறத்தால் காண்பேனோ? கொம்புத்தேனை முடவன் இச்சித்தபடி முடியுமோ?

வசி:— புண்ணியரூபா!

"வினைவிடுத்து வியன்குணத்தாலெம்மை யாக்கி
வெருவுரைகேட்டவைகேட்க விளம்பினாலும்
தனையனைத்து மடைந்திடத்தா னடைந்து நின்ற
தன்றிருமா துடனிறையுந் தனியா நாதன்
நினைவழிக்கும் வினைவழிக்கு விலக்காய் நிற்கும்
நிகரில்லா நெடுங்குணங்கள் நிலைபெறத்தன்
கனைகழற்கீ ழடைக்கலமாக் காட்சி தந்து,
காரணனுந்தன்காவல் கவர்கின்றானே."

—வேதாந்ததேசிகன்.

---

(1) அன்று - அக்காலம்; அல்ல.

(2) மெய் - உடல்; சத்தியம்,

அவன் கருணைக்கு இலக்காகாத தீவினையொன்றில்லை. அடியவர்க்கு ஆவியவன்; அமுத சஞ்சீவியவன். அப் புனிதனடிதொழுதெழின், கொடுவினையொன்றும் தொடராது. வழிநின்ற வல்வினையும் மாயும். அழிவின்றி ஆக்கமும் தரும்.

சும:—ஆம். கர்மமானவை கோடி முன்னே செய்தாலும், அவன் கருணைப்ரவாக அருளைத் தாகமாய் நாடினவரை, வாதிக்க வல்லவோ?

வசி:—வல்லவையல்ல. அன்றியும், இம்மாமலை யொன்றுமே தொழ, எவ்வினையுமோயும். விண்ணவரும், மண்ணவரும், விரும்பும் வெற்பிது; அண்ணலடியினை அடைவிக்கும் வெற்பிது.

பர:—(நகரவாசிகளைச் சுட்டி) அன்பரே! இடையூறகன்றிட இறைவனடியினை மனமொருமித்து நாடுவீர். நான்கு பக்கலிலும் சென்று நீர் தேடுவீர். பாவியான் வருவதறிந்து அவன் அகன்றிட எழுந்திடின், அகலவிடாதவன் உபய திருவடிகளையும் அடைவீர். தாளில் கைத்தளை பூட்டுவீர். உறுதுணையாய் அவன் திருப்புகழ் பாடுவீர்.

"பொருளாகக் கண்டபொரு ளெவைக்கு முதற்
பொருளாகிப் போத மாகித்
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப்
பருகவந்த செழுந்தேனாகி
யருளானோர்க் ககம்புறமென் றன்னத
பூரணவா னந்தமாகி
யிருடீர விளக்குபொரு ளியாதந்தப்
பொருளினையா மிறைஞ்சி நிற்பாம்.

—தாயுமானவர்.

எல்லோரும்:—"ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சோதியஞ் செல்வநின் றிருவடி வணங்கினம்."

—மணிமேகலை.

களம் 4 முற்றிற்று.

களம் 5

இடம்:—சித்திரகூட பருவதம்.

பாத்திரங்கள்—இராமனும், இலக்குமணனும்.

இரா:—(பரதன் சேனையின்பேரொலி கேட்டு) இலக்குமண! இப்பேரொலி உண்டாயதேன்?

இல:—அண்ணா! வானத்திற் பெரும் புழுதி கிளம்பியது. (நான்கு திக்கையும் நோக்கி) வனவிலங்குகள் ஆங்காங்கு மருண்டு ஓடுகின்றன.

இரா:—வேட்டையாட எண்ணி, வேந்தரெவரேனும் இக்காட்டையடைந்தனரோ? அன்றி, கரைகடந்தகாதலால் நம் காவலரே கடுகிவருகின்றனரோ? ஒருவேளை, முனிவர் இயற்றும் அருந்தவத்திற்கு இடையூறுய், அரக்கரெவரேனும் அண்மநேர்ந்ததோ? அப்படியிருப்பின், அப்பாதகரை அரைக்கணத்தில் அழித்தொழிப்பேன்.

இல:—வருபவன் நம்பகைவனே! எண்ணரிய சேனைவெள்ளம் எங்கணும் படர்ந்துளது.

இரா:—வெஞ்சமரில் நம்மை வெல்லவல்ல வீரனுமுளனோ?

இல:—ஊழ்வினை வலியால், உம் தோள்வலி உணரான். இவன் படையனைத்தையும் பாரினில் வீழ்த்த, இவ்விளைஞன் ஒருவனேபோதும். வானத்தெல்லையும் மறைய வெங்கணைகள் எய்குவேன். விண்ணவரும் மண்ணவரும் என் கண்ணெதிர்ப்படின், அன்னவர் படைவலியெலாம் பட்டிடச் செய்குவேன். எனதாற்றல் கண்டு, மாசுணம் தலைநொந்து சுழன்றிடும். வீசுதெண்டிரை அம்பு வெதும்பிடும். மேலையண்டமும் விண்டு பகிர்ந்திடும். என்கடுங் கொடுங் கார்முகம் வளைத்து, அவன் கடற்பெருஞ் சேனைக்கடலைக் கலக்குவேன்.

"தோளினுல் வலியராகித் தொக்கவர் தலைகள்பாற
வாளினுற் பேசலல்லால் வாயினுற் பேசநேற்றேன்
காளமேகங்கள் சொல்லிக் கருணையாற் குழைக்குங்கைகள்
வாளமர்நீந்தும்போழ்தின் வழுவழுத் தொழியுமன்றே."

— சீவகசிந்தாமணி.

பரிதிகண்ட பனியெனப் பகைத்தளம் பறக்கக்காண்பாய்.

இரா:—சிலேவலவ ! ஆற்றலில் நீ கூற்றினும் கொடியனே. கருதிடில், உலகேழும் ஓர் கணத்தினிற் கலக்குவை. விளம்பல் வேண்டுமோ ? படையுடன் வருவதுபற்றியோ, பகைவனெனப் பகர்ந்தனை ?

இல:—பெருந்தகையே ! இடையூறிழைத்திட, நம் [1] மிடை வந்ததுபற்றியே.

இரா:—எவரிடத்தும் எனக்குப்பகை எள்ளளவும் இல்லையே !

இல:—நெடுநாள் நொந்திட, நின்னுடன் பிறந்த நோயனை நினையாயோ? அண்ணனுக்கு இன்னலிழைத்த அறிவிலியவன். அம்புவி தனக்கே நிலைக்க எண்ணிய புல்லியன். வஞ்சமனக் கொடுவஞ்சகியின் மகன். வெஞ்சமர் விளைக்கவே வந்தனன் வனத்திடை. முழுமதியை விழுங்கவரும் அக்கோளரவம், இன்றென் கரவாளுக்கு இரையாகும்.

“ இருமையுமிழந்தவப்பரதனேந்து தோட்
பருமையுமன்னவன் படைத்த சேனையின்
பெருமையும் நின்னொரு பின்புவந்தவென்
ஒருமையுங்கண்டினியுவத்தியுள்ளம் நீ” —கம்பர்.

இரா:—சிறுவ ! பரதனையா பகைவனெனப் பகர்ந்தனை ? பாவியெனப் பழித்தனை ? நோயனென நொந்தனை ? இங்நிந்தனையேன் ? இதுவரை அவனிழைத்த தீங்கு ஏதேனுமுளதோ? புரியக்கருதியதாய் அறிந்ததுதான் உண்டோ? என்னடியார் அது செய்யார். அவனது தூய மனம் அறியாது தூற்றலாகுமா ?

இல:—பாவியின் மகனுக்குத் தூயமனமேது ?

இரா:—காவாய் நின் நாவை. விதியின் பிழை ! அவனைப் பழிப்பதேன்?

இல:—விதியா ? விதிக்கும் விதியாகும் என் வில்தொழில் காணுதி. அந்நஞ்சமன்னவனை இன்று யான் தகைந்

---

(1) இடத்தினுலும் பிறப்பினுலும் நடுவில் தோன்றிய பரதனைக்குறிக்கும்.

திலனேல், உன் தம்பியுமல்லேன்; இன்பனுமல்லேன்; அடிமையுமல்லேன். பொங்கியெழும் என் சீற்றக்கனலை இன்று ஆற்றுதருள்வை.

இரா:—பறவைகட்கிறைவனை வெல்ல, 1 அரவினுக்கொண்ணுமோ? 2 நீள் கரம் உயர்த்தி, 3 அக்கார்முகம் வளைத்த 4 தேர்திறத்தவனை வெல்ல, அத்திரத்தவனுமுளனோ? 5 அம்பரத்தவரும் அவன் 6 அம்பின்முன் என் செய்வர்?

இல:—நின் அருட்படை யொன்றிருப்பின், அவன் திரட்படை என்னெதிர் என்னும்? பாம்பின் வாய் கைவிடுபவன் படும்பாடறியான்.

இரா:—வீணே 7 பேரரவச் 8 சீற்றமொழி. மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா. தீக்குணம் தேடுவது தீயோர் இயல்பு 9 முன்னவனைப் பழித்தலே முறையெனக்கொண்டனை. தாய்தந்தையரையும் அன்று தகையத்துணிந்தனை உன் மத்த மனத்தனாய் இன்றும் உன் மூத்தவனை 10 முடிக்க முனைந்தனையா? என்பற்றி? மண்பற்றியா? தவத்தளவே யாகும் தான் பெற்றசெல்வம். நாடாள நினைவுண்டேல், நகரேகுவாய். நானிலமாளுவாய். உயிரினுமினியவன் வன மிருந்துய்வன்.

இல:—விடலரிய பெரிய பெருமானே! எனதுளத்தின் கருத்தினைத் திருவுளம் அறியுமன்றோ? அடிமையை அகற்றுவதழகோ? உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன். ஒழிவில் காலமெலாம் உடனாய் மன்னி

---

(1) அரவினுக்கு—பாம்புக்கு.
(2) நீள்கரமுயர்த்தி—கையைத்தூக்கி; கையைக்கூப்பி.
(3) கார்முகம்—வில்; கரியமுகம்.
(4) தேர்திறத்தவன்—தேர்ப்போரில் வல்லவன்; தேர்ந்தபிரபன்னன்.
(5) அம்பரத்தவர்—பரமபதநாதன்; பரமசிவன்.
(6) அஞ்சலியாகிற அருங்கணையைக் குறிக்கும்.
(7) அரவச்சீற்றம்—பெரியகோஷம்; ஆதிசேஷன்.
(8) சீற்றமொழி—கோவம்தவிர்; கோவச்சொல்.
(9) முன்னவனை—தயரதனையும், இராமனையும், பரதனையும்.
(10) முடிக்க—அழிக்க; முடிசூட்ட.

வழுவிலா அடிமை செய்ய வேண்டுவென். எனக்கென்று இன்பமொன்றில்லை, அண்ணலே! உன்னையும் அறியாய். உன் பெருமையும் உணராய். பொறுமையால்வந்த நின் வறுமையை, யான் போக்காதிருக்கவா?

இரா:—வறுமையா? பெருமையே. அரியதொரு தருமம் அதுவே. தம்பியைக்கொன்றோ, ஆட்புரியாள்வது? அதருமவழியில் அவ்வாளுளைப் பெறினும் வேண்டேன். ஏன்? பின்னவன் [1] பெற்றசெல்வம், முன்னவன் பெற்றதன்றோ? தம்பி திருவுற்று மகிழவும், தந்தை நெறிநின்றுய்யவுமே, வன முறையுமுறுதிபெற்றேன்.

இல:—அண்ணு! என்னுளம் இன்னும் ஐயுறுகின்றது கடலொலி யடங்கிடப் படையுடன் இவணடைந்ததுகண்டும், பரிவுடன் அவனைப் பாராட்டுவதா?

இரா:—அதனுலென்ன? அகத்தினழகு முகத்திற்றெரியும். களங்க மனத்தனுய்க் கலங்கலுற்றனை. தொல்குலம் விளங்கவந்தவன் அச்செல்வன். அறமனைத்திற்கும் அச்சாணியவன். தருமத்தின் தெய்வமே அவன். [2] செவியற்றனே, விழியுமற்றனையா?

> "சேணுயர்தருமத்தின்றேவைச் செம்மையின்
> ஆணியையன்னது நினைக்கலாகுமோ
> பூணியன்மொய்ம்பினுய்போந்ததீண்டெனைக்
> காணியநீயிதுபின்னுங்காண்டியால்.
>
> —கம்பர்.

[பரதன் வருநிலையை நன்குநோக்கி இலக்குவன் வெட்கிச் சிலைதுறந்து தலைகுனிந்து நிற்க]

சிலைவலவ! தலைகுனிந்து சிலைதுறந்து செயலற்று நிற்பதேன்?

இல:—கருணைபங்கடலே! [3] கார்க்கடலுடன் இரண்டறக் கலந்திடக் கரைபுரண்டுடைந்துவரும்[4] அக்கங்கைமாநதிபோல்

(1) இருவரும் பெற்றசெல்வம் தவச்செல்வமே.

(2) கட்செவி:—ஆதிசேஷன்; (இலக்குமணன்:)

(3)&(4) நதி கடல் புகுவதுபோல், பரதன் இராமனைச்சேர விரைகின்றனன். இராமன் கடலனையன்; பரதன் கங்கைபோல் பரிசுத்தன்.

பொங்கியவன் விரைகின்றனன். அந்நேயனது தூயமனம் அறியாது, பேயனாய்ப் பிதற்றியபிழை பொறுத்தருள்.

[இராமனடிவணங்க]

இரா:—நன்று. சான்றோர் சினம் நீர்கிழிய வெய்த வடுப்போல மாறும். அக்கோதிலாதவனை நீயே என்வயிற் கொணர்தி.

இல:—அப்படியே. [செல்கிறான்]

இரா:—சானகி! (சீதைவருகிறாள்.) 1 சந்திசெய்ய நின்றேன். வந்து 2 வழிபட 3 உதகம் தந்திடு.

[சீதைசெல்லுகிறாள். பரதனும் சத்துருக்கனும் ஒருபக்கம் பிரவேசம்.]

சத்:—(இராமனைக் கண்டு) அண்ணா! பகலோன் பகல்விளக்காகப் பரஞ்சுடர் தோன்றியது. காணரிய மேகவண்ணன் காண்கின்றானங்கு.

பர:—கண்டேன். 4 பகற்கண்டேன். பரஞ்சோதியைக் கண்டேன். வினையனைத்தும் விண்டேன்.

"கண்டேன் கமலமலர்ப் பாதம் காண்டலுமே
விண்டே யொழிந்த வினையாயின வெல்லாம்
தொண்டே செய்தென்றும் தொழுது வழியொழுக
பண்டேபரமன் பணித்த பணிவகையே."

—நம்மாழ்வார்.

[பரதனும் சத்துருக்கனும் விரைந்து வருகின்றனர். சீதை கமண்டலத்துடன் வருகிறாள். இராமன் சீதையுடன் கன்றைக்காண ஆவல்கொண்ட கராவைப்போல் விரைந்து செல்கிறான்.]

களம் 5 முற்றிற்று.

---

(1) சந்தி:—சந்தியாகால வந்தனை; சமாதானம்.
(2) வழிபட:—தொழ; ஒழுங்காக்க.
(3) உதகம்:—தண்ணீர்; (கருணாரூபிணியின்) கருணைநீர்.
(4) பகற்கண்டேன்:—பரமனைக்காணாத நாளெல்லாம் இருள்மூடிய நாளே; பிறவாநாளே.

களம் 6

இடம்:—மலையின் ஒருபுரம்.

பாத்திரங்கள்:—பரதனும் சத்துருக்கனும் பிரவேசம்.

பர: } —"விண்கடந்த சோதியாய் விளங்குஞான மூர்த்தியாய்
சத்: } பண்கடந்த தேசமேவு பாவநாச நாதனே
எண்கடந்த யோகினோ டிரந்துசென்று மாணியாய்
மண்கடந்த வண்ண நின்னையார்மதிக்க வல்லரே."

—திருமழிசைப்பிரான்.

[இராமன் சீதையுடன் மற்றொருபக்கம் பிரவேசிக்கக்கண்டு, பரதன் விரைந்தோடி அண்ணன் அடியினையடையும் முன்னம் அலறிவிழுந்து]

பர:—அண்ணா ! அண்ணா !

இரா:—(பரதனை மார்புடனணைத்துத் தழுவி) அன்பனே! துன்பமேன் ? அடவியடைந்து அகமகிழ்ந்துளேன். திருமுடியோன் தீதிலனோ ? தளர்வடைந்த தாதையைத் தனிவிட்டு வரலாகுமோ ? (பரதன் மௌனம்) மன்னவனும் உனக்கு இம் முனிவேடமேன்? புனைந்திலையோ மௌலி? நனைந்திலையோ புனிதநீரால்? (பரதன்மௌனம்) நகரமாந்தர் உன்னை மன்னனாக மதித்திலரா? ஒப்பரியா உன்னை [1] யொப்பார் யாவர்? (பரதன் மௌனம்) வேந்தர் உரைமறுத்து, உளம்நொந்து வந்தனையோ? (பரதன் பெருமூச்சிடுகிறான்) இந்நெடுந் துயரமேன் ?

[இலக்குமணன் திரும்பிவந்து பிரமித்து நிற்கிறான்.]

பரத:—அண்ணா ! [பேசநாவெழாது தழதழத்திட.]

இரா.—நெஞ்சுருகி யேங்குவதேன் ?

பரத:—கானகமே மிகவிரும்பி, நீ துறந்த வளநகரைத் துறந்து, அவர் வானகமே மிகவிரும்பிப் போயினர்.

இரா:—வானகமா !

(1) ஒப்பார்—நிகராவார்; ஒப்புக்கொள்ளாதவர்.

பரத:—நின்பிரிவெனும் பிணியினுல் என்னைப்பெற்ற அக்கரியவள் வரமெனுங்காலனுல், உடலை நீத்து உம்பரிற் கலந்தனர்.

[இராமனும் சீதையும் அடியற்றமரமென விழுகின்றனர். வசிட்டரும் சுமந்திரரும் வருகின்றனர்.]

இரா:—ஆ ! என் அருமைத்தந்தையே ! உயிரின் உயிரே ! புகழின் புகழே ? மெய்யின் மெய்யே !

"நந்தாவிளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின்றாயே தயாநிலையே
எந்தாயிகல் வேந்தரேறேயிறந்தனையே
அந்தோவினி வாய்மைக்காருளரே மற்றையா."

—கம்பர்

நான் கானடைந்தேனெனத் தரியாது, நீர் வானடைந்தீர். உம்மையிழந்தும் வாழ்வுகந்து இன்னுமிருந்தேன். அண்ணலே ! வாய்மையும் மரபுங்காத்தவள்ளலே ! வேள்வியியற்றி, என்னைப் பெற்று, என் பெற்றீர் ? நும்முயிர் நீங்கப் பெற்றதுவோ ? அந்தோ ! நும்முயிர்க்கும் கூற்றுவனுயுற்றேனே ! இலக்குமண ! தந்தையென நின்ற தனித்துணையே ? நின்தாதையை இழந்தனையே! மைதிலி! மகளிலாக் குறைநீக்கிய மாமகளே ! நின்மாமன் மாண்டனரே !

இல:— ஆ! ஐயனே ! அன்பனைத்துறந்து ஆவியும் நீத்தனையோ ? அத்தனே! உத்தமகதி யுற்றனையோ?

வசி:—இலக்குவா ! [1] உனக்குமா இக்கலக்கம் ? சோதரர் இருவரும் இவ்வாறு சோகிக்கலாகுமா ? ஆவாரை யழிப்பவர் யாவர் ? சாவாரைத் தவிர்ப்பவர் யாவர் ?

[இராமன் சீதையைத்தேற்றுகிறான்.]

இரா:—மறையவரே ! இறைவர் அகற்றிய நகரினையனுக, என்னுளம் இனி நினையுமோ ?

வசி:—தயரதன் பெற்ற தவப்பயனே !

(1) உனக்குமா—சகலபந்துவும் இராமனே என்றறிந்த; தந்தையை சிந்திக்க

" மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லா
லெஞ்சினா ரிவ்வுலகத்தில். " —நாலடியார்.

மறைகளின் வரம்புகண்ட நீயுமா கலங்குவது? துயரக் கடல் மூழ்கியுழல்வது? பிறத்தலும் இறத்தலும் இயற்கையென்பதை மறந்தியோ? மின்னின் நிலையில மன்னுயிர் ஆக்கைகள். அங்ஙனமிருக்க, அவனியனைத்தும் அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்டவன் மாண்டது கண்டு, மனமிடியலாகுமோ! காலமென்றவலை அக்காலனுக்கும் கடக்கற்பாலதோ? கண்ணீர் சிந்திக் கரைந்தழுது, இனியென்னுவது? நின் கமலக்கையால் நீர்க்கடன் கழித்துக் [1] கடைக்கடன் முடிக்கக் கடவாய்.

[எல்லோரும் செல்லுகிறார்கள்.]

களம் 6 முற்றிற்று.

களம். 7

இடம்:—சித்திரகூடத்தில் ஒரு பன்னசாலை.

பாத்திரங்கள்:—இராமனும் தம்பியரும், வசிட்டரும், சுமந்திரரும் குகனும், மற்றுமுள்ள நகரவாசிகளும்.

பரத:—அண்ணா! அறந்தனை நினைந்திலே. அருளினை நீத்தனை. சிறந்ததொரு முறைமையும் துறந்தனை. பிறந்தனையே பரதாவென, வையம்பழித்திட வைத்தாய் என்னை. நில உலகை நோய்செய்த பெரும் பாவகாரியிற் பிறந்த

(1) கடைக்கடன்—சரமருணம்.

பாவியேன் வந்துளேன். ஆவியும் துறந்திலேன்! மாதவம் புரிவதுமோர்கிலேன். யாவனுகி இப்பழி நின்றேறுவேன்?

இரா:—பரதா! பழியேனுனக்கு? பழிப்பதேன் அன்னையை? இழிவென்னெனக்கு? இகழ்வதேன் எந்தனை? ஐயன் ஆணையால் வையம் நின்னதே. மன்னவனாய் நீ இருக்க, மானிலத்திற் [1] கென்குறை?

பரத:-மூவுலகுமாள வந்த முதல்வ! மநுநெறிமுறையில், உனக்கே யுரியது இம்மானிலத்தரசு. அம்முறை துறந்து, மனைவி யொருத்தியை மகிழ்விக்கவெண்ணி, உன்னையுமகற்றி, உனதரசியல் ஆக்கத்தை எனக்காக்கினர் அரசர். அதைத் தவறென மதித்தலும் தவறோ?

சத்:—குற்றம் புரிந்தவர் கொற்றவரேயாயினும், அவர் குற்றம் குற்றமே.

இரா:—கதிரவன் குலத்து உதித்தவரெவரும், குற்றமற்றவர்களே. ஒப்புயர்வற்ற நமது அப்பனோ பிழைப்பவன்? வரதன் தரவே, வரம்பெற்றவள் இவ்வையம் சரதமுடையாள். அச்செல்வியின் செல்வனே செங்கோலுக்குரியவன். ஆனது பற்றி, அவனியாளும் அரும்பேறு நீ பெற்றனை. நானெனில், தாய்வரங்கொளத் தந்தையேவலால், மேயநம்குலத் தருமமேவினேன். நீ வரங்கொளத் தவிர்தல் நீர்மையோ? மெய்த்திறத்து மன்னரைப்,பொய்த்தினர் ஆக்குவையோ?

பரத:—ஆதியஞ்சோதியே! நீதியோ நீ யோதுவது? அறம் கொல்லும் வரம் கோரலும், தரலும், தவறே. வரன்முறை தவறியபணி தவிர்க்கற்பாலதன்றோ?

இரா:—என்ன! நன்னெறிக்கோர் நிலையமென நானிலம் புகழும் அப்புனிதரை, அறநெறியில் நிலைநின்ற அறக்கடவுளை, வாய்மையைக் காக்கவே ஆவியும் நீக்கிய மெய்யரை, மற்றும், நம்மைப் பெற்றவரையா இவ்வாறிகழ்ந்தனை?

பரத:—[2] நஞ்சம் கலந்ததால், நன்னெஞ்சும் கலங்கியது. நானிலம் இகழும் நஞ்சேயாயது. வஞ்சனையால் வையம் பறித்த

(1) என்ன குறை; என்னுடைய குறை.
(2) கைகேயியைக் குறிக்கும்.

னள் அப்பாவி. கடியவெங்கானிடை உன்னையுய்த்தனள். மன்னரை முடித்தனள்; நன்னகர் அழித்தனள்; இன்னலில் என்னையும் அழுத்தினள்.

இரா:—ஆ! ஆ! பரதா! நீயா இவ்வெம்மொழி மொழிந்தனை? செவியினைத் துளைத்தனை? மருமமும் பிளந்தனை? கரைகடந்த கற்புடைக் காதலியா, கணவனுயிர் கவருவள்? பொருசமரினும் பிரியகிலாது, தலைவருடன் சென்று, அன்று, போர்முனை நின்று உதவினள் அத்தெய்வக்கற்பினள். மெய்யன்பினால், என்னைப் பயந்ததாயினும் பன்மடங்கு அதிநேயமாய் வளர்த்து, மகிழ்ந்தனள். அத்தகைய தனித்தாயை, மங்கையர்க்கரசியை, உத்தமிகட்குத்தமியை, நீ வயவுரைகொண்டு வைவதா? பகையெனப் பழிப்பதா? பாவியென்றிகழ்வதா? தொல்குலம்தோன்றிய தூயவன் நீயா? பகையும் பொறாமையும் அன்னை கருத்தாயின், என்னை ஏழிரண்டாண்டினில் வந்திட வேண்டுவளோ? அந்நகரை யான் என்றும் அணுகாவண்ணமன்றோ, வரம் பெற்றிருப்பள்? தாயினு முயரிய கோயிலுமில்லை. தந்தைசொன்மிக்க மந்திரமுமில்லை. பெற்றவர் கருத்தறிந்து ஆற்றுபவரன்றோ, புத்திரரில் உத்தமர்.

சத்:—குன்றனைய [1] குற்றம் புரியினும், குணங்கொள்ளும் வள்ளலே! தினைத்துணை நன்றிசெய்யினும், பனைத்துணையாய்க் கொள்ளும் பெருந்தகையே! குற்றமற்ற தன்குரிசில் ஒருவனே, குவலயம் ஆள்வது கொற்றவர்கருத்து. அந்நினைவு அவர் நெஞ்சைவிட் டகன்றிலது. ஆங்கது நினையாது நீ நீங்கவே, நின் திருவுருவைக் காணாது கரைந்தவர் அரற்றினர். மனமிடிந்து மாண்டு போயினர்.

இரா:—மேலை விதியினை வென்றவர் யாவர்?

> "முதிர்தரு தவமுடை முனிவராயினும்
> பொதுவற திருவொடு பொலிவராயினும்
> மதியினராயினும் வலியராயினும்
> விதியினையாவரே வெல்லு நீர்மையார்."
>
> —கம்பர்.

---

(1) குற்றம் கொள்ளாது குணம் கொள்ளல்; குற்றமே குணமாகக் கொள்ளல்.

தனையராயினோர் தந்தைதாயரைப் புகழ்பெறச்செய்யவா? பழியுறச்செய்யவா ?

பரத:—பழியினைப் போக்காதிருக்கவா ?

இரா:—பழியுளதென்பது அழியாப்பிழையே. பெற்றோர் புதல்வரை விற்கவும் பெறுவர். அவரது பணி யெதுவெனினும், அதை எப்போது மேற்பது, எவர்க்கும் கடனே. அத்தருமம் உணர்ந்தவர், உலகினில் உய்ந்தவர். அன்று சகரகுமரர், ஆருயிர் போக்கி அரும்புகழ் பெற்றது, சனகனுரையேற்றே. தந்தைசொற்கிணங்கியே தாய் தலை துணித்துத் தன்கடன் தீர்த்தனன் [1] அவ்வந்தண குல மணியும். தாதையின் இதமொழி, நமக்கு நாளும் நன்மையே பயக்கும்.

பரத:—பயக்கும் நன்மையை வியக்கக்கண்டோம். நாடிழந்து நீ காடடைந்தாய். கேடடைந்து யான் பாடடைந்தேன்.

இரா:—" ஆக்கமும் வறுமைதானு மல்லலு மகிழ்வுமெல்லாம்
நீக்கமில் லுயிர்கட்கென்றும் நிலையெனக் கொள்ளற் பாற்றோ
மேக்குயிர் கடவுட்டிங்கள் வெண்ணிலாக் கதிரின் கற்றை
போக்கொடு வரவுநாளும் முறை முறை பொருந்திற்றன்றோ."

—கந்தபுராணம்.

விளைவது எதுவாயினும், தழுவியொழுகும் கடமையை நழுவவிடுதல் மடமையே.

பரத:—தொன்றுதொட்டுவரும் தருமத்தினை இருவர்பொருட்டுக் கொன்றுதின்றிடலோ ?

இரா:—அடாதவழக் கடுக்காது. வாய்மொழி மதியாது, வாதிக்க வந்தனை. தந்தைபட்ட கடன் தீர்த்திடல், மைந்தர் தம் கடனே.

பரத:—நெடியோனே ! அடிமை போராட முடியுமோ ? அரசு கொள்ளில், அறம் கொன்று தின்றபாவம் என்னைச்சாரும். பிறப்புரிமையிலா அரசைப்பெற, யான் என்றுமிசையேன்.

---

(1) பரசுராமன்.

இரா:—அரசுரிமை உனக்கிராவிடின், அவ்வாக்கமுனக்கு ஆக்கி யிரார் அரசர்.

பரத:—முற்பிறந்த நீயிருக்க உன் பிற்பிறந்தஎனக்கும் உரிமையா? மநுநெறி அவ்வாறு கூறியதுண்டோ?

இரா:—பிறப்பால் உனக்கே உரிமையாக்கும் மரபுடை முன்சொல் உண்மையொன்றுளது. அப்பண்டை வரலாற்றை இதுவரை யறிந்திலேபோலும். மன்னவர் உனது அன்னையை மணக்குங்கால், மணப்பரிசமாக வழங்கினர் தமதரசினை. அப்பரிசமதை யனுசரித்தே, அரசினை உன் அன்னை யிரந்ததும்; மன்னர் அதற்கிசைந்ததும்.

சத்:—இறைமக்களுக்குரிய தொல்லரசளிக்க, இறைவருக்கு உரிமையுமுளதோ?

இரா:—கொற்றவர் முற்றுரிமையுற்றவர். அன்றேல், அறநெறியில் நிலைநின்ற அரசர், அங்ஙனம் தந்திரார். மூதறிவுடைய முதியோரும் அதை ஆமோதித்திரார். அன்றியும், அன்று யாம் பிறந்திலமென்று அறிவை.

பரத:—பிறந்த பின்னரோ?

இரா:—அன்று வழங்கிய வாசகம் என்றும் சரதமே.

இல:—அங்ஙனமாயின், அனைவருமறிய அப்பேரவையில் எங்ஙனமிசைந்தனை அரசினையேற்க?

இரா:—மன்னவர் சொன்னசொல் மறுக்க அஞ்சியே. பரதா! என் மொழிப்படி நீ நல்வழி நாடுவாய். நாடாளுவாய். நீண்முடி சூடுவாய்.

பரத:—நீ சடைமுடி சூடி இக்கடுங்காடிருக்க, நான் நீண்முடிசூடி அந்நெடு நாடிருக்கவா? நீ புல்லாதனம் அமர, நான் பொன்னாதனம் அமரவா? நீ அரணியமாள, நான் தரணியுமாளவா? மாமரக் காற்றையேந்தி நீ கந்தமூலங்களுண்டு காயம் வருத்த, சாமரைக்காற்றையேந்தி நான் கன்னலும் அமுதுமுண்டு வாழ்வுமுகக்கவா?

இரா:—அதனாலென்ன? இடர்காணேன் இவ்வடர்கானில்.

" தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வாராசையுட்பட்டு." —திருக்குறள்.

வனமுறைவோர் இன்புறுவரேயன்றித் துன்புறார்.

சத்:—செல்வம்தரும் பங்கயச்செல்வி இங்குறைய, ஆங்கென்னுளது. இருள்மூடி அந்நாடு அன்றே கடுங்காடாயது இக்காடே நன்னாடாயது.

பரத:—முன்னவனே! மன்னவனே! நான் ஆகாத வண்ணமே இவ்வண்ணம்ஆயினையோ? ஆதரவு வையாது, என் அறிவினை மறைப்பதும், அருளோ?

" திரையார் கடல்சூழுலகின் தவமே திருவின் திருவே
நிறையார் கலையின்கடலே நெறியார்மறையின் னிலையே
கரையாவயர்வேனெனை நீ கருணையனேயெனினென்
றுரையாயிதுதானழகோ வுளநொந்தடியாரலைதல்."

—கம்பர்.

அண்ணலே! மண்ணினை நாடிடேன். உன்னையே நாடினேன். அடிமையின் உடல் பொருள் ஆவியனைத்தும் உனதுடைமையே. உடையவனே! உனக்கு உறவொழிக்கவொண்ணது. தவவிரதம் தகாது. காய்கனி தின்று நீ கானிலலைந்து காயம் வருத்த, யான் கணமும் தரியேன். நின்பதமலர் நினைந்து, என் கரமலர் குவித்து, நின்பால் எல்லையிலன்பால் வேண்டுவன்.

" முன்னர்வந்துதித்துலக மூன்றினும்
நின்னையொப்பிலா நீ பிறந்தபார்
என்னதாகில் யானின்று தந்தனென்
மன்ன போந்து நீ மகுடஞ்சூடுவாய்." —கம்பர்.

[1] பாலனமேற்கப் பரிவுடன் வருவாய்.

இரா:—அன்பின் அரியவுருவே! அன்று அறுதியிட்ட, ஆண்டுகள் பதினான்கும், இன்றோடு முடிந்தனவோ?

பரத:—வள்ளலே! எல்லாம்வல்ல நீ என்னையும் வாழ்விக்கவல்லையோ? பாவம் நிறைந்தவர் என் போலில்லை. அருளிற் சிறந்தவர் உன்போலில்லை. நெடியோனே! நின்னடியை

(1) பாலனம்—பரிபாலித்தல்; பால்கலந்த அன்னம்.

யான் விடுவேனோ? வனமகன்று வாராயேல், அடிமையுன்னடிக்கீழ் அமர்ந்துறையவாவது அருள் புரிவையோ?

இரா:—இல்லறம் உனக்கில்லையேல், துறவறம் எனக்கில்லையே.

சத்:— இல்லறமல்லது நல்லறமன்று.

இரா:—சொல்லறமல்லது சொல்லல்ல. சோதரா! நல்லறம்பெற்று நீ நானிலமாளுவை. உன்னையன்றி மன்னவனில்லை.

பரத:—இன்னுமென்னை மன்னனெனவே மதிக்கின்றனையோ?

இரா:—ஏன்?

பரத:—அப்படியாயின், அதன் உண்மையை இப்பொழுதறிவேன். அண்ணா! உன்னை என்வயமாக்கி வையமுனக்காக்குவேன். புவனம் புகழினும் சரி. ககனம் இகழினும் சரி. என் செங்கோல் ஆணையை எங்கும் செலுத்துவேன். மன்னவன் ஆணை கடவாதொழுகுவை. நகரேகுவை. நீண்முடி சூடுவை.

இரா:—மன்னவரானவர் சொல்லினும் செயலினும்ஒன்றினொன்று முரண்படுவரோ? சற்றுமுன், எனக்கு அடிமை பூண்டொழுகுவன் என்றனை. அந்நிலைமாறி என்னையாளுடைய நாயகனாய் ஆணையிடுகின்றனை. பின் உண்மை நிலைதான் என்னோ?

பரத:—அந்தோ! நுண்ணறிவிலேன். மதிமயங்கி, மன்னனைப் போல் ஆணையிடலாயினேன். மன்னிப்பாய். நான் உனதடிமை. அடிமையினடிமை. அகற்றாது ஆட்கொள்வாய்.
[பணிகிறான்.]

இரா:—அடிமை [1]யாயின், ஆணைகடவாது அவனியாளுதி.

பரத:—அருளால் அறமருளும் அருளாளா! ஆளும் வகையறியேன். வாழும் விதமறியேன்.

"மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்குந் திறத்தினிலோ ரிடத்தே

(1) ஆயின்—ஆனால்; ஆராயின்.

இருந்தறியேன் அறிந்தோரை யேத்திடவு மறியேன்
எந்தைபிரான் மணிமன்ற மெய்தவறுவேனே
இருந்திசை சொலவறியேன் எங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்ன செய்வேன் ஏதுமறிந்திலனே."
—திருவருட்பா.

உன்னையன்றி வேறுதுணையிலாத் தமியேன், வாழ்நாள் வேண்டேன். நின் அடிசூடும் அரசையல்லால் அரசொன்றும் அறியேன். உயிரும் நீயே; வினையும் நீயே; பயனும் நீயே; குறையொன்றும் இன்மையால் இறையும் நீயே; நற்பதம் தருவதால் கற்பகம் நீயே. துன்பம் துடைத்தலால் இன்பமும் நீயே; காணிடில், உன் திருவுருவே காண்பன். பாடிடில் உன்திருப்புகழே பாடுவென். சூடிடில், உன் சேவடியே சூடுவன். நின் பதமலரை யன்றி வேறு [1] மணமலரை என்றும் மதியேன். ஆதாரமற்றவேயும் எனக்கு, உன்பாதாரவிந்தமே கதி. குலமுதலே! புகலொன்றிலா வடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன். [2] அச்சுதனே! அடைக்கலம் புகுந்த அடிமையின் இடர்களைவாய்.

இரா:—ஆருயிரனையாய்! என் வாய்மொழி என்னுவது?

பரத:—என் சபதம் வீணாவதா?

இரா:—வீண் வாதம் விடு.

சத்:—பங்கயக்கண்ணா! பார்புகழ் மன்னா! பொன்னருள் பூத்த புண்ணியா! உன்னைச்சரணம் அடைந்தார்க்கு அபயமில்லையோ?

இரா:—சத்துருக்கா! உனக்குமா இம்மயக்கம். [3]முன்சொற்காத்த பின்னரே, பின்சொற்காக்கவொண்ணும்.

---

(1) மணமலரை—மணமுள்ள புஷ்பத்தை; மணம்புரிந்த மனைவியை. (அங்கம் 1-களம் ஒன்றில் காண்க)

(2) அச்சுதன்—சரணமடைந்தவனை நழுவவிடாதவன்; அழிவில்லாதவன்; குணம் மாறாதவன்.

(3) தேவர்கட்கும் தாதையர்க்கும் அளித்த சொல்.

பரத:—ஆவியே! அமுதே! அற்றவர்கட்கருமருந்தே! நின் நல் வரவு நோக்கியே நலியும் நகர் உறைவார்க்[1]கென்கதி சொல்லாய்.

இரா:—நின்கதியே நற்கதியெவர்க்கும்.

பர:—நற்கதியோ? நிற்கதியே? (ஜனங்களை நோக்கி) ஏழையீர்! சிந்திக்க நெஞ்சிலையோ? வந்திக்க மெய்யிலையோ? துயரகல எழுமின்; தொழுமின்; பணிமின் இப்பரமனை.

[அனைவரும் இராமபிரான் பதத்தினில் பணிகின்றனர்.]

வாமனன்:—இராமா! அபிராமா! சுகுணாபிராமா! [2]சம்சாரம் சாரமற்ற தறிந்தோம். உறவினர் உதவாத துணர்ந்தோம். அவரைப் பிரிந்தோம். முற்றும் மறந்தோம். நின் பொற்றாமரையடியே போற்றினோம். எற்றைக்கும் உந்தன்னோடுற்றோமே யாவோம். உனக்கே நாம் ஆட்செய்வோம். காதலித்த எம்மை யாதரித்தருள்.

இரா:—அன்பரே! ஆரியரே! நெறிமுறை நினைவீர். உறுநிலையை யுணர்வீர்.

வாம:—மைதிலி மணாளா! தம்மை யுகப்பாரைத் தாம் உகப்பர் என்னும்சொல் தம்மிடையே பொய்யானால், சாதிப்பார் யாரினி?

இரா:—உயிரினையும் விடுவேன். உயிரினுமினிய திருமகளையும் விடுவேன். இறைவன் ஏவலை எள்ளளவும் விடேன். வாய்மையை என்றும் கைவிடேன். இது வேதமொழியாகும்.

வாம:—இரக்கமுனக்கு இன்னுமெழாதது எம்பாவமே.

பரத:—இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்புபோல் ஆனேனே! இப்படியா முடிந்ததென்கதி! எப்படி உய்வேன்? (சற்று யோசித்து) ஆம். ஆள்பவர் ஆள்க அந்நாடு. நான் இப்பணிபடர் காடுடன் படர்தலை மெய். புற்களைப் பரப்பி இப்படியினிற் கிடப்பேன்.

[தருப்பைப் புற்களைக் கொய்துவரச் செல்கிறான். சத்துருக்கனும் பின்தொடருகிறான்.]

---

(1) என்கதி—என்னகதி; என்னுடையகதி; நான்திரும்பிச் செல்லல்.
(2) வாமனன் சொற்களால் பிரபன்னனுடைய ஐந்து அங்கங்களும் நன்குணர்க.

வசி:—அவனன்றி யோரணுவும் அசையாது.

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தலரிது."

—திருக்குறள்.

ஆளான் பரதன், மீளான் முதல்வன்.

குகன்:—நம்பி! ஏன் வம்பு? ஒன்னெ நம்பிவந்த நல்ல தம்பி நொந்து அலேவான். அன்புவை.

ஜாடாலி:—இராமசந்திர! இதுவரை உன்பிறவி எத்தனையோ! எத்தனை அன்னையோ! அப்பனெத்தனையோ! இறந்தேகின தந்தைக்கு, இனியுன்னால் ஆவதொன்றில்லை. பொய்யெனும் உலகினில் மெய்யுளதெனின், அது பொய்யே ஆகும்.

"மாயையால் விளைந்த வண்ணமல்லது வாய்மையாக
மாய்தலும் பிறத்தலுனும் மன்னுயிர் தனக்குமில்லை
மாயையிற் றீர்ந்து நின்ற மற்றுனக்குண்டு கொல்லோ
மாயைநின் ஞேற்ற மெல்லா மதிக்கினேர் விளையாட்டன்றே."

—பாகவதம்.

மறையாவது! நெறியாவது! வாய்மையாவது! தூய்மையாவது! புண்ணியமாவது! விண்ணுலகாவது! எண்ணரிய தவத்துளார் எண்ணிலா ஊழியூழி தவம் செய்தும், எண்ணிய பயனடையாது இன்னும், அண்ணுந்துளர். வீணே வனந்தனில் வருந்துவதொழி. மறுமையை யறவே மறந்திடு. கைப்பொருளை யிழப்பதேன்? பொருளிலார்க்கு இவ்வுலகில்லையென்பர்.

இரா:—பாமறையோதியும் மறைபொருளுணரா முனிவருமுளரென இதுவரையறியேன். வையம் நிலைப்பது வாய்மையிலேயே. வாய்மையிழந்து வாழ்வுமுகக்கவா? இன்பமும் பொருளும் அழிவுறும் ஒருநாள். அழியா இன்பம் அளிப்பது அறமே. வைதிக வேடம் பூண்டு வையகத்தை வஞ்சிப்பவர் வேதியராவரோ? யாவும் பொய்யேயாயின்,

நீரும் பொய்யே. நம்முரையும் பொய்யே. பொய் மொழியை எங்ஙனம் மெய்யெனக் கொள்வது? ஆரணநெறியகற்ற ஓர் காரணம் கற்பித்தீர். வேதநெறியற்றீர். வாதநெறியுற்றீர். யுக்தி வாதத்தால் என் புத்தியைப் பேதிக்க முயல்வதால், என்ன சித்தியுமக்கு? மறைவழி கடந்தார்க்கு, இறைவனருள் எவ்வாறு கிட்டும்? உம்மையும் எம் மன்னவர் எங்ஙனம் அவைக்கண் அமர்த்தினரோ?

வசி:—சத்தியசீலா! உத்தமபுருஷா! நித்தியரூபா! செவிகொடுத்து என் சிறுமொழி[1] கேளாய். ஐங்குரவரில் அழிந்தொழியும் ஆக்கையை யாக்கியவர் தாய்தந்தையர். அறியா அறிவளித்து, அழியாப்பதம் அளிப்பவர் ஆசிரியர். அன்று, பற்பல விஞ்சைகள் எம்பால் பெற்றதுப் உண்மையேல், இன்றும், என் மொழிப்படி நடப்பாய்.

இரா:—மும்மையு முணர்ந்த முனிபுங்கவ!

"எற்றி மனத்தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும்
மாற்றினவர்க் கொருகைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ்ச்
சாற்றி வளர்ப்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே."

—வேதாந்த தேசிகன்.

உம்மையன்றித் தெய்வமொன்றில்லை யெமக்கு. நம் பேரருளால் எம் குலத்தினர் அழியாப் பெரும்புகழ் பெற்றனர். இதமொழிபேற்க அநாதினமும் காத்துளேன்.

வசி:—தீனசரணிய! ஞான பரிபூரண! தினகர குலகமல திவாகர! மரணமே நேரினும், சரணமென்றடைந்தாரைக் கருணையொடு காத்திடல், உன் புகழ்குலத்தியல்பு. நின் முன்னவரில் ஒருவரும் இந்நாள்வரை அந்நன்னெறி பிறழ்ந்திலர். கொடியவன வேடனது கடியபசி போக்கிடத் தன் உடலையும் எரியினில் உணவாயாக்கிய கபோதமிலாறு அறிவையன்றோ? நின்னுடன் பிறந்த உத்தம பரதன் முன்

---

(1) கேளாய்:—கேள்; கேளாதே.

காரணத்தானும் உன்னைச் சரணமடைந்துளன். உள்ளமும் உயிரும் உருகினன். அளவற்ற அன்பால், அடியற்ற மரமென அடியினில் வீழ்ந்தனன். நின்னையே நினைந்து நைந்திடும், அவன் நிலைபெற நினைவாய். எனதாணையால் நகரேகுவாய். நானிலமாளுவாய்.

சும:—கோமகனே! காவலனே! மாமுனி மொழிந்தபடி மாநகரெழுந்தருள். குலமெலாம் நலமடையும். நானிலமுய்யும். நாற்றிசையும் உன்நல்லிசை பரவும்.

இரா:—சுமந்திரரே! சோதனையேன்? [1] தேன்தரு மலருளான் [2] சிறுவ! அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம். அன்னவர் ஆணை முந்தியது. அன்றியும், செய்வனென்று ஏற்றபின்னர், அவ்வுரை மறுப்பதும் தகவோ? தாய் விரும்பியதும் தந்தை யேவியதும் எதுவாயினும், அதனை மேற்கொளாத புலையனினும் நாயெனத் திரிவதே நலம். என் மறுத்துரை பொறுத்தருள்வீர்.

[தருப்பைப் புற்களுடன் பரதன் பிரவேசம். சத்துருக்கனும் பின் வருகின்றனன்.]

பரத:—வள்ளலே! வளநகர் வாராயோ? துணையாளனாகாயோ? அருள்மாரி பொழியாயோ? (இராமன் மௌனம்) கூவியழைத்தும் பாவிமுகம் பாராயோ? ஏழைதுயர் தீராயோ? ஆண்டருளும் அண்ணலே! மீண்டும் உன்னையே வேண்டுவன். நீ கைவிடில் நான் உயிர் விடுவேன். கருணையங்கடலே! கதறுகின்றேன். காத்தருளத் திருவுளமில்லையோ? (இராமன் மௌனம்) இன்னுமா மௌனம்? (சற்று யோசித்து) ஆ! [3] சிலையிருப்பதால் சித்தமிரங்கிலன். சிலையாளன் எனையாளான். இனி என்னாகில் என்னெனக்கு? கருமுகிலே! நின் அருள் சுரந்து பொழியும்வரை, இப்பன்னசாலையின் வாயிலிற் கிடப்பேன்.

[தருப்பைகளைப் பரப்பிக் கைகளைக் கூப்பிப் படியினில் கிடக்கின்றான்.]

---

(1) பங்கய மலரோன் (பிரமன்) புத்திரன்.
(2) நாராயணனாகிய தான்படைத்தபிரமன் புதல்வனாதலால் சிறுவன் என்றான் இராமன்.
(3) சிலை:—கல்; வில். (அரக்கரையழிக்கவில்லேந்தியதால்இரக்கமிலன்.)

இரா:—புகழோங்கப்பிறந்த புண்ணிய! இக்கடுவிரதம் அடுக்காதுனக்கு. கடன்தீர்க்காக் கடையனே யான்? என்னுளம் புண்ணாக, இன்னும், வருத்துவையோ? மண்மயக்கம் தேறிய நீ, உள்மயக்கம் தீர்ந்திலையே!

"பிறந்தோருறுவது பெருகியதுன்பம்
பிறவாருறுவது பெரும்பேரின்பம்
பற்றின்வருவது முன்னது பின்ன
தற்றோருறுவதறிக." —மணிமேகலை.

நீ மனம் வைத்தாலன்றி, மாநிலம் உய்யுமாறில்லையே.

பரத:—(படியினிற் கிடந்தபடியே வேதியரை விளித்து) வேதியர்ஏறே! ஏதிலேன்! என் செய்வேன்? துயராழிக் கரையேறக் கைகொடுத்துக் காவீரோ?

வசி:—குலமணியே! தலைமகன் [1] நிலையெண்ணி நலியவேண்டாவென்று, அன்றே உணர்த்தினேன்.

இரா:—கலைவலவா! அந்தணர் எந்த நாளும் உதவியருள்வர். வேதியரோதியும் உணர்ந்திலையோ? [2] வேதனை யொழி. எழுந்திரு.

பர:—(சிரத்தினிற் கரங்குவித்தெழுந்து) உயர்வற உயர்நலமுடையாய்! மயர்வற மதிநலமருளினை. நின்றநின் நிலையையானுணர்ந்தனன். என்றும் என் நிலையை நீ யறிந்தனை. பணிசெய்து வாழப் பெறவே, நின் பின்னவனாய்ப் பிறந்துளேன். பேரருள்பெற யான் எத்துணை வேண்டியும், நின் பொன்னடி அருளிலதாயது. திருவருள் அடைய, உனது மரவடிகள் இணைடினையும் வேண்டினேன். அருள் புரிவையேல், இருவருரையும் பொய்க்காது மெய்க்கும்.

இரா:—தந்தேன். பாதுகை தந்தேன். பெற்றேகுவை.

[பாதுகையை அளிக்கிறான்.]

(1) நிலை—பாதுகை; நிலைமை.

(2) வேதனை—வருத்தத்தை; வேதமோதும் தேவனே.

பர:—(சிரத்தினில் தரித்து) பெற்றேன்! நிலைபெற்றேன்! திருவருள் பெற்றேன்! பணிசெயப் பெற்றேன்! ஒப்பரிய பொருளைப் பெற்றேன்! அடித்தலமலரை என்முடித்தலம் சூடினேன்.

"உடையநாதனே போற்றி நின்னலாற்
பற்றுமற்றெனக் காவதொன்றினி
யுடையனோ பணி போற்றியும் பரார்
தம்பராபரா போற்றி யாரினுங்
கடையனாயினேன் போற்றி யென்பெருங்
கருணையாளனே போற்றி யென்னைநின்
னடியனாக்கினாய் போற்றி யாதியும்
அந்தமாயினாய் போற்றி யப்பனே."

—திருவாசகம்.

இரா:—மறையவர்திலக! மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி, இக்குறைவிலான் சிரமதில் புனிதநீர் பெய்து, மஞ்சன மாட்டி மகுடம் சூட்டுவீர்.

பரத:—அண்ணா! என்ன? மஞ்சனமாட்டவா? மகுடம் சூட்டவா? உனக்கிலா மனைவாழ்க்கை எனக்கா? மரவுரியுடுத்து மான்றோல் விரித்துக் கனியிலை நுகர்ந்து, நந்தியம்பதியினில் நின் நல்வரவு நினைந்துய்ந்திடுவேன். நின் மரவடியே மகுடம் சூடும், மாநிலமாளும். நிலைதந்த தாரகனே! நிடமித்த நாயகனே! போஷகனே! போக்கியனே! ஏழிரண்டாண்டினில் நீ நெடுநகர்நண்ணிக் கோமுறை புரிகிலையெனில், வெந்தணல் மூழ்கியான் மாள்வது திண்ணம். அண்ணா! மன்னா! நின்னாணை! திருவாணை!

இரா:—குணமணியே! நீ வேண்டியவாறே மீண்டும் வந்து, உன் மனோரதம் ஈடேறச் செய்குவேன்.

வசி:—பரதா! பாபரஹிதா! பரமபவித்திரா! மரவடியின் மாண்பினை மன்னுலகுக்குணர்த்தவே வந்துதித்தனை. மக்காள்! துன்பமிகு துயரகல இத்துயாறு சுடரடி தொழுதெழுமின்.

"அருவுருவா னவையனைத்து மறிவாரேனும்
அருங்கலைகள் கற்றுரைக்க வல்லாரேனும்
கருமவழி யடியொழுகக் கவல்வாரேனும்
கனிமறையின் முற்பொருள் கருவாரேனும்

இருவினையி னொழுக்கத்தா லேவலோரா
திங்கோளுஞ் சிறையிருந்த வீனந்தீர்க்கும்
திருமகளார் பிரியாத தேவன் றிண்ணந்
தேறுதார் திண்படியிலேறு தாரே."

—வேதாந்த தேசிகன்.

[எல்லோரும் பணிகிறார்கள்.]

களம் 7 முற்றிற்று.

களம் 8

இடம்:— சித்திரகூட மலையில் ஒரு காடு.

பாத்திரங்கள்:— அன்னையர் மூவரும், மைந்தர் நால்வரும், மற்றுமுள நண்பரும் பிரவேசம்.

இரா:—(கைகேயியின் அடிவணங்கி) அன்பார்ந்த அன்னையே! [1] அவனிபாரமகற்றிய அருட்பெருந்தேவி! உமது பேருதவிக் கேற்றதொரு கைம்மாறு காணகில்லேன்.

கைகே:—மன்னுபுகழ் மைந்த! பெண்ணறம் ஓம்பியே பெரும்பழி யேற்றேன். [2] பார்விளங்கப் பழிசெய்த பாவியையும் போற்றுவையோ?

இரா:—நும்புகழே ஏத்துவன். என்னை நீர் வாழ்த்துவீர்.

கைகே:—மறையவரும் இமையவரும் உன்னையே வாழ்த்துவர். சகமறிப மகனுமென்னை மனமிடியத் தாழ்த்துவன்.

இரா:—பரதா! இவ்வறக் கற்பினளை, அருட்பெருஞ் சோதியை, அரிவையர்க்கரசியை அன்புடன் ஆதரிப்பாய். அகமகிழ்விப்பாய்.

---

(1) தன் தலையில் தந்தைவைத்த பூபாரத்தை யகற்றினள்; அரக்கரை யழித்து அவனிபாரமகற்றக் காரணமாயினள்.

(2) இழைத்த பிழையை பாரோர் அறிவர்; பார் விளக்கமுறவே இழைத்த பிழை.

பர:—காரணகார! கருணகர! உற்றுணர உணர்வற்று உளறினேன்; பித்தனாய் இதுவரை பிதற்றினேன். இன்றென் சித்தம் தெளிந்தேன். குற்றமினி புரியேன். அன்னையே! மன்னித்தருள்.

[பணிகிறான்.]

இரா:—ஏத்தரும் பெருங்கீர்த்தியாய்! மெச்சினேன் நின் மாசற்ற மதிக்கு. சத்துருக்கா! இலக்குவன் என்னுடனுறைந்து உதவுவன். இப்புனிதனையண்மி அகமகிழ்வை.

சுமி:—மைந்தா! உய்ந்திடவேண்டில் உத்தமோபாயமிதுவே.

சத்:—நெடியோனே! இவ்வடிமைக்குற்றது உன் அடியார்க்கு அடிமையே. நின் தாள் தொழுவார் என் தலைமேலார்.

இரா:—பிறப்பினிற் கடையனேயாயினும், சிறப்பினில் நெடியனேயாயினை.

சுமி:—இராமானுச! வனமுறையும் ஓர் புதல்வனைப் பெறவேண்டி, நோற்ற நோன்பின் பயனாய் உன்னைப் பெற்றேன். திருமகள் தலைவனுக்கு அடிமையாக்கவே, அன்புடன் உன்னை வளர்த்தேன். அருந்தவப்பயனே! இப்பெருந்தகையே சிறந்ததொரு [1] தந்தையுனக்கு. தாயினும் உயரியவள் [2] இச்சானகிமணியே. மன்னவர் மைந்தனென நினையாது, எந்நாளும் எவ்விடமும் அடிமை பூண்டொழுகுவை. கண்மணி! கண்ணிமைபோல் இருவரையும் காத்திடு. மாநகர்க்கு இவர் வந்திடின், நீயும் உடன்வந்திடு. மன்னுலகிற் சிறந்திடு.

இல:—அம்மணி! அர்த்தபரர் அல்லர், உத்தமியின் [3] புத்திரர். உத்தமர்க்கென்றும் மித்திரரே.

சுமி:—செல்வா! [4] கடலனைய கம்பீரன்வடிவழகிற் கண்வைத்திடின் அடிமைத்தனமிழப்பாய்.

---

(1) & (2) நிருபாதிக பந்துக்கள்.

(3) சுமித்திரையின் மைந்தர் இருவரும்.

(4) அழகனது பேரழகில் மூழ்கினால், தன்னைமறந்து தன் பணியையும் இழக்க நேரும்.

இல:—அன்னையே! வள்ளலின் குணங்களே வலித்தெனையிழுத்தன. ஆணைப்படி அடிமையே யாவேன்.

கோச:—தனையா! நினையாய்! நினையே ஆயினேன்.

இரா:—தாயே! துயரமேன்? மைந்தரிருவர் அருகிருந்து உம்மை என்றும் மகிழ்விப்பர்.

கோச:—உண்மை. இவ்விருவரும் எனக்கினியரே. உற்ற நற்றுணைவரே. அப்பனே! எப்பிறப்பிலும் உன்னையே மகனாகப்பெறப் பெறுவேன். அருமை மருகி சானகி! பதியே கதியெனவந்த பரமகல்லியாணி! நன்மண நாளில் உன் தந்தை யுணர்த்திய குணமொழி மறவாய். கணவனைக் கணமும் பிரியாய். துணைவனைச் சிறிதும் இகழாய். மாமியை நினையாய்.

சான:—மாமி! தலைவரை அவர் நிழலென அநுதினமும் அநுசரிப்பேன். உடனிருந்துபசரிப்பேன். [1] அரிய தருமம் ஆசரிப்பேன்.

குக:—நாயகமணியே! இந்த நாய்க்கெந்த வழி?

இரா:—யாதினுமினிய நண்ப! நீயும் பரதனும் ஒன்றேயெனக்கு.

குகன்:—பரதாழ்வானுவ என்னுலாவாது. எளையபெருமானும் நானும் ஒன்னுனுப் போதும்.

இரா:—ஆருயிர்த்தோழா! நின் துணையின்றித் தாய்நகர் நுபருறும். பரதனும் பரிதவிப்பன். என் வேண்டுகோளுக் கிணங்க வேண்டுவன்.

குகன்:—வேண்டணுமா? நாயெ வான்னு வருது. போன்னுப் போவுது. போட்ட இடமே இருக்குது. அந்தக் கடையன்போலே இந்தக்காடன் நடக்கத் தடையேயில்லே.

வசி:—குகப்பெருமானே! உடையவனுவப்பே அடிமையினுவப்பென உணர்ந்தனை. உலகினில் உனக்கிணை யொருவருமில்லை.

---

(1) சரணமென்றுலன்றிக் காவார் இறைவர். பாவமே புரியும் பாவியரையும் காப்பவள் விலக்குவதறியா இலக்குமி.

குகன்:—பாததூளிபட்டுச்சே! தீப்பட்ட தூசுபோலெ, பாவமெல்லாம் எரிஞ்சுபோச்சு.

பரத:—ஜானகிரமணா! நிரந்தரமும் உன் பாதபங்கயம் யான் நினைக்கவே நீ நினைக்கவேண்டுவன்.

"நின்னருளாங் கதியன்றி மற்றொன்றில்லேன்
நெடுங்காலம் பிழைசெய்த நிலை கழிந்தேன்
உன்னருளுக் கினிதான நிலை யுகந்தேன்
உன்சரணே சரணென்னுந் துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்றநிலை யெமக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தே னுன்னை
இன்னருளாலினி யெமக்கோர் பரமேற்றாமல்
என்திருமா லடைக்கலங்கொள் ளென்னை நீயே."

—வேதாந்த தேசிகன்.

இரா:—இருவரும் ஒருவரை யொருவர் என்றும் மறவோம். அன்னையரே! அந்தணரே! அமைச்சரே! அன்பரே! அருளொடு விடையுமளிப்பீர்.

வசி:—வாழி! அறம்வளர வாழி! மறம்தளர வாழி! சிறந்துயர வாழி! நிரந்தரமும் வாழி!

[இராமனுடன் சீதையும் இலக்குவனும் ஒருபக்கம் செல்ல, மற்றவர் மற்றொருபக்கம் செல்கின்றனர்.]

களம். 8 முற்றிற்று.

களம் 9

இடம்:—நந்திக்கிராமத்தில் ஒரு கோலுமண்டபம்.

பாத்திரங்கள்:—பரதன் சத்துருக்கன் வசிட்டர் சுமந்திரர் நகரவாசிகள்.

[பாதுகையை ஒரு பீடத்தில் அமர்த்தி துளபமாலை சூட்டி, வேதமோதி, தீபம் தந்து மஞ்சனமாட்டுகின்றனர். பூசை நடக்கின்றது.]

பர:—என்னபிழை யிழைத்தேன்! பாதுகையைப் பிரித்தேனே! மலர் மகள் கைவருடக் கன்றிச்சிவந்திடும், அவன் கமல

மலரடிகள் ஆங்கென்படுமோ? மறையவர் திருவே! மறுபடியும் அவன் திருவடியில் இம்மரவடியைச் சேர்த்திடவா?

வசி:—[1] எண்ணுதற்கரிய புண்ணியசரித! கலையெலாம் கற்ற நீ [2] கல்வியிலாதவனையினை. அடியார் இடர்களையும் அந்நெடியவன் இணையடிக்கு, மற்றோர் அடிநிலையும் வேண்டுமோ?

பர:—அமுதனது நளினமலரடியின் மதுரமது இதுவரையருந்தியுகந்தது இம்மரவடி. இதன் இன்பத்திற் கிடையூறும் இழைத்தேனே!

வசி:—மாசிலாமணியே! தானுண்ட தேனை நீயுண்ண எண்ணியது.

வாம:—மறைவல்லீர்! யாவரும் விரும்பியது ஆயகனாட்சியன்றோ?

வசி:—கோரியபயனினும் கோடிமடங்கு அதிகமடைந்தனர் எவரும். அடியவர் பூசையால்அகமகிழ்வன் அவ்வாண்டகை.

வாம:—வாழ்வினில் உடனிருந்துகந்த மரவடி, தாழ்வினில் அவன் தாள்அகன்றதும்அழகோ? திருமகள் செய்வினை சிறிதுங் கருதாது, இரு நிலமாள இசைந்தது சரியோ?

வசி:—உடையவனுவப்பே அடிமையினுவப்பு.

வாம:—தலைவனையகலகிலாச் சனகன் திருமகள் [3] புன்சொற் புகன்றவன் பின்செல நினைந்தனளே!

வசி:—ஆம். அடிமைத்திறத்தினில், அத்திருமகளையும் வென்ற திவ்வடித்தலம். வருந்தியழைத்தும் வாராத அப்பாதாரவிந்தம் அருளிலதாயதெனக் கருதி, அவனிருபதமகன்று உறுபதம் உங்கட்களிக்கவே, வந்திவணமர்ந்தது.

வாம:—அடிமையின் ஆட்சியை அவனிமாதேற்குமோ?

வசி:—தலைவன் ஏவலைத் தலைமேற்றாங்குவள் இந்நிலமகள். சராசர மனைத்தையும் நற்பாலுக் குய்ப்பவன் அப்பராபரன். தன்னையே வேண்டி, மற்றெதுவும் வேண்டாதானைத்,

(1) எண்ணுதற்கு — நினைத்தற்கு; எண் நுதற்கு - பிரமனுக்கு.
(2) கல்வி இலாதவன்; கல்வியில் ஆதவன்.
(3) நகரிருக்கவேண்டிய இராமனை வற்புறுத்திப் புன்சொல் புகன்றனள் சானகி; புன்சொல் புகன்ற இராவணனையும் குறிக்கும்.

தான் வேண்டி வான்வேண்ட வைப்பன் அவன். பணி செய்த பாதுகையைப் பாராளவைத்ததுவும் பெரிதோ ?

வாம:—மண்டலம் ஆண்டிடல், [1] பெண்டிருக்கேற்றதோ ?

வசி.—உத்தமனுகந்தபடி உலகாள உற்றதும், இவ்வுத்தமிக் கேற்றதொரு பணியே.

பரத:—பரமகுருவே ! இம்மரவடியின் மாண்பினைப் பரிவுடனெமக்குணர்த்துவீர்.

வசி:—திருவினுக்கும் திருவாகிய செல்வனவன். ஆக்கமனைத்தையும் அகற்றிய அச்செல்வனுக்கும் அகற்றகில்லாச் சிறப்பு வாய்ந்ததிது. அண்டம்தாங்கும் ஆண்டவனையும் தாங்குவது அவன் அடியிணை. அத்திருவடித் தாமரையும்தாங்கியது இம்மரவடியெனில், தாங்கும் திறம் வாய்ந்தது, இதனினு முளதோ? இப்பொருளுக்கு, எப்பொருளும் ஒப்பில்லை. இருநிலத்தை ஓரடியாலடக்கி, மாவலியின் மதமடக்கியது இம்மரவடியே; கோதமமுனியின் மாதினை, அன்று சிலையுருபோக்கிச் சுயவுருவாக்கிப், பின்னும், கோதிலளாக்கியது இப்பாதுகையே. அன்றியும், கற்ற கலையால் உங்கட் குற்ற கவலையும் போக்கியது. ஆனது பற்றியே, வான் பணயமாய் இதைவைத்துப் போயினன். இவ்வடிநிலையை வழிபடில், அல்லலெல்லாமகலும்.

பரத:—முனிபுங்கவ ! மதிமயக்கற்றேன். கதிபெறக் கற்றேன். துதிபெறவுற்றீர். மாமணிப் பாதுகையே! நின் திருவுறும் ஆட்சியால், மநுநெறி நிலைத்துநிற்கக், கவரியின் காற்றையேந்தித் தரளவெண் கவிகையோங்கத், தரணியைத் தாங்கியருள்.

[பாதுகைக்கு முடி சூட்டுகின்றனர். அனைவரும் போற்றிப் பணிகின்றனர்]

அங்கம் 2 முற்றிற்று.

(1) 'பாதுகா'—இச்சொல் ஸ்திரீலிங்கமாதலின் பெண்ணெனச் சொல்லப்பட்டது.

அங்கம் 3

களம் 1

இடம்:—நந்திக்கிராமத்தில் ஒரு யாக வேதிகை.

பாத்திரங்கள்:—பரதனும் சத்துருக்கனும்.

பர:—துணைவ! [1] திருமந்திரத்திற் பிறந்து திருவொடு மருவிய திருமகன், அரணியமதனில் [2] திருவற்றலைகின்றனன். இருவரும் இளைஞனுடன் இனிதுவர இயற்றுமிவ்வேள்வி, இன்று நிறைவேற இறைவன் அருள் வேண்டுவம்.

"ஆக்கமுமழிவுமின்றி யகண்டமா யமலமாகி
வாக்கொடு மனத்துக்கெட்டா வள்ளலே யறத்தின் வாழ்வே
தீர்க்கவுந் தீயோர் தம்மைச் செய்வினை நலத்திேனோரைக்
காக்கவுமன்றோ கடவுளவ்வுருவமம்மா."

—பாகவதம்.

இடையூறிதற்கிழைத்திட இரவினில் நிசிசரர் விரைந்திடில், வரிசிலை வளைத்து, அவர் சரமழை விலக்குவம்.

[ஆஞ்சனேயன் சஞ்சீவிகிரி யேந்தி அந்தரத்தேகுகின்றனன்.]

சத்:—அண்ணா! மந்தர மலையென அந்தரத்தெவனோ விரைந்தெழுகின்றனன்.

பர:—அரக்கனேயவன். என் கணைக்கவனை இலக்காக்குவேன்.

[கணையொன்றேவ, அடியுண்ட அநுமான் படியினில் வீழ்கின்றனன்.]

அநு:—(சினங் கொண்டு விரைந்தெழுந்து) பாதகமிழைத்த பதரே! மதங்கொண்ட நின் மார்பகம் இரண்டுபடப், பிளந்திடுவன் என் கரங்கொண்டு. (பரதனையணுகி இராமனென எண்ணிக் கரங்குவித்து) இராமா! பரந்தாமா!

பர:—ஐயனே! அவரது திருநாமம் உரைசெயும் நீவிர் யாவர்?

---

(1) அரண்மனையில்; அஷ்டாக்ஷரத்தில்.

(2) திருவற்று—செல்வமிழந்து; சீதையைப்பிரிந்து.

அநு:—மூவரும் ஒருருவாயுதித்த தாசரதி தாசன் யான். என்னை ஆஞ்சனேயனென்பர். அஞ்சாநெஞ்சு படைத்து, என் அஞ்சன வண்ணனுக்கு இன்னலிழைத்த நீ யாவன்? உண்மையுரைப்பாய்; இல்லையேல், இறைப்பொழுதினில் உயிரினை யிழப்பாய்.

சத்:—ஆறுவது சினம். பொறையாளன் பேரடிமையாயின், பொறுத்தருள். இறைவனது மரவடியின் அடிபணியும் அடியவரிவர். திருவருள்மறவாத நினைவினால், இன்னுமிறவாத இனியரிவர். அப்பெருந்தகையின் நல்வருகை நினைந்து, அதனாலுய்ந்திடும் உத்தம பரதர் இவர்.

அநு:—அப்புகழ்பெறு பரதன் நீயேயோ? நின் நயவுரை நம்பி, என் நாயகன் உன்னையும் இனியனென, இன்னும், நினைந்துளன். இழிஞன் இராவணனுக்கு உறுதுணையாயுதவிய நின்னிதயம் அறிந்தேன்.

பரத:—அறியாதிழைத்த பிழையிது.

அநு:—(அரக்கரின் மாயையென எண்ணி) அறிந்தே புரிந்தவினையிது. அறிவேன் அரக்கரின் அறிவரிய மாயை. அடியவர் வடிவமெடுத்து இழைத்த கைதவத்திற்குக் காலநேமியை யான் காலனுலகுய்த்தனன். அப்பாவி போனவழி, இன்னும் வேலியிடப்பட்டிலது. என்னையும் வஞ்சிக்க, நெஞ்சினில் நினைந்தனையா? நெடியமால் வடிவமெடுத்தனையா? இலக்குவனுருவம் அடைந்தனனிவனும். இருவரையும் போக்கி, இறைவன் பகை போக்குவேன். காக்கவும் வல்லீரேல் காட்டுவீர் கைத்திறம்.

[கரத்தை யோங்க]

சத்:—வானரவீரரே! விண்மாரியெனவே கண்மாரி பொழியும், இவர் உண்மை நிலை காணவல்லீரோ? இப்புனிதரை நொந்திடில், அப்புனிதரும் நோவர்.

அநு:—குறிவைத்தடித்த குறிப்புதான் என்னோ?

பர:—திருமகளுடன் இறைவன் இனிதுவந்து இன்புறவேண்டி, வேதியர் விதிப்படி வேள்வியொன்றியற்றினேன். இடை

பூறிழைக்கவரும் அரக்கனென்றெண்ணி, என் கணைக் கும்மை இலக்காக்கினேன். பொலிவுறும் அவ்வெரிதனைக் காணுவீர். தெளிவுறுவீர்.

அநு:—ஐயம் தீர்ந்தனன். மெய்யடிமை யுடையாய்! ஐயன் மொழி மெய்யே. பரமனடி பணிவார், பிழை சிறிதும் புரியார். அம்புவியில் உன்போல் தம்பியுமில்லை; அன்பனுமில்லை; அடிமையுமில்லை. [1] வானரன் அறைந்த வன்மொழி மறந்திடு. இன்னருள் புரிந்திடு.

பரத:—[2] வானரன் புரிந்தது வானிற் சிறந்தது. கருமுகில் வருநாள் குறுகியதன்றோ?[3] அரணியன் உறையிடமெதுவோ?

அநு:—அரக்கர் இடர் பொறுக்காது அடைக்கலமடைந்த அருந்தவர்கட்கு அபயமளித்தனர். அவனிபாரம் அகற்றிட அகத்தியரளித்த அருஞ்சிலைபெற்று, அவர் பஞ்சவடியுற்றனர். ஆங்கு அழகனைக் காணவும், காமுற்ற சூர்ப்பனகை அணுகிவந்தடையவே, அநுசன் அவ்வரக்கியின் அங்கங்களறுத்து அவளையும் துரத்தினன். அஃதறிந்து, அமராடநாடிய கரதூஷணதியரைக், காகுத்தர் ஒருவரே கடுஞ்சிலை வளைத்துக் கடிதினில் வீழ்த்தினர். பரிபவம் அடைந்த கொடியவள் விரைவினில் இலங்கையடைந்து, இராவணனடி பணிந்து குறைபல புகன்று முறையிடவே, மாதர் மயக்குற்ற பாவியும் காமியாய், [4]மாயமானொடு [5] மாயாமானை யணுகினன். [6] அம்மானையும் அநுசனையும் வஞ்சனையிற் பிரித்து, அஞ்சனவிழியளை அபகரித்தேகினன்.

பர:—அந்தோ! திருவற்ற திருமால் தனிநிலையென்றோ? இன்னுயிர் துறவாது, இன்னுமிருந்தனரோ?

---

(1) & (2) வால்நரன்; வான்நரன்.

(3) ரக்ஷகன்; அரணியமுறைபவன்

(4) மாயமமைந்தமான்; மாய்வதற்கு மானொடு.

(5) மாயாமான்—சீதை.

(6) அம்மான்—இராமன்.

அநு:—[1] இன்னுயிர் இங்கிருக்க, ஆங்கெவ்வுயிர் துறப்பர் அவர்? தேவியை யெங்கும் தேடியலைந்து, வானரருறையும் மாமலை வந்தனர். [2] கதிரவன் மைந்தனைக் கருணையால் நோக்கினர். பிறன்மனை நயக்கும் பிழைபொறாப் புனிதர், வாலியின் வலியை யாங்கே வாங்கி, ஏங்கியவானரர்க்கு அவர் [3] மனையுமளித்து, மௌலியும் கவித்தனர். பிறகு, திருமகள் சிறையிடம் இலங்கையென்றறிந்து, வானரவீரருடன் ஆழ்கடல் கடந்து, அத்தீவினை யடைந்தனர். பகைவரையும் உறவுகொளக் கருதும் உதாரர், சரணமடைந்திடில் அபயமளிப்பதாய்ப், பரதேவியைப் பிரித்தபாவிக்கும் அருளினன். நாடிய வீடணரை அவர் கூடியதறிந்தும், [4] காலவசத்தனாய் அத்தசவதனன் இசையாதொழியவே, போரினைவிளைத்துப் பேரிலங்கை யெழிலழித்துப், போர் அரக்கர் அனைவரையும் கொன்றுவென்று நின்றனர். பின்னர், அப்பாவியின் கான்முளை மாயமாய் மறைந்து, [5] மாயப்போர்விளைத்து, இளையபெருமானை வீழ்த்தினன்.

பரத:—அந்தோ ! அவ்வீரனும் இறந்தனனோ ?

அநு:—இறந்திலன். இறவாதிருந்திலன். ஆதவன் உதயமாயின், அவன் ஆவியும் மாயும். அதற்குள் அவனை உயிர்ப்பிக்க வேண்டி, அச்சஞ்சீவிகிரியை அடியொடு பெயர்த்து அந்தரத்தேகாகின்றேன். இடையினில் அதற்கு இடையூறிழைத்தனை.

பர:—ஆய்ந்தநேயரே ! கணமதில் உம்மை இலங்கை யடைவிப்பேன், என் கணைவலியின் துணைகொண்டேகுவீர்.

அநு:—வாலியைக்கொன்ற வல்லவன் அருளிருக்க, என் வலிக்கென்னகுறை? வாயுவேகமாய் ஏகவல்லேன். விடையளிப்பாய்.

---

(1) உயிரனைய பரதன்.
(2) சுக்கிரீவன்.
(3) வீடு; மனைவி.
(4) கெட்டகாலம்; யமன்
(5) கபடப்போர்; மாய்வதற்குப் போர்புரிந்து.

பர:—இருவரையும் தந்து [1] எம்மையும் தருவீர்.

அநு:—அஞ்சற்க! தினகரன் உதயமாயினன்றோ, உடலை விட்டுயிர கல நேரிடும். குணதிசை அவனெழாவண்ணம், அலைகடலில் அவனை என் பதம்வைத் தழுத்துவேன். ஆவிகவர அக்காலனே நேரில் வரினும், என் காலினால் அவனையுதைத்தகற்றுவேன். அமுதமே வேண்டிடில், அம்பரம் தாவி அம்முழுமதியைப் பிழிந்திடுவேன். பாரகம் பிளந்து பாதளம் புகுந்து, ஆங்குள அமுதகலையமும் கொணர்வேன். என்னுயிர் நின்றிட இன்னுயிர் நீங்காது.

"காலநேமிகாலனே கணக்கிலாத கீர்த்தியாய்
ஞாலமேழுமுண்டு பண்டோர் பாலனாய பண்பனே
வேலைவேவ வில்வளைத்த வெல்சினத்த வீர நின்
பாலராய பத்தர் சித்தம் முத்தி செய்யும் மூர்த்தியே."

—திருமழிசைப்பிரான்.

சீராமா! ஜயராம! ஜய ஜய ராமா!

[கிரியுடன் விரைந்து செல்கின்றனர்.]

களம் 1 முற்றிற்று.

களம் 2

இடம்:—நந்தியம்பதியில் ஒரு அரை.

பாத்திரங்கள்:—பரதனும் சத்துருக்கனும்.

பரத:—துணைவ! நீடிய பதினான்காண்டுகளும் இன்றோடு முடிந்தன. அருளாளன் வருநாள் எந்நாளோ?

சத்:—அண்ணா! இன்று வாரானேல் நாளையே வருவன்.

பரத:—நாளை வருவதறியேன். வருமளவும் தரியேன். வானகம் தாவிய வாயுதனையன் அத்தீவினையடையுமுன் இளையவன் ஆவிநீத்தனனோ?

சத்:—காலனுக்கும் காலன் அக்காவலன். ஐயம் தீர்ந்து, ஆறுதலடைவீர். வாய்மொழி காத்திட வையம் வந்தவன், மெய்யை நீக்கி நில்லான்.

(1) எங்களை; இம்மை மறுமைகளை

பரத:—பொய்யைப் போற்றி யானுமில்லேன். வரமொன்று தருவையோ ?

சத்:—வரமா ? உமக்கா ? அடிமைக்கும் தரமா ?

பரத:—தயை புரியாயோ ?

சத்:—கோரிய வரம்தான் என்னே ?

பரத:—அரசாள இசைவையோ ?

சத்:—ஏன் ?

பரத:—பாவி இப்புவியுள்ளவரை, அப்பரம பாவனன் பாராள வாரான். ஆதலின், உயிரொடு துயரமும் நீக்குவன்.

சத்:—நும்முயிர் நீங்கியபின்னர் என்னுயிர் நின்றிடில், அங்ஙனமே செய்வன்.

பரத:—இந்நாள்வரை யுதவிய நீ, இன்று கைவிடுவையோ ?

சத்:—எந்நாளும் உமதடியினை விடேன். மறுமையிலும் உடனிருந்துய்ய உமக்குமுன் செல்வேன். விடையளிப்பீர்.

பரத:—வாய்மையகற்றி வையம் வாழுவா ?

சத்:—என்னே என் வாழ்வு !

> " காணுளநிலமகளைக் கைவிட்டுப் போவானைக் காத்துப்பின்பு
> போனுனுமொருதம்பி போனவர்கள் வருமவதி போயிற்றென்று
> வானுதவுயிர்விட வென்றமைவானு மொருதம்பியயலோனாணு
> தியானுமிவ்வரசாள்வெனென்னேயிவ்வரசாட்சி யினிதேயம்மா."
>
> —கம்பர்.

புதல்வர் நால்வர். இருவர் அகன்றனர். ஒருவர் இறந்திடுவர். மூவரையுமிழந்து மானிலமுமாளுவன் மற்றொருவன். அண்ணு! நால்வரில் ஒருவர் போய் ஒருவர் உய்வரோ ? அன்னையரும் ஆருயிர் துறப்பரே ! புகழ்குலம் அழியுமே !

பரத:—குலப்புகழ் அழியவா? அழியாப் புகழுடைய அனலினில் மூழ்குவன்.

[போகயத்தனிக்கிறுன்.]

சத்:—முன்னம் யான் முடிவன்.

[முந்தி விரைந்துபோகிறுன். பரதனும் தொடருகிறுன்.]

களம் 2 முற்றிற்று.

களம் 3

இடம்:—நந்திக்கிராமத்தைச் சார்ந்ததோரு வனம்.

பாத்திரங்கள்:—பரதனும் சத்துருக்கனும்.

[சத்துருக்கன் தீ வளர்த்திக் கொண்டிருக்கிறான்.]

பர:—(இடிந்த மனதுடன் இராமனை நினைந்து)

"அன்னையினும் பெரிதினிய கருணையூட்டு
மாரமுதே யென்னுறவே யரசே யிந்த
மன்னுலகிலடியேனை யென்னே துன்பவலையி
லகப்பட வியற்றி மறைந்தாயந்தோ
பொன்னை மதித்திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்தலாற்றேன்
என்னையுளங் கொள்ளுதியோ கொள்கிலாயோ
வென் செய்வேனென் செய்வேனென் செய்வேனே."

—திருவருட்பா.

[தன்மயமாய் சோர்ந்து நிற்க, அன்னையரும்
ஆசிரியரும் வந்து தேற்றியுங் கேளாது,
இருவரும் திருமகளை முன்னிட்டு
இறைவனைப் போற்றி எரிதணலை
வலம் வர, அன்னையரும் பின்றொடர]

பர:
சத்: } —"உவகை யளிக்கும் பேரின்பவுருவே
யெல்லாம் உடையானே
திலகஞ் செறிவாணுதற்கரும்பே
தேனே கனிந்த செழுங்கனியே
தெவிட்டாதன்பர் உளத்துள்ளே
தித்தித் தெழுமோர் தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேற்கருளளித்த
வாழ்வே யென்கண்மணியே யென்
வருத்தந்தவிர்க்க வருங்குருவாம்
வடிவே ஞான மணிவிளக்கே
சலகந்தரம் போற் கருணை பொழி
தடங்கண் திருவே கண்மங்கைத்
தாயே சரணஞ் சரணமிது
தருணங் கருணை தருவாயே"

—திருவருட்பா.

அநு:—(அந்தரத்தினின்றும்) ஐயன் வந்தனன். ஆரியன் வந்தனன். ஆண்டவன்வந்தனன். தாசரதி வந்தனன். தசகண்ட கண்டகன் வந்தனன்

பர:—(விண்ணேக்கிய வண்ணமே) உண்மையிலவன் வந்தனனே!

அநு:—(முன்தோன்றி அனைவரையும் விலக்கி அனலையும் அவித்துக் கரியாக்கி) மூவரும் வந்தனர். உறுதிமொழி தவறாத உத்தமன் வந்தனன். அரக்கன் முடிபத்தையும் உதிர்த்தவன் வந்தனன், விரலாழி தந்தனன்.

[மோதிரம் தருகிறன்.]

பர:—(மோதிரத்தைக் கண்ணிலொற்றிக்கொண்டு அதைநோக்கி) செந்தணல் மூழ்கியாம் வெந்திடாவண்ணமே முந்தி நீ வந்தனையோ? (அநுமானை விளித்து) அஞ்சனைச் சிங்கமே! ஆண்டுகள் பதினான்கும் கழிந்தன. அண்ணலின் [2] எண்ணந்தான் என்னே?

அநு:—நின் [3] எண்ணம் தவறு.

பர.—தவறு? வள்ளலின் வரவை அநுதினமும் எண்ணிய என்னெண்ணம் தவறு? தவறுயின், தலையறப்புண்டும் சாவேன்; சத்தியம் காண்மின். சோதிக்க எண்ணினனே? வாதிக்க வந்தனையோ?

அநு:—எண்ணிய நாழிகை நாற்பதும் இன்னும் கழிந்திட நின்றுளது.

பர:—தடையாய்து அதுவேயோ?

அநு:—பொருசமர்முடியவும், முடியினைச்சூடிய வீடணனளித்த விமானமேறி விரைந்து வருவழியில் தவத்துள பரத்துவர் அவர்க்கு விருந்தளிக்க விரும்பினர். ஆதலின், நாளை வந்து உங்களை மகிழ்விப்பர்.

பர:—அநுமானே' குணவானே! கனவானே! செம்மையால் [4] உயிர்

---

(1) உண்மையாக : உண்மையில்லாத.
(2) நினைவு.
(3) கணக்கு.
(4) என்னுயிர் : உயிராகிய இராமன்.

தந்தாய், செய்யும் செயலறியேன்! என் [1] மெய்யும் உன் வயமே. [இருவரும் தழுவிக்கொள்ளுகிறார்கள்.]

பர:—(ஆனந்த வாரிதியில் மூழ்கி) வந்தார்! வந்தார்! அருளாளர் ஆள வந்தார்! [2] அத்திகிரிப் பெருமாள் வந்தார். சத்திய விரதர் வந்தார். முத்திமழைபொழியு முகில்வண்ணர் வந்தார். இணையடிக் கீழ் வைத்தடிமைக் கொள்வார் வந்தார். [3] இளையவர்கட் கருளுடைய இறைவர் வந்தார். இனி பாரிலுள்ள பாவமெல்லாம், தூறுகள் பாய்ந்திடும். பொறியில் வாழ் நரகமெல்லாம் புல்லெழுந் தொழியும். நலமுறுவோம். [4] நற்பதம் பெறுவோம். வள்ளலை யெதிர்கொள விரைவினிற் செல்லுவோம். வாரீர். பாரீர் பரமனை.

[எல்லோரும் போகிறார்கள்.]

3ம் களம் முற்றிற்று.

களம் 4

இடம்:—அயோத்திமன்னன் அரண்மனைக்கடுத்த வீதி.

பாத்திரங்கள்—இராமனும் அநுசரும் அநுமனும் குகனும், வீடணனும், மறையவரும் அமைச்சரும், மற்றும் வானரவீரரும் நகரவாசிகளும் பிரவேசம்.

[அன்னையர் அரண்மனையினின்றும் வெளிவர அவர்களைக் கண்டதும் இராமன்விரைந் தோடி யடிபணிந்து, தேவி கைகேயியை நோக்கி.]

இரா:—தாயே! தயாநிலையே! தரணியில் உய்ந்தேன் உம் திருவருளால். உமது கருணையே காரணமாய், ஐயன் மெய்யன்பும், நும்மைந்தன் பாமகிமையும், அருந்திறல் அநுமந்

(1) உடலும் : மெய்யனுகிய இராமனும்.
(2) ஆழியேந்தியபிரான் : யானைபோன்ற மலையாளன்.
(3) பரதனுக்கும், சுக்கிரீவனுக்கும், விபீஷணனுக்கும்-
(4) நல்லஸ்திதி : பரமபதம்.

தன் ஆற்றலும், புகலரிய குரக்கரசர் நட்பும், சௌமித்திரி பத்தியும், சீதையின் சத்தியமும், எனது மெய்வலியும், வேடுவர் தலைவன் ஈடிலா நேயமும், பரிவுடன் உம் மகனடிசூடிய கடையனின் பெருமையும், மற்றும் அறிவரியயாவையும் அறியப் பெற்றேன். நும் பொற்கழல் போற்றினேன்.

[கைகேயி இராமனையும், கோசலை சானகியையும், சுமித்திரை இலக்குவனையும் தழுவியகமகிழ.]

பரத்:—அண்ணா! மன்னா! மண்ணாள எண்ணுவாய். எந்நாளும் ஆளுவாய்,

அநு:—என்னையும் ஆளுவாய். [1] என்னாளும் எண்ணியருள்.

இரா:—[2] எண்ணற்கரியாய்!

"எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்றமகற்கு."

—திருக்குறள்.

மேதினியில் உன் போல் ஏது துணை? தூது போய் என் தேவியை எனக்களித்தனை. [3] என்னையுனக் களித்தனன்.

[அநுமனைத் தழுவுகிறார்.]

பரத:—யாவரையுங் காத்தருளிய மாருதியே! அடிமையும் உன்னடிமையே.

[அடிபணியும் பரதனையெடுத்துத் தழுவிக்கொள்கிறான்.]

இல:—"அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாறாக ஆரியர்க்காக வேகி
அஞ்சிலேயொன்று பெற்ற வணங்கை கண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்று வைத்தான் அவனெம்மை யளித்துக்
காப்பான்."

—கம்பர்.

---

(1) என்னாளும்—என்நாளும்—இறைவனை நினையாத நாளெல்லாம் நாளல்லவாதலால் நன்னாளாக நினைவாய். என் ஆளும்—என் கைங்கர்யத்தையும் அங்கீகரிப்பாய்

(2) ஆஞ்சநேயன் சிரஞ்சீவி.

(3) என்னை யாது உனக்களித்தனன்? என்னையே உனக்களித்தனன்.

இரா:—புகழ்குலமழியா துதவிய துணைவ! வாளுள வேண்டினும் நீ யாளத்தருவன்.

குக:—காடாள வோணுன்னுக் கட்டாயம் தந்திடுவேன்.

அநு:—ரகுவீர! ரணதீர! மங்களகர! மஹாசூர! சாதுஜன சம்ரக்ஷக! சர்வலோக சரண்ய! சகலபாப நிவாரண!

“ஒன்றுண்டு செங்கண்மால் யானுரைப்பது—உன்னடியார்க்கு
என்செய்வனென்றே யிருத்தி நீ—நின்புகழில்
வைகுந்தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு
வைகுந்த மென்றருளும் வான்.”

—நம்மாழ்வார்.

இராமா! ஸ்ரீராமா! பரந்தாமா! பாவனநாமா! நின் ஈரெழுத்தும் ஒருபதமும் இனிதிருக்க, வேறு[1] பதமொன்றும் அறியேன்.

“நன்மையுஞ் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்துதேயுமே
சன்மமுமரணமுமின்றித்தீருமே
இம்மையே யிராமவென்றெழுத்திரண்டினால்.”

—கம்பர்.

புண்ணிய! புழுவாய்ப் பிறக்கினும் உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரம்தர வேண்டுவன்

[அடிபணிகிறுன்.]

இரா:—வாயுதனையா! என்னினைவு உன்னைவிட் டணுவளவும் அகலாது.

பர:—குலகுருவே! மலர்மகளோடு நிலமகளையும் குலமுதலோடு சேர்த்திடுவீர். மணி முடி சூடி மாமணி மண்டபத்துள் மலராதனத்தமர்த்துவீர். இளைஞர் இருவரும் இறைவன் இருபுறமும் கவரிவீசிக் களிப்படைவர். உற்றபணி பெற்றிட யான் கொற்றவெண் குடைபிடிப்பேன்.

அநு:—பீதமலரின் மதுவருந்தி பேரின்பம் அடைந்திடுவேன்.

---

(1) சொல்; இடம்.

குக:—சாமியும் தேவியும் [1] சேந்து சேவெதந்தா, சாவில்லாமெ சேவெ.பண்ணலாம்.

வசி:—குமார ! சுகுமார ! ஜனோபகார ! ஜானகீமனோகர ! தாழ்சடைகளைந்து நீண்முடிபுனைந்து, ஆயிரத்தாண்டுகள் அவனியையாண்டு அனைவரும் அரும் [2] பதம் அடைந்திட உகந்திடு.

இரா:—மறையவர் திருவே! மண்ணுளும் ஆக்கமெனக் கென்நாளும் ஆக்குவிரேல், மறையாளர் ஆதரவை ஆதாரம் ஆக்குவீர். கேகயச் செல்வனையும் இளவரசன் ஆக்குவீர்.

வசி:—" சற்பத்துறங்கு மரங்காவுன் பாதந்தனை யடைந்த
நற்பத்தருக் கொரு நாசமுண்டோ நலமா மருத்தின்
வெற்பைக்கொணர்ந்த விறலனுமானுமவ் வீடணனும்
கற்பத்தளவு மழியாதிருக்கவுங் கற்பித்தையே. "

[திருவரங்கத்துமாலை.]

வசி:— ஜகதாதார ! பரமோதார ! மநுநெறிமுறைப்படியே [3] முடிப்பன். மக்களே! மகிழ்வுற வருவீர்.

[எல்லோரும் போகிறார்கள்.]

களம் 4 முற்றிற்று.

---

(1) சேர்க்கும் திருமாலின் சேர்த்தியில் ஸேவை செய்வதே சேதனனுக்குப் புருஷார்த்தம்.

(2) பதம்:—திருவடி; பரமபதம்.

(3) பூர்த்திசெய்வேன்; முடிசூட்டுவேன்.

களம் 5

இடம்:—அயோத்தியாபுரியில் பட்டாபிஷேகமண்டபம்.
பாத்திரங்கள்:—இராமனும் சீதையும் அநுசரும் அன்னையரும் ஆசிரியரும் அமைச்சரும் அநுமந்தனும் குகனும் மற்றும் நகரவாசிகளும் வானரவீரரும்.

[இராமன் பீதாம்பரமுடுத்து மகரகுண்டலமணிகள் அணிந்து, நீண்முடிசூடி சானகியுடன் பொன்னணி மண்டபத்தில் புஷ்பகமாசனத்தில் வீற்றிருக்க, பரதன் வெண்கொற்றக் குடைபிடிக்க இலக்குவனும் சத்துருக்கனும் இருபுறமும் கவரிவீச அநுமந்தன் அடிதாங்க, மறையவர்வாழ்த்த மற்றவர்போற்ற, வானவர் மலர்மாரி பொழிய, பட்டாபிஷேக மகோத்ஸவம் நடைபெறுகிறது.

அனைவரும்:—வாழி! வாழி! ரகுராமன் வாழி! சீதாராமன் வாழி! நீடூழிவாழி!

"திருவாழி சங்கு திருவாழி வாழி சிறந்தகொண்ட
லுருவாழி யோகத்திருந்துயில் வாழி யுலகளந்த
மருவார் மதுமலர்த்தாள்வாழி வாழி வணங்குமன்பர்
பெருவாழ்வனைய பெருமாளரங்கப் பெருஞ்செல்வமே."

[திருவரங்கத்துமாலை.]

மங்களம்.

"கருமாமுகிலுருவா கனலுருவா புனலுருவா
பெருமாள்வரையுருவா பிறையுருவா நினைந்துருவா
திருமாமகளுருவுஞ் சிறுபுலியூர் ஜலசயனு
அருமாகடலமுதே யுனதடியேன் சரணமே"

[திருமங்கைமன்னன்.]

களம் 5 முற்றிற்று

மங்களம்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
6	9	மெய்யன	மெய்யென.
29	27	றியம்பினள் அரசென்றாள்	றிபம்பினன் அரசனென்றாள்.
41	28	மாகமளே	மாமகளே.
66	22	எனாதற்றல்	எனதாற்றல்.
71	17	நினைந்திலேயோ	நனைந்திலேயோ.
85	24	இண்டினையும்	இரண்டினையும்.
104	19	திருமள்	திருமகள்.